# முசோலினி



டாக்டர் மா. இராசமாணிக்கனார்

முல்லை
பதிப்பகம்

# முசோலினி

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

முல்லை
பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு, சென்னை 40
செல் : 9840358301
e-mail: mullaipathipagam@yahoo.com

## நூல் விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | முசோலினி |
| நூலாசிரியர் | : | **டாக்டர் மா. இராசமாணிக்கனார்** |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | வாழ்க்கை வரலாறு |
| பதிப்பு | : | ஜுன் 2014 |
| தாள் | : | 11.6 கி.கி. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18.5 செ.மீ. x 12.5 செ.மீ. |
| எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 140 |
| விலை | : | ₹ 55/- |
| நூல் வெளியீடு | : | **முல்லை பதிப்பகம்**<br>323/10, கதிரவன் காலனி,<br>அண்ணாநகர் மேற்கு,<br>சென்னை - 40<br>செல்: 9840358301<br>e-mail: mullaipathipagam@yahoo.com |
| அச்சிட்டோர் | : | **பாரதி பிரிண்டர்ஸ்**<br>சென்னை-600005 |
| கணினி அச்சு | : | **ஆனந்தி கணினியகம்**<br>சென்னை-68<br>9884333630 |

# அறிவிப்பு

இச்சிறிய நூல், ஏழைக் கொல்லரின் மகனான முசோலினி, வாழ்க்கையில் தமக்குண்டான பலவகை இன்னல்களைக் கடந்து, முடிவில் எங்ஙனம் உலகிற் சிறந்த இராச தந்திரியாராக மாறினார் என்பதை இனிய எளிய தமிழ் நடையில் இயம்புவதாகும். இவரது வாழ்க்கை வரலாற்றையும் இவர் அடைந்த வெற்றிகளையும் நம் நாட்டு இளைஞர் நுனித்தறிந்து, நாட்டுப்பற்று நனி சிறப்ப, உண்மை இந்திய மக்களாக மாற வேண்டுமென்பதே எனது பெருவிருப்பம்.

1934 **மா. இராசமாணிக்கம்**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இளமைப் பருவம் | 5 |
| 2. | அயல் நாடுகளின் அனுபவம் | 11 |
| 3. | போர் வீரர் ஆதல் | 14 |
| 4. | பத்திரிகைத் தொழில் | 17 |
| 5. | ஐரோப்பியப் பெரும்போர் | 20 |
| 6. | உள் நாட்டுக் குழப்பங்கள் | 26 |
| 7. | பாஸிஸ்டு இயக்கம் | 32 |
| 8. | பாஸிஸ்டு இயக்க வெற்றி | 39 |
| 9. | அரசியல் சீர்திருத்தங்கள் – 1 | 44 |
| 10. | சீர்திருத்தங்கள் – 2 | 49 |
| 11. | சீர்திருத்தங்கள் – 3 | 61 |
| 12. | கைத்தொழிலும் இரயில்வே நிருவாகமும் | 71 |
| 13. | விவசாயம் | 78 |
| 14. | கலைப் பெருக்கம் | 83 |
| 15. | மக்கட் பெருக்கம் | 91 |
| 16. | பின்னர் செய்த சீர்திருத்தங்கள் | 98 |
| 17. | அரிய சொற்பொழிவுகள் | 110 |
| 18. | அயல் நாட்டார் அபிப்பிராயங்கள் | 123 |
| 19. | இல்வாழ்க்கை | 131 |
| 20. | குணாதிசியங்கள் | 137 |

# முசோலினி

## 1. இளமைப் பருவம்

ஐரோப்பியப் பெரும்போருக்கு முன் முடியரசாக இருந்த ஐரோப்பிய நாடுகள் பல, அப்போருக்குப் பின் குடியரசு நாடுகளாக மாறிவிட்டன. அங்ஙனம் மாறிய நாடுகள் போலண்டு, ஜெர்மனி, ருஷியா, இத்தாலி, ஆஸ்ட்ரியா, டர்க்கி முதலியன. இந்நாடுகளில் இத்தாலியே முதன் முதல் சர்வாதிகார ஆட்சியை ஏற்றுக்கொண்ட நாடு. அரசியல்காரியங்கள் யாவற்றையும் ஒருவரே முழு அதிகாரத்துடன் நடத்துவது சர்வாதிகார ஆட்சி எனப்படும். இன்று இத்தாலியில் சர்வாதிகார ஆட்சி நடத்துபவர் சீனர் பெனிட்டோ முசோலினி என்பவர்.

முசோலினி ஓர் ஏழைக் கொல்லரின் புத்திரராக இருந்தும், தம் இடைவிடா ஊக்கத்தாலும், உழைப்பாலும், நாட்டுப் பற்றாலும், அஞ்சாமையாலும் இத்தாலியை மிகவும் கேவலமான உள்நாட்டுக் குழப்பங்களால் அல்லலுற்றுத் தவித்த இத்தாலியை அதன் அரசுரிமையை ஏற்று, மிகவுயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்; இன்றும் கொண்டு வருகின்றார். இன்றைய உலகில் இத்தாலி ஐரோப்பிய நாடுகளில் தலைசிறந்து விளங்குவதற்குக்

காரணராயிருப்பவர் முசோலினியே என்றால், இவருடைய வாழ்க்கை வரலாறும், வெற்றியின் இரகசியமும், அரசியல் தந்திரமும், ஆட்சி முறையும் பற்றி அறிய ஒவ்வொருவரும் அவாவுதல் இயல்பே அன்றோ?

முசோலினியின் முன்னோர்கள் இத்தாலியில் பலோனா நகரில் சிறப்புடன் வாழ்ந்து வந்தவர்கள். இவர் பாட்டனார் இத்தாலிப் படையில் ஓர் உயர்தர உத்தியோகஸ்தராக இருந்தவர். முசோலினியின் தந்தையார் கொல்லத் தொழில் செய்து வந்தார். அவர் பெயர் அலெஸ்ஸாண்ட்ரோ முசோலினி என்பது. அவர் கொல்லராக இருந்தும், அரசியல் நிபுணராக விளங்கினார். அவர் இதயம் முழுவதும் சீர்திருத்தக் கொள்கைகளே நிறைந்திருந்தன. அவற்றைப் பற்றி அவர் தம் நண்பர்களோடு பேசிய போதெல்லாம் அவர் கண்கள் சுடர் விட்டுப் பிரகாசித்தன. சர்வதேச நன்மையை விரும்பியவர்களுள் அவரும் ஒருவர். அவரது அரசியல் அறிவே முசோலினியைச் சிறந்த ஓர் அரசியல் நிபுணராக மாற்றியதென்னலாம்.

இத்தாலியின் வடகிழக்கில் பிரிடாப்பியோ பிரதேசத்தில் டோவியா என்னும் கிராமம் ஒன்று உண்டு. அதற்கருகேயுள்ள குன்றின் மீது ஒரு சிறு விடுதியில் கி.பி. 1883ஆம் ஆண்டு ஜூலை மாதம், 29ஆம் தேதி, ஞாயிற்றுக் கிழமைப் பகல் இரண்டு மணிக்கு இத்தாலியின் இரட்சகர் தோன்றினார்.

தமது குழந்தைப் பருவத்தில் முசோலினி பிற குழந்தைகளைப் போலவே தமது வீட்டுக்கு அருகே உள்ள இடங்களில் விளையாடினார்; தம் சகோதரர் அர்நால்டோ என்பவருடன் சிறிய ஓடையின் நீரோட்டத்தைத் தடுக்க அணை கட்டி, நீரை வேறு புறமாகத் திருப்பி



முசோலினி

விளையாடினார். இவர் இங்ஙனம் செய்தது, தாம் பிற்காலத்தில் இத்தாலியின் அரசியல் நாடியை அதன் பழைய போக்கினின்றும் வேறு வழியில் திருப்ப நேர்ந்தமைக்கு அமைந்த பயிற்சியே போலும்.

முசோலினியின் இளமைப் பருவம் இனிதாகவே கழிந்தது. "நான் இளைஞனாக இருந்தபோது மன அமைதி அற்றவனாகவே இருந்ததாக நம்புகிறேன்" என்று ஒரு முறை முசோலினி கூறினர். இக்கூற்றிலிருந்து இவர் மனவமைதி அற்றிருந்தது இவரது பிற்கால உயர்வுக்கும் இத்தாலியின் நலத்துக்குமே என்பது இப்பொழுது வெளியாகின்றது. இவரைப் போலவே பலபெருமக்கள் தங்கள் இளமைப் பருவத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். உற்ற வயதில் உயர்வைப் பெறுதற்குரிய வழிகளை அப்பெரியோர்கள் அறியாமலே அவர்கள் மனமும் சிறு பிராயத்திலிருந்தே அமைதியற்று வேலை செய்து கொண்டிருந்தது என்பதே இதனால் நாம் அறியக் கிடப்பது.

முசோலினி தம் தாயாரிடம் மிகுந்த அன்பு டையவர். அவ்வம்மையார் பெயர் ரோசா என்பது. அவர் முசோலினியைத் தம் உயிரெனக் கருதிப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தார்; முதலில் முசோலினிக்கு ஆரம்பக் கல்வியும் கற்பித்தார். முசோலினி தம் தாயாரிடம் கொண்ட கரை கடந்த பற்றே அவரது தாய் நாட்டுப் பற்றுக்கு அடிகோலிய தென்னலாம்.

தம் தாயாரிடம் கல்வி கற்ற பின்னர், முசோலினி பிரிடாப்பியோவில் இருந்த ஆரம்பப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பட்டார் முசோலினி அப் பள்ளிக்கூடத்திற்கும் தமது வீட்டுக்கும் இடையே இருந்த இரண்டு மைல் தூரத்தையும் தினந்தோறும் நடந்தே கழித்து வந்தார். வழியில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் இவரைப் பரிகாசம்

செய்ததுண்டு. எனினும், இவர் அதைப் பற்றித் தம் அன்னையாரிடம் ஒரு வார்த்தையும் கூறியதில்லை; ஏன்? தம் அருமை மைந்தர் பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளால் துன்பத்துக்குள்ளானார் என அவர் வருந்துவாரென இவர் அஞ்சினார். பிள்ளைகள் செய்து வந்த துன்பங்களை முசோலினி மனக் களிப்போடு ஏற்று வந்தாரே அன்றி, அவர்களைத் தாக்கவும் இல்லை; அவர்கள் செய்தவற்றைப் பற்றி ஆசிரியரிடமோ பெற்றோரிடமோ கூறவும் இல்லை.

ஆரம்பக் கல்வி முற்றுப் பெற்றதும், முசோலினி பயன்சா என்னும் இடத்தில் இருந்த உயர்தரக் கலாசாலைக்கு அனுப்பப்பட்டார். அக்கலாசாலை, மாணவர் உணவுண்டு தங்கியிருக்கத் தக்க வசதி வாய்ந்தது. ஆதலால், முசோலினி அதிலேயே தங்கிக் கல்வி கற்று வந்தார். இவர் அக்கலாசாலையிலேதான் ஒழுங்கு முறை, காலந் தவறாமை முதலிய உயர்ந்த குணங்களைத் திறம்படப் பெற்றார். கலாசாலை வாழ்க்கையில் இவர் அருகில் உள்ள பட்டணங்களை விடுமுறை நாட்களில் சென்று கண்டு வந்தார்; தம் தாயாருடன் அழகிய மலைச் சாரலை அடுத்த பல நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் சென்று வந்தார். இயற்கையழகு வாய்ந்த மலைகளின் தோற்றமும், மலைச் சாரல்களின் தோற்றமும், பிறவும் இவருக்குத் தாய் நாட்டுப் பற்றை உண்டாக்கின.

கலாசாலைக் கல்வி முடிந்ததும் முசோலினி தம் தந்தையாருடன் கொல்ல வேலை பார்த்து வந்ததும் அன்றித் தந்தையார் பேசி வந்த அரசியல் விஷயங்களிலும் கவனஞ் செலுத்தலானார். தந்தையார் தம் நண்பர்களுடன் அரசியல் சம்பந்தமானவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில், இளைஞரான முசோலினி அருகேயிருந்து அவற்றைக் கருத்துடன் கேட்டு, அவற்றைப் பற்றிச் சிந்தித்து வந்தார்.

முதலாளிகள் தொழிலாளிகளை வருத்தி வேலை வாங்கிக் குறைந்த கூலி தருவதையும், தொழிலாளிகள் வேறு வழியின்றி முணுமுணுத்துக் கொண்டே வேலை செய்து குறைந்த கூலியைப் பெறுவதையும், அரசாங்கம் குடிகளின் நன்மைகளைக் கருதாமல் தன் மனம் போனவாறு ஆட்சி புரிவதையும் பற்றித் தம் தந்தையாரும் அவர் நண்பர்களும் பேசிக் கொண்டிருக்கையில், முசோலினியின் மனம் யோசனையில் ஆழ்ந்து கிடக்கும்; கண்கள் ஒளி விட்டுப் பிரகாசிக்கும். இவர், "இக்கொடுமைகளை நாட்டினின்றும் எவ்வாறு போக்குவது!" என்று தமக்குள் சிந்தித்து வந்தார்.

முசோலினி ஆசிரியத் தொழில் தேர்ச்சிக்காக ஒரு போதனா முறை பயில் பள்ளியில் சேர்க்கப்பட்டு, ஆறு ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற்றார்; பட்டம் பெற்ற பின்னர், ஆசிரியர் வேலைக்காகப் பல இடங்களில் அலைந்து திரிந்து, முடிவில் ஒரு பள்ளியில் ஆசிரியரானார்.

# 2. அயல்நாடுகளின் அனுபவம்

முசோலினி ஓர் ஆண்டு ஆசிரியராக இருந்தார். இவர் ஆசிரியராக இருந்தபோது ஒரு முறை, 'முயற்சியால் முடியாதது இல்லை' என்னும் பொருள் பற்றிப் பேசினார். அதைக்கேட்ட அப்பள்ளியின் ஆசிரியர் யாவரும் இவர்பால் பேரன்பும் பெருமதிப்புங் கொண்டனர். 'முயற்சியால் முடியாதது இல்லை' என்பதை இவரே பின்னர்ச் சில வருடங்களுள் மெய்ப்பித்துக் காட்டினர் அல்லவா? மிகவும் பழைய நாகரிகம் வாய்ந்துள்ள இத்தாலி நாட்டுச் சர்வாதிகாரியாக வருவதென்றால், முயற்சியின்றி முடியுமா?

பள்ளிக்கூட விடுமுறையில் இவர் தமது ஊர்க்குச் செல்ல விரும்பவில்லை; இத்தாலிக்கு வடக்கேயுள்ள நாடுகளைக் காண அவாக் கொண்டார்; கையிற் காசில்லாமையையும் பொருட்படுத்தாமல், இத்தாலியின் எல்லையைக் கடந்து, சுவிட்ஜர்லாண்டு சென்றார். சுவிட்ஜர்லாண்டு அழகிய நாடு; மலைவளஞ் செறிந்தது; இயற்கைத் தாயின் திருமுகம் எனத் திகழ்வது. அந்நாட்டில் பல இடங்களைச் சுற்றிப் பார்க்கையில் இவர் அடைந்த இன்னல்கள் பல. எனினும், இவர் அவற்றை மலர் முகத்தோடு வரவேற்று, அவற்றால் பல படிப்பினைகளைக் கற்றுக் கொண்டார்; வாழ்க்கையில் நேரும் துன்பங்கள் அவையென உணர்ந்தார். அவைகளே அவரது

வாழ்க்கையை உறுதிப்படுத்தியவை. "நான் பட்ட துன்பங்கள் என் வாழ்க்கையை நல்வழியில் மக்களுக்குப் பயன்படுத்தும்படி செய்தன. அவை ஏற்படாவிடின், எனது வாழ்வு இன்றைய சர்வாதிகார வாழ்வாயிருந்திராது!" என முசோலினி தாம் அடைந்த இன்னல்களைப் பற்றிப் புகழ்ந்து புகன்றுள்ளார்.

ஒரு நாட்டை நன்னிலைக்குக் கொண்டு வரவோ, உலகத்தை நல்வழிக்குக் கொண்டு வரவோ முற்படும் தலைவர்கள் இத்தகைய இன்னல்களை அடைந்தே தீருவார்கள். உலகத்தை உய்விக்கத் தோன்றிய நாசரேத்தார் அடிகள் (Jesus Christ) அடைந்த இன்னல் கணக்கிலடங்குமோ? நபி நாயகம் அடைந்த துன்பங்கள் எண்ணற்கரியன அல்லவா? நெப்போலியன், ஜார்ஜ் வாஷிங்டன் முதலான அரசியல் நிபுணர்கள் அடைந்த துன்பங்கள் சிலவோ? இது நிற்க.

கையிற் காசின்றித் தவித்த முசோலினி, சுவிட்ஜர்லாண்டில் ஒரு கொத்தராக (Mason) வேலை பார்த்தார். சில நூல்களை இத்தாலி மொழியிலிருந்து பிரஞ்சு மொழியிலும், சில நூல்களைப் பிரெஞ்சு மொழியிலிருந்து இத்தாலி மொழியிலும் மொழிபெயர்த்தார். சுருங்கக் கூறின், இவர் சோற்றுக்கு வேலை செய்தார் என்னலாம்; பல நாட்கள் பட்டினியும் கிடந்தார்; எனினும், எவரையும் அண்மி இரந்தாரில்லை. இங்ஙனம் எளிய நிலையில் இருந்த போதும் இவர் பொது நிலைக் கழகங்கட்குச் சென்று. பத்திரிகைகளையும் அரசியல் சம்பந்தமான நூல்களையும் விடாமற் படித்து வந்தார்; பொருளாதார சாஸ்திரத்தைப் படித்து நிபுணர் ஆனார். சுவிட்ஜர்லாண்டில் பல மேடைகளில் அரசியல் சம்பந்தமான சொற்பொழிவுகள் ஆற்றினார்; அச்சொற்

பொழிவுகள் சுவிட்ஜர்லாண்டு அரசாங்கத்துக்கு வெறுப்பை உண்டாக்கினமையின், இவர் அந்நாட்டினின்றும் வெளியேற்றப்பட்டார்.


முசோலினி அங்கிருந்து பிரான்சுக்குச் சென்றார்; அங்கு நடந்த வேலைநிறுத்தம் ஒன்றில் கலந்து கொண்டு சொற்பொழிவு செய்தார். இதனை அறிந்த பிரஞ்சு அதிகாரிகள் இவரைப் பிரான்சினின்றும் வெளியேற்றி னார்கள். பின்னர் இவர் ஜுரிச்சு என்னும் இடத்திற் சிறிது காலம் தங்கியிருந்து, தாய்நாடு மீண்டார்.

# 3. போர் வீரர் ஆதல்

**தா**ய் நாடு மீண்ட முசோலினி இத்தாலிப் படையிற் சேர்ந்தார். இவர் சேர்ந்த படை, ஒழுங்குக்கும் வீரத்துக்கும் பெயர் பெற்றது. முசோலினி போர் வீர வாழ்க்கையைப் பெரிதும் விரும்பினார்; மேலதிகாரிகட்கு அடங்கிப் போர்ப் பயிற்சியில் சிறப்புறத் தேர்ந்தார். இவரது போர் வீரத்தைக் கண்ணுற்ற அதிகாரிகள் இவர்பால் பெருவிருப்பங் காட்டினார்கள். இவர் போர் வீரராக இருந்துகொண்டே ஒவ்வொரு மேலதிகாரியின் கடமைகளையும் நன்கறிந்தார்; பகைவர் படையைத் தாக்கற்கான விதமும் போர் செய்யும் விதமும் எளிதில் உணர்ந்தார்; படையை வைத்து நடத்தும் முறைமையையும், படையினது அவசியத்தையும் அறிந்தார்.

முசோலினி படையிலேயே இருந்திருப்பின், சிறந்த படையதிகாரியாக உயர்ந்திருக்கலாம். ஆனால், கேவலம் படையதிகாரியாக அவரை மாற்ற இறைவர் விரும்ப வில்லை. இத்தாலி நாட்டு இரட்சகராகவன்றோ இறைவர் முசோலினியைப் படைத்தார்?

முசோலினி போர் வீரராக இருக்கையில், ஒரு நாள் அவர் தந்தையாரிடமிருந்து தந்தி ஒன்று வந்தது. அதில், அவர் ஆருயிர் அன்னையர் இறக்குந் தறுவாயில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அன்னையார் மீது அளவற்ற பற்றுக்கொண்ட முசோலினி, தந்தியைப் படித்ததும் இடியேறுண்ட நாகம் போலக் குலைகுலைந்து, அதிகாரிகளிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்; ஊரை



அடைந்தார்; மரணத் தறுவாயில் இருந்த தம் தாயாரைக் கண்டார் அவ்வம்மையார் தம் ஆருயிரனைய மைந்தரை அகமும் முகமும் மலரப் பார்த்தார்; கண்களை மூடினார். அவ்வளவே! அக்கண்கள் மீண்டும் ஒருமுறையேனும் திறந்தில.

அஞ்சா நெஞ்சம் படைத்த முசோலினி தம்மை ஈன்ற தாயார் இறந்ததைக் கண்டு வருந்தினார். இவருடைய அறிவும், ஆற்றலும், மதப் பற்றும், பிறவும் இவரது பெருந் துன்பத்தைத் தணிக்க வகையறியாது தவித்தன. முசோலினியின் உற்றாரும் உறவினரும் பிறரும் பலவகையாக ஆறுதல் கூறியும், இவரது வருத்தம் தணிந்திலது. 'உலகத்தில் தாயாரினும் சிறந்த பொருள் ஒன்றில்லை' என்னும் முடிவான எண்ணங் கொண்ட முசோலினிக்குத் தாயார் மரணத்தால் ஏற்பட்ட துன்பம் துடைத்தற்கெளிதோ!

" 'இவன் ஒரு காலத்தில் உலகத்தார் வியக்குமாறு மிகவும் பெரியவன் ஆவான்' என்று என்னருமைத் தாயார் அடிக்கடி கூறியதுண்டு. அவர் மொழி மெய்யானதைக் காண இப்பொழுது அவர் இல்லையே!" என்று முசோலினி தாம் சர்வாதிகாரியான பின்னர்க் கூறி வருந்தினார்.

அன்னையார் பிரிவால் ஏற்பட்ட வருத்தத்தை ஒருவாறு ஆற்றிக்கொண்டு, முசோலினி படையிற் சேர்ந்தார். போர் வீரர்க்குரிய பயிற்சியும் முற்றுப் பெற்றது. பின்னர், இவர் மறுபடியும் பள்ளிக்கூட ஆசிரியர் ஆனார்.

# 4. பத்திரிகைத் தொழில்

முசோலினி ஆஸ்ட்ரியாவில் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தபோது பொபோலோ (Popolo) என்னும் பத்திரிகை ஆசிரியர்க்கு நண்பரானார். பத்திரிகைத் தொழிலைப் பெரிதும் விரும்பினவர் ஆதலின், இவர் ஆசிரியர் பதவியை விட்டு, அப்பத்திரிகாசிரியருடன் டிரெண்டு (Trent) என்னும் நகருக்குச் சென்றார்; ஆஸ்ட்ரியாவின் எல்லை தவறாகக் குறிக்கப்பட்டிருந்ததாகப் பத்திரிகையில் குறிப்பிட்டுக் கண்டித்திருந்தார். அக்கட்டுரையைக் கண்டதும், ஆஸ்ட்ரியச் சர்க்காரார் இவரை ஆஸ்ட்ரியாவினின்றும் வெளியேறக் கட்டளை இட்டனர். அதனால், இவர் இத்தாலிக்குத் திரும்பினர். இவர் பத்திரிகாசிரியரோடு இருந்த காலத்தில் பல நூல்களை எழுதி வெளியிட்டார்; ஜெர்மன் மொழி, ஸ்பானிய மொழி, இந்தியக் கணக்கு முறை ஆகியவற்றைக் கற்றறிந்தார்.

இத்தாலி மீண்ட முசோலினி போர்லி (Forli) என்னும் நகரில் நடைபெற்று வந்த சம தருமப் பத்திரிகையின் ஆசிரியரானார். இவ்வேலையே இவரது வாழ்க்கையாகிய மாளிகைக்கு அழிக்க முடியாத அஸ்திவாரமாக அமைந்தது என்னலாம். உறங்கிக் கொண்டிருந்த இத்தாலி மக்களை உறக்கத்தினின்று எழுப்ப, இப்பத்திரிகையில் வீரம் ததும்பிய கட்டுரைகள் பலவற்றை முசோலினி எழுதினார். அக் கட்டுரைகளால் இத்தாலி மக்கள் புத்துயிர் பெற்றெழுந்தார்கள்.

1911ஆம் ஆண்டு முசோலினி தமது வலிமையை இத்தாலிய அரசாங்கத்தின்மீது காட்ட நேர்ந்தது. அரசாங்கம் ஒட்டாமன் ஏகாதிபத்தியத்தின் (Ottaman Empire) மீது படையெடுக்க முடிவு செய்தது. முசோலினி, அரசாங்கத்துக்கு மாறாகப் பத்திரிகையில் பின் வருமாறு வரைந்தார்: "இத்தாலியர்களுக்குப் பரந்த நிலப்பரப்பு வேண்டுவதில்லை; சிறிய நல் விளைச்சலையுடைய நிலப் பரப்பே வேண்டற்பாலது. நான் டென்மார்க்கின் குடிமகனாக இருக்க இசைவேனே அன்றிப் பரந்து கிடக்கும் சீனாவின் குடிமகனாக இருக்க இசையேன். ஒட்டாமன் ஏகாதிபத்தியத்தின்மீது நடத்தப்பெறும் போர் இத்தாலியர்க்கு எத்தகைய நன்மையுந் தராது."

இவ்வார்த்தைகள் இத்தாலியரைத் தூக்கத் தினின்றும் தட்டியெழுப்பின. அவர்கள் முசோலினியின் கொள்கையை ஆதரித்தார்கள்; அரசாங்கத்துக்கு மாறாகப் பிரசாரம் செய்தார்கள்; அவர்களை அடக்கப் படைகளை ஏவி, அரசாங்கம் அல்லலுற்றது. அப்பொழுதுதான் இத்தாலிய அரசாங்கம் முசோலினியை ஓராண்டு சிறைப்படுத்தியது. முசோலினி தண்டனை அடைந்ததை உணர்ந்த மக்கள் சில இடங்களில் கலகஞ் செய்தார்கள்.

ஓராண்டு கழிந்ததும், முசோலினி சிறையினின்றும் சிறந்த வீரராக வெளிப் போந்தார். இத்தாலிய மக்கள் இவரைக் களிப்போடு வரவேற்று, அவண்டி (Avanti) என்னும் சமதருமத் தினசரிப் பத்திரிகைக்குத் தலைவராக்கினார்கள்.

முசோலினி இச்சமயத்தில் தம் அருமைத் தந்தையாரை இழந்தார். இவர் தம்பியராகிய அர்னால்டோ உயர்தரக் கல்வி கற்று வந்தார். தங்கையரான எட்லிகா

என்பவர், அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த கணவர் ஒருவரை மணந்து, இன்புற்றுக் காலங் கழித்து வந்தார். இது நிற்க.

அவண்டிப் பத்திரிகை முசோலினியின் மேற்பார்வைக்கு வந்த சில மாதங்களுக்குள் இலட்சம் பேர் அதன் சந்தாதாரர் ஆயினர். அப்பத்திரிகையினால் முசோலினி சமதருமக் கட்சியில் சிறந்த வீரராக விளங்கினார். அத்தகைய உயர்ந்த நிலையிலும் இவர் மிக எளிய வாழ்க்கையை நேர்மையாக நடத்தி வந்தார். இவர்தம் ஆருயிர் மனைவியார் ரகேல் (Rachale) என்பவர். அவ்வம்மையார் தம் கணவரிடம் அளவிடற்கரிய பேரன்பும் பெருமதிப்புங் கொண்டவர். அவர் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது பேணி வந்தமையால், முசோலினிக்குத் தம் இல்லம் இன்பப் பூங்காவாக இலங்கியது.

முசோலினி சிறையில் இருந்த போது, இத்தாலி ஒட்டாமன் ஏகாதிபத்தியத்தைப் போரில் வென்றது. ஆயினும், அதனால் முசோலினி முன்னர்க் கூறியாங்கு, நாட்டுக்கு நன்மை உண்டாகவில்லை. எதிர்பார்த்ததற்கு மாறாக ஆயிரக்கணக்கான மக்களையும் பெருஞ் செல்வத்தையும் இத்தாலி இழக்க நேர்ந்தது. இதனால் இத்தாலியர் மன அமைதியின்றி அரசாங்கத்தாரிடம் வெறுப்புக் கொண்டனர்; ஆங்காங்குக் கலகம் விளைத்தனர். குடிகளை அடக்கி ஆளத் தக்க தலைவன் இல்லாமல், நாடு நிலை தடுமாறியது. இந்நிலை 1912ஆம் ஆண்டிலிருந்து 1914ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை இருந்தது. அப்பொழுதுதான் ஐரோப்பியப் பெரும் போர் தொடங்கியது.

# 5. ஐரோப்பியப் பெரும்போர்

இத்தாலி உள் நாட்டுக் குழப்பங்களால் நலிவுற்று இருந்த சமயம், ஐரோப்பியப் பெரும்போர் தலைகாட்டியது. அந்தப் போரில் பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம் முதலியவை ஒரு கட்சியாகவும், ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, ஹங்கேரி முதலானவை ஒரு கட்சியாகவும் இருந்து போர் புரிந்தன. அந்நிலையில் இத்தாலி எக்கட்சியோடு சேர்வதென்பதைப் பற்றிய கேள்வி இத்தாலியரிடையே எழுந்தது.

போருக்கு முன்னர் இத்தாலி, ஜெர்மனியுடனும் ஆஸ்ட்ரியாவுடனும், 'இம்மூன்று நாடுகளும் ஒன்றாக இருத்தல் வேண்டும்' என ஒப்பந்தஞ் செய்துகொண்டது. அவ்வொப்பந்தப்படி இத்தாலி, ஜெர்மனி ஆஸ்ட்ரியா ஆகிய இவற்றுடன் சேரும் என உலகம் எதிர்பார்த்தது. இத்தாலிய அரசாங்கம் எவருடனும் சேராமல், வாளா இருந்துவிடத் தீர்மானித்தது. அப்பொழுது இத்தாலியில் மூன்று கட்சிகள் ஏற்பட்டன; ஒன்று, ஒப்பந்தப்படி இத்தாலி ஜெர்மனியோடு சேரவேண்டும் என்பதை வற்புறுத்தி, மக்களிடைப் பிரசாரம் செய்தது; மற்றொன்று (சம தருமக் கட்சி), எவருடனும் சேராமல், வாளா இருந்துவிட வேண்டும் என்பதை ஆதரித்தது. மூன்றாவதாக இத்தாலி, ஜெர்மனிக்கு மாறாகப் பிரிட்டன் பிரான்சுடன் சேர்வதை ஆதரித்துப் பிரசாரம் செய்தது.

இம்மூன்றாம் கட்சியினர் அனைவரும் இளைஞர்; அஞ்சா நெஞ்சம் படைத்தவர்; இத்தாலி, பிரிட்டன் கூட்டாளிகளோடு சேர்வதால் நன்மை பெற இயலும் என்பதை நம்பியவர். அன்னார் கொள்கையை முசோலினி ஆதரித்தார்; அதனைத் தமது பத்திரிகையிலுஞ் சிறப்பாக வரைந்து, இத்தாலிய மக்களின் மனத்தை மாற்ற முயன்றார். இவரது மன மாற்றத்தைக் கண்ட சமதருமக் கட்சியினர் (போர் வேண்டா என்பதை ஆதரித்தவர்) தம் கட்சியினின்றும் இவரை நீக்கி விட்டனர்; அவண்டி என்னும் பத்திரிகாசிரியர் பதவியினின்றும் இவரை அகற்றி விட்டனர். எனினும், இவர் தம் கொள்கையை விட்டிலர். இவர், கேவலம் கட்சியின் பொருட்டுத் தமக்கு நல்லதெனத் தோன்றுவதை விட்டுக் கொடுப்பவர் அல்லர். ஆதலின், இவர் உடனே தம்மோடு சேர்ந்த இளைஞர்களின் பேருதவியால் வேறொரு 'பத்திரிகையை ஆரம்பித்தார்; அதற்குப் 'போபொலோடிஇத்தாலியர்' (Popolo d' Italia) என்னும் பெயர் இட்டார்.

அப்பத்திரிகை 1914ஆ நவம்பர்மீ 15உ தொடங்கப்பட்டது. அதுவே முசோலினியை ஒப்புயர்வற்ற வீரராக்கியது. அதன் வாயிலாக இவர் இத்தாலியரின் மனத்தைப் 'பிரிட்டனுடன் சேர்வதே சரி' என்பதை ஆதரிக்கும்படி மாற்றிவிட்டார். அவ்வமயத்திலேதான் இவர் தம்மை ஆதரித்து நின்ற இளைஞர்களை ஒன்று சேர்த்துத் தமது புதிய இயக்கத்துக்குப் பாஸிஸ்டு இயக்கம் (Fascist movement) எனப் பெயரிட்டார். இது நிற்க.

இத்தாலி அரசர், மந்திரி சபையைக் கூட்டி, இத்தாலி யாது செய்வதென்பதைத் தீர்மானிக்கும்படி கட்டளை இட்டார். அப்பொழுது பிரதம மந்திரியாராக இருந்த கயோலிட்டி என்பவர், 'இத்தாலி எவருடனும் சேராமல்'

வாளா இருத்தலே சிறந்தது என்றார். அரசர் உடனே அவரை வேலையினின்றும் நீக்கி, சலாண்ட்ரா என்பவருக்கு மந்திரி சபையை அமைக்கும் உரிமையை அளித்தார். இப்புதிய மந்திரிசபை, 'இத்தாலி, பிரிட்டன் கூட்டாளிகளோடு போரில் கலந்துகொள்வதே சிறந்தது', என்ற முசோலினியின் முடிவை ஆதரித்தது. அதன் பயனாக, 1915ஆம் மேமீ 15உ இத்தாலி ஜெர்மனிக்கு மாறாகப் போரில் கலந்து கொண்டது. இது முசோலினிக்குப் பெரிய வெற்றியே அன்றோ?

இத்தாலி போரில் கலந்து கொண்டவுடன், முசோலினி தாம் போர் வீரராக வருவதாகப் படை அதிகாரிகட்கு அறிவித்தார். படை அதிகாரிகள் முதலில் சம்மதிக்கவில்லை; ஆனால், பின்னர் இவரைப் படையில் சேர்த்துக் கொண் டார்கள். பாவம்! இவர் சேர்ந்த படை ஆஸ்ட்ரியாவுடன் போர் புரிய நேர்ந்தது; மண்ணில் குழிகளைத் தோண்டி, அக்குழிகளில் பதுங்கி இருந்து, சமயம் நோக்கிப் பகைவரைச் சுட வேண்டி இருந்தது. முசோலினி அவ்வேலையில் பல நாட்கள் பல மாதங்கள் பனியிலும் வெயிலிலும் மழையிலும் அடைந்த இன்னல்கள் அளவிடற்கரிய. ஆனால், அத்துன்பங்கள் முசோலினியைத் தளரச் செய்யவில்லை. இவர் அத்துன்பங்களை உற்சாகத்தோடு வரவேற்றுத் தாய் நாட்டு முன்னேற்றம் ஒன்றையே கருத்திற் கொண்டிருந்தார்; போரிற் சேர்ந்த சில மாதங்களுக்குள் போர் வீரர் பதவியினின்றும் உயர் பதவிக்கு மாற்றப்பட்டார்.

போர் முனையில் ஏற்பட்ட ஓய்வு நேரங்களில் முசோலினி போரைப் பற்றிய குறிப்புகளை வரைந்து, போரைத் தொடர்ந்து நடத்தப் பிரசாரம் செய்யுமாறு தமது பத்திரிகைக்கு எழுதி வந்தார். போர் இங்ஙனம் நடந்து கொண்டிருக்கையில், இத்தாலியில் சமதருமக் கட்சியினர் போருக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து வந்தனர்.

ஒருமுறை முசோலினி இருந்தவிடத்தில் வெடி விபத்து ஏற்பட்டு, நால்வர் உயிர் துறந்தனர். முசோலினி சொற்பக் காயம் பட்டு வைத்தியசாலைக்குச் செல்ல நேர்ந்தது. அவ்வமயம் இத்தாலி மன்னர் தமது வருத்தத்தை முசோலினிக்குத் தந்தி மூலமாக அறிவித்தார். உடம்பு குணப்பட்டதும், முசோலினி முன் போலப் போர் முனையில் முன்னணியில் நின்றார். 1917ஆ அக்டோபர்மீ இத்தாலிப் படை ஆஸ்ட்ரியப் படையால் தோற்கடிக்கப்பட்டது. இச்செய்தி இத்தாலியரைத் திடுக்கிடச் செய்தது. போர் வீரர் தளர்ந்தனர். அவ்வமயம் முசோலினி தமது பத்திரிகையின் வாயிலாக அப்போர் வீரர்க்கும் இத்தாலிய மக்கட்கும் புத்துணர்ச்சியை உண்டாக்கினார்; அவர்கள் உள்ளத்தில் அழுந்திக் கிடந்த தாய்நாட்டுப் பற்றையும் வீரத்தையும் வெளிக் கிளப்பினார். வீரர்கள் புத்துயிர் பெற்றார்கள்; அதன் பயனாக 1918ஆ அக்டோபர்மீ ஆஸ்ட்ரிய ஹங்கேரிப் படையை முற்றிலும் முறியடித்தனர். ஒரு காலத்தில் இத்தாலியின் எல்லைக்கு உட்பட்டிருந்தது பின்னர் ஆஸ்ட்ரிய ஆட்சிக்குட்பட்டிருந்த டிரெண்டோ என்னும் பிரதேசம், இவ்வெற்றியால் இத்தாலியர் கைப்பட்டது. இத்தாலியர் இழந்த தம் பிரதேசத்தை மீண்டும் பெற்றனர்.

இதனால் முசோலினி கொண்ட பெருமகிழ்ச்சி கூறுந் தரத்ததோ! இத்தாலிய மக்கள் கரை கடந்த களிப்பால் நடனம் புரிந்தார்கள். "இத்தாலியர் புத்துயிர் பெற்று விட்டனர்! அவர்கள் வீரம் பொருந்திய தங்கள் முன்னோர் களின் வீரத்தைப் பெற்று விளங்குகின்றார்கள்! நாட்டுப்பற்றொடு ஒளிர்கின்றார்கள்! இவ்வெற்றியால் இத்தாலி நன்னிலையைப் பெறும்!" என்று முசோலினி தமது பத்திரிகையில் வெளியிட்டார்.



ஹிட்லருடன் முசோலினி

நெடுங்காலமாக ஆஸ்ட்ரியர் ஆட்சிக்குட் பட்டிருந்த எல்லைப்புறப் பிரதேசத்தைக் கைப்பற்றி இத்தாலியைப் பெருக்குவதற்கே முசோலினி பிரிட்டன் கூட்டாளியோடு சேர்ந்தனரே அன்றி, வேறெக் காரணத்தாலும் அன்று. இழந்த தம் தாய் நாட்டுப் பிரதேசம் மீண்டும் தமது கைக்கு வரவேண்டும் என்பதே இவர் கண்ட கனவாகும். அக்கனவும் பலித்தது. இவர் தமது விருப்பத்தை நிறைவேற்றவே பிரிட்டனோடு சேர்ந்தாரே தவிர, பரோபகார எண்ணத்தை முன்னிட்டன்று என்பதை நாம் கருத்தில் இருத்துதல் வேண்டும். இதனால், முசோலினி தமது தாய் நாட்டின் மீது கொண்டுள்ள அளவிடற்கரிய பற்று இற்றென்பது இனிது விளங்கும்.

ஐரோப்பியப் பெரும்போர் முற்றுப் பெற்றது. 1919ஆ ஜூன் மீ ஜெர்மனியோடு ஒப்பந்தம் ஏற்பட்டது. இப்பெரும்போரில் ஆறு லட்சத்து ஐம்பத்திரண்டாயிரம்

இத்தாலியப் போர் வீரர்கள், இறந்தார்கள்; நான்கு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர் தம் உறுப்புகளை இழந்தனர்; பத்து லட்சம் பேர் படுகாயப்பட்டனர். ஆனால், இத்தாலி அடைந்த வெற்றியோ, பெரிதன்று. வெர்செய்ல்ஸ் என்னும் நகரில் நடந்த ஒப்பந்தத்தால் இத்தாலி போரில் வென்ற தனது பிரதேசத்தையும் இழந்தது. ஜாராப் பிரதேசம் ஒன்றே இத்தாலிக்குக் கிடைத்தது. ஒப்பந்தம் செய்துகொள்ளச் சென்ற இத்தாலிய மந்திரி சபையினர் சிறந்த அரசியல் நிபுணர் அல்லர். ஆதலின், இத்தாலிக்குப் பெரு நன்மை உண்டாகவில்லை. எனினும், இவ்வொப்பந்தம் இத்தாலியர்க்கு அரசியல் தந்திரத்தையும் ஒப்பந்தம் செய்து கொள்ளும் முறையையும் நன்கு கற்பித்ததென்னலாம்.

# 6. உள்நாட்டுக் குழப்பங்கள்

சமாதான ஒப்பந்தப்படி இத்தாலி ஒருவித நன்மையும் பெறவில்லை என்பதை அறிந்ததும், பொதுமக்கள் மனந் தளர்ந்தார்கள். போர்புரிந்த வீரர்களும் இத்தாலிய இராஜ தந்திரிகளின் மீது வெறுப்புக் கொண்டார்கள். இதன் பயனாக, இத்தாலியில் உள்ள ஒவ்வொரு நகரமும் கூச்சலையுங் குழப்பத்தையும் தரிசித்தது. அப்போது இத்தாலிய அரசாங்கப் பிரதமமந்திரியாராக இருந்த அர்லாண்டோ என்பவர் திறமையற்றவர்; இத்தாலியின் அப்போதைய நிலைமையை நன்றாக உணர்ந்தவர் அல்லர்; மேலும், மக்களை நன்முறையில் சமாதானப்படுத்தும் சக்தி படைத்தவரும் அல்லர். அவரே வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தில் இத்தாலியின் சார்பாகக் கையெழுத்திட்டவர்.

அவருக்குப் பின் நிட்டி என்பவர் பிரதம மந்திரியானார். அவர் அர்லாண்டோவைவிட மோசமானவர் என்றே கூறலாம். அவர் தோற்றத்திற் சிறந்து விளங்கினரே அன்றிச் செயல்களில் சிறந்து விளங்கவில்லை. அவர் பொருளதார சாஸ்திரத்தில் சிறிது அறிவுடையவர்; ஆனால், நாட்டுப் பொருளாதார நிலைமையைச் சரிப்படுத்தும் சக்தியற்றவர். அவர் சமதருமக் கட்சியினர் விருப்பத்தின்படி நடந்து வந்தனரே அன்றி, குடிகளின் விருப்பத்தின்படி நடந்திலர்; சமதருமக் கட்சியினர் செய்து வந்த கலகங்களையும் பிற காரியங்களையும் அடக்கச் சக்தியற்று அவர்கள் கைப்பாவையாக விளங்கினார்.

இந்நிலையில், இத்தாலியைச் சேர்ந்த பியூமி (Fiume) என்னும் நகரில் இத்தாலியர்க்கும் பிரஞ்சு மாலுமிகட்கும் இடையே கலகம் ஏற்பட்டது. பிரஞ்சு அரசாங்கம் அந்நகரைப் பிரஞ்சு மயமாக்கத் தீர்மானித்தது. இத்தாலி அரசாங்கமோ, வலியற்றுச் செய்வதறியாது வாளாவிருந்தது. இக்கேவல நிலை ஓர் உண்மை இத்தாலியர் இதயத்திற் பதிந்து உறுத்தினது. அவ்வித்தாலியர் ஒரு கவிஞர்; முசோலினியின் சிறந்த நண்பர். அவர் வீரம் பொருந்திய பாஸிஸ்டு இயக்க இளைஞர் சிலரோடு சென்று, பியூமி நகரை அடைந்தார்; பிரஞ்சு வீரர்களை விரட்டிவிட்டு, நகரைத் தம்வசப்படுத்திக் கொண்டார். இதனால், நிட்டியின் அரசாங்கம் வலியற்றதென்பது தெரிகிறதன்றோ? அரசாங்கம் செய்ய வேண்டிய வேலையை ஒரு சாதாரணக் கவிஞர் செய்தனர் எனின், கவிஞரது வீரத் தன்மையும் தாய் நாட்டுப் பற்றும் அளவிடப்படுமோ? அரசாங்கத்தின் சக்தியின்மையும் அளவிடப்படுமோ?

முசோலினி இச்சந்தர்ப்பத்தில் நிட்டியின் சீர்கேடான அரசியற் காரியங்களைத் தமது பத்திரிகையில் தினந்தோறும் வன்மையாக எழுதிக் கண்டித்தார்.

இங்ஙனம் இருக்கையில் சட்டசபைக்கெனப் புதிய தேர்தல் நடைபெறத் தொடங்கியது. எல்லாக் கட்சியினரும் தேர்தல் பிரசாரத்தை விடாது நடத்தினர். நாட்டினர் மூன்று கட்சிகளாக நின்று தேர்தலை நடத்தினர். முசோலினி தம் பாஸிஸ்டு வீரர்களோடு தேர்தல் பிரசாரம் நடத்தினர். இவர் தமது முதல் பிரசங்கத்தை மிலான் நகரில் நடத்தினர். அந்நகரம் சம தருமக் கட்சியினர்க்கு அரண் போன்றது. எனினும், முசோலினி அங்கு வெகு உருக்கமான பிரசங்கம் ஒன்றை நிகழ்த்தினர். தேர்தல் நடைபெற்றது. ஆனால், முசோலினியும் அவர் கட்சியினரும் தேர்தலில் வெற்றி

பெற்றிலர். சம தருமக் கட்சியினர் பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனினும், முசோலினி தளர்ச்சி அடைந்திலர்.

சமதருமக் கட்சியினர் தம் பெரு வெற்றியை நினைந்து, தெருக்களில் ஊர்வலமாக வந்தனர்; முசோலினியை அவமானப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தால், அவரைப் போன்ற உருவத்தைச் செய்து, தெருக்களில் இழுத்துச் சென்றனர். தாங்கள் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் அவர்கள் கண்மூடித்தனமாகச் செய்து செயல்கள் பல. எனினும், வலியற்ற நிட்டியின் அரசாங்கம் வாளா இருந்தது.

சம தருமக் கட்சியினர் முசோலினியை உடனே சிறைப்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தினர். அரசாங்கமும் அதற்கு உடன்பட்டது. அதன் பயனாக, முசோலினி சிறைப்படுத்தப்பட்டார். ஆனால், மறுநாள் விடுதலை செய்யப்பட்டார். இஃது எவ்வளவு கேவலமான செய்கை! முசோலினி சமதருமக் கட்சியினர்க்கு மாறாக மக்களைத் தம் வயப்படுத்தப் பல உருக்கமான சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். எதிர்க்கட்சியினரும் பொதுமக்களைத் தம் கட்சிக்கு ஆதரவு அளிக்கும்படி தூண்டினர்.

இந்நிலையில், முசோலினி நடத்தி வந்த பொபொலொ-டி- இத்தாலியா என்னும் பத்திரிகைக்கு உறுப்பாளர் சிலரே இருந்தனர். அதன் வருமானமும் குறைவாக இருந்தது. எனினும், முசோலினி தமது கட்சி வன்மையால் அப்பத்திரிகையை நடத்திவந்தார்; பொது மக்கட்கு நாட்டு நிலைமையைத் தெளிவுபடுத்தச் சொற்பொழிவுகள் பல செய்தார்; நிட்டியின் அரசாங்கத்தைத்

தாக்கி வன்மையான நடையில் அரிய கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டார்.

அரசாங்கத்துக்கு எதிரியாக இருந்த முசோலினியை ஒழிப்பதற்கு, நிட்டியின் ஆட்கள் இவரை உலகப் பிரயாணஞ் செய்து வரும்படி தூண்டினர்; இவர் நண்பரான கவிஞரையும் ரோமா புரியை விட்டு டோக்கியோவுக்கு விரைந்தேகுமாறு தூண்டினர். ஆனால், இவ்விருவரும் அதற்கு உடன்பட்டிலர்.

ஒருமுறை முசோலினி தபாலாபீசுக்குச் சென்று, தமக்கு வந்த பணத்தைத் தரும்படி அங்கிருந்த குமாஸ்தாவைக் கேட்டார். அந்தக் குமாஸ்தா சமதருமக் கட்சியினன். அவன் முசோலினியை இழிவுபடுத்த விரும்பி, "நீர் முசோலினி என்பதை நிரூபிக்கச் சாட்சியை அழைத்து வாரும்" என்றான். முசோலினி அவனை நோக்கிப் புன்னகை புரிந்தனர். அவ்வமயம் அங்கிருந்த வயோதிக குமாஸ்தா ஒருவர், "இவர்தாம் முசோலினி. இவருக்கு வந்த பணத்தை இவரிடம் சேர்ப்பித்துவிடு; கேவலமாக நடந்து கொள்ளாதே. முசோலினி இத்தாலியில் மட்டும் பெயர் பெற்றவர் அல்லர். இவர் ஒரு காலத்தில் உலகிற் சிறந்து விளங்குவார்" என்றார். ஆ! அவ்வயோதிகர் கூற்று உண்மையானதே. முசோலினி இன்று உலகம் போற்றுகின்ற உயர் பதவியில் இத்தாலியின் இரட்சகர் என்ற உயரிய நிலையில், ஏன்? ஐரோப்பிய சமாதானப் பிரியர் என்னும் மிக உயரிய நிலையில் விளங்குகின்றார். இது நிற்க.

நிட்டியின் அரசாங்கம் சமதருமக் கட்சியினரை ஆதரித்து நின்றும், மூன்று முறை தோல்வியுற்றுக் கேவல நிலையை அடைந்தது. அதன் வலியற்ற நிலைமையை உணர்ந்த சமதருமக் கட்சியினர், தம் கொள்கைகளை இத்தாலி முழுவதும் பிரசாரம் செய்து வந்தனர்.

அவர்களைத் தடுக்க அரசாங்கம் முயன்றிலது. ஒருமுறை சமதருமக் கட்சியினர் தந்தித் தபால் இலாகாவில் வேலை நிறுத்தம் செய்தனர். முசோலினி அவ்வேலை நிறுத்தத்தை வன்மையாகப் பத்திரிகையில் கண்டித்து எழுதினார். "தொழிலாளர்கள் தங்கள் குறைகளை முதலாளிகளிடம் கூறித் தங்கட்கு நியாயம் வழங்குமாறு வேண்டுவது சிறந்தது; ஆனால், நாட்டு நிலையைப் பாதிக்கத் தக்க முறையில் வேலைநிறுத்தம் செய்வது தவறாகும்" என்று முசோலினி பல இடங்களில் பேசி மக்கள் மனத்தைக் கவர்ந்தார். எனினும், வேலை நிறுத்தம் செய்யப்பட்டது; ஆனால், இரண்டொரு நாட்களில் அமைதி உண்டாயிற்று.

இவ்வமைதிக்குப் பிறகு திடீரென இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். இவ்வேலை நிறுத்தம் செய்து பத்து நாட்கள் ஆயின. அவ்வமயம் பாஸிஸ்டு இயக்க வீரர்கள் நாட்டில் அமைதியை நிறுவப் பாடுபட்டார்கள். அதனால், சினங்கொண்ட எதிர்க்கட்சியினர் பாஸிஸ்டு வீரர்களைத் தாக்கி அவமானப்படுத்தினர்; முசோலினியைச் சந்தித்துக் கேவலமாகப் பேசினர். நாட்டு முன்னேற்றத்தைக் கருதித் தமது உயிரையுந் துறக்கத் துணிந்த வீரரை மக்கள் அறிந்துகொள்ளாமல் இருந்தது வருந்தத் தக்கதன்றோ?

நிட்டியின் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட தனிப்படை ஒன்று ரோமாபுரியில் இருந்தது. அதற்கு அரசியற் பாதுகாப்புப்படை என்பது பெயர். அப்படையினர் ஒருமுறை ரோமாபுரியில் குற்றமற்ற ஐம்பது குடிகளைச் சுட்டுக் கொன்றனர்; வெளி நகரங்களிலிருந்து வந்து குடிபுகுந்த மாந்தர் பலரைச் சிறைப்படுத்தினர். முசோலினி அக்கொடுமையைத் தமது பத்திரிகையில் பலமாகக்

கண்டித்து எழுதினார்; அரசாங்கத்தின் அறிவீனத்தைக் குடிகட்குத் தெளிவுறக் காட்டினார்.

நிட்டியின் அரசாங்கம் தலை சாய்ந்தது. கயோலிட்டி மீண்டும் பிரதமமந்திரியாக ஆனார். அவர், உள்நாட்டுக் குழப்பத்தை உள்ளவாறு உணர்ந்து, ஆவன செய்யும் ஆற்றல் அற்றவர். குடிகளோ, தங்களை நேரிய முறையில் நடத்திச் செல்லும் தலைவன் இன்றித் தங்கள் மனம் போனவாறு நடக்கவும் பேசவும் தலைப் பட்டார்கள்; பல கொடிய செயல்கள் செய்தார்கள்; கேவல முறையில் நடந்து கொண்டார்கள். சம தருமக் கட்சியினர், அடக்கியாளுந் தலைவர் இல்லாமல், தத்தம் விருப்பம் போல அரசாங்கத்தை ஆட்டி வந்தனர்.

வெளிநாட்டு விஷயங்களிலும் இத்தாலி தனது மதிப்பை இழந்தது. அது பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் எள்ளி நகையாடும் நிலைமையைப் பெற்றது. உள்நாட்டில் சமதருமக் கட்சியினரால் எங்கும் குழப்பமும் அமைதியின்மையும் தாண்டவமாடின. அரசாங்கம் இருந்தும் இல்லாதது போலவே இருந்தது. நாட்டில் பணப் பஞ்சம் உண்டாயிற்று; வியாபார மந்தம் தலைகாட்டிற்று. அரசாங்கம் கரன்ஸி நோட்டுகளை வெளியிட்டுப் பணப் பஞ்சத்தை ஒழிக்க முயன்றது. ஆனால், அரசாங்கம் தன் முயற்சியில் வெற்றி பெறவில்லை.

# 7. பாஸிஸ்டு இயக்கம்

**ச**மதருமக் கட்சி அரசாங்கத்தைக் கைப்பற்றுவதைப் பெருநோக்கமாகக் கொண்டிருந்ததே அன்றி நாட்டை நன்னிலைக்குக் கொண்டுவர முயன்றிலது. அதனால், அக்கட்சியில் சிறப்புற்றிருந்த முசோலினி அதனைவிட்டு விலகித் தனிக் கட்சியொன்றை ஏற்படுத்த நேர்ந்தது. அக்கட்சியே பாஸிஸ்டு இயக்கம் என்பது. தாய்நாட்டைக் குழப்பத்தினின்றும் காத்து, ஏனைய நாடுகளைப் போல மேலான நிலைக்குக் கொண்டு வருதல் வேண்டுமென்பதே பாஸிஸ்டுகளின் தலைசிறந்த நோக்கமாகும். இக்கட்சித் தலைவரான முசோலினி ஏனைய கட்சித் தலைவர்களைப் போலச் சுயநலங் கருதுபவர் அல்லர். இத்தாலி தனது பழம்பெருமையையும் மதிப்பையும் மீண்டும் பெறுதல் வேண்டுமென்பதே இவரது முழு விருப்பம். இதனால், இவர் இத்தாலியின் அரசியலில் புதியதொரு சகாப்தத்தை உண்டாக்க வேண்டுமெனத் துணிந்தார்.

பாஸிஸ்டு இயக்கம் 1914ஹு நிறுவப்பட்டது. இவ்வியக்கத்தில் முதன்முதல் பல வகைப்பட்ட கட்சியாரும், நாட்டுக்குழைக்கும் ஒரே நோக்கத்துடன், சேர்ந்தனர். அவர் அனைவரும் வீரம் ததும்பப் பெற்ற இத்தாலியர்; தம் தாய்நாட்டை மேனிலைக்குக் கொண்டுவரத் தம் உயிரையும் இழக்கத் துணிந்தவர்.

இவ்வியக்கம் மிலான் நகரத்திலிருந்து இத்தாலி முழுவதும் பரவ ஆரம்பித்தது. முசோலினியின் வீரம்

செறிந்த சொற்பொழிவுகளும் சுயநலங் கருதாச் செயல்களும், உள்ளத்தை உருக்கும் கட்டுரைகளும் பாஸிஸ்டு இயக்கத்தைப் பெருக்கின. பாஸிஸ்டு வீரர்கள் தங்கள் தலைவரை இத்தாலியின் இரட்சகராக மதிக்கத் தொடங்கினார்கள்; அவர் அடியாலிட்ட கட்டளையைத் தங்கள் முடியால் செய்து முடித்தார்கள்; பல்வேறு நகரங்களில் இருந்த பாஸிஸ்டு இயக்க வீரர்கள், அக்கட்சியின் விதிகட்குக் கீழ்ப்படிந்து, ஒரே முறையில் நடந்து வந்ததுதான் முசோலினியின் பெரு வெற்றிக்குக் காரணமாகும்.

பாஸிஸ்டு இயக்கத்தின் சிறந்த கொள்கையையும், அதன் ஒழுங்கு முறைமையையும் கண்டு, இத்தாலி மக்கள் அதனைப் பாராட்டினார்கள். அவ்வமயம் முசோலினி உள்நாட்டுக் குழப்பங்களைக் குறிப்பிட்டுத் தமது இயக்கத்திற் சேர்ந்து தாய்நாட்டைக் காக்குமாறு இளைஞர்களை வேண்டினார். இத்தாலிய இளைஞர்கள், இவர் வேண்டுதலை மகிழ்ச்சியுடன் ஏற்று, கல்லூரிகளையும் கலாசாலைகளையும் விட்டுப் பாஸிஸ்டு இயக்கத்திற் சேர்ந்தார்கள். அவ்வீர இளைஞர்களே, சமதருமக் கட்சியினர் இரயில்வே வேலை நிறுத்தம் செய்தபோது முசோலினியின் கட்டளைப்படி இரயிலைச் செலுத்தி, நாட்டில் அமைதியை நிறுவினார்கள்.

பாஸிஸ்டு இயக்கம் வலுப்பெறுவதை உணர்ந்த சமதருமக் கட்சியினரும் அரசாங்கத்தாரும் அவ்வியக்கத்தை ஒடுக்க முற்பட்டனர்; முதலில், படையொன்றை அனுப்பி, புலவர் கைப்பற்றியிருந்த 'பியூமி' என்னும் பிரதேசத்தைக் கைப்பற்றச் செய்தனர். அப்படை சென்று, உண்மைத் தொண்டர்களான பாஸிஸ்டு வீரர்களிற் பலரைக் கொன்றது. இந்நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற முசோலினி, பகைவர்களைக்

கடுமையாகப் பத்திரிகையில் தாக்கி எழுதினார்; பாஸிஸ்டு இயக்க வீரர்கட்குப் படைக்கலப் பயிற்சி அளித்தார். நாட்டின் பல்வேறிடங்களில் இருந்த பாஸிஸ்டு தலைவர்கள் தங்கள் தங்கள் வீரர்கட்குப் போர்ப் பயிற்சியளித்து, அவர்களைப் பெரு வீரர்களாக்கினார்கள்.

பாஸிஸ்டு இயக்கம் வலுப் பெறுதலைக் கண்ட பகைவர், அவ்வியக்க வீரர்களைக் கண்டவிடத்தெல்லாம் துன்புறுத்தி வந்தனர். எவ்விதத் துன்பத்திலும் பாஸிஸ்டு வீரர்கள் தங்கள் தலைவரை நினைந்து, அவர் சொற்படி நடந்து வந்தார்கள்; இறக்குந் தறுவாயிலும் தங்கள் இயக்கக் குறியான கறுப்புச் சட்டையை உவப்போடு நோக்கினார்கள்; தங்கள் உடலை அதில் சுற்றி அடக்கம் செய்வதை விரும்பினார்கள். இத்தகைய உண்மைத் தேசிய வீரர்களைப் பெற்றதனாலேதான் பாஸிஸ்டு தலைவர் இன்று இத்தாலியின் முடிசூடா மன்னராக இலங்குகின்றார். இது நிற்க.

ஒருநாள் பாஸிஸ்டு வீரர் ஒருவர் பாலமொன்றைக் கடந்து செல்கையில், பகைவர் அவரை நையப் புடைத்து ஆற்றில் தள்ளிவிட்டனர். அவ்வீரர் நீந்திக் கரையடையுந் தறுவாயில், பகைவர் மீண்டும் அவரை அடித்துத் தள்ளினர். அவர் ஆற்றில் அலைப்புரண்டு இறந்தார். இவ்விதச் செயல் ஒவ்வொரு மாகாணத்திலும் நடைபெற்றது. மற்றொரு நாள் பகைவர் நாடகக் கொட்டகையில் வெடிகுண்டொன்றை வீசினர். அதனால் குற்றமற்ற இத்தாலியர் இருபதின்மர் மாண்டனர்; பலர் காயமடைந்தனர். இந்தத் துக்ககரமான நிகழ்ச்சியைப் பற்றி அரசாங்கம் கவலையுறவில்லை. இந்நிலையில், முசோலினி தம் வீரர்களை அணி வகுத்துத் தெருக்களில் ஊர்வலமாக அழைத்துச் சென்று பொதுமக்களுக்கும் அரசாங்கத்

துக்கும் பகைவர்க்கும் தமது படை வலிமையை நிரூபித்துக் காட்டினார்.

மேற்கூறிய நிகழ்ச்சி நடைபெற்ற அன்றே பகைவர் மாசி என்பானை முசோலினியைக் கொல்லுமாறு ஏவினர். அவன் முசோலினி இருந்த பத்திரிகை நிலையத்துக்குச் சென்றான்; முசோலினியை நேரிற் கண்டான். ஆ! அப்போது அவன் யாது எண்ணினானோ! அறியோம்! அவன், தான் பகைவரால் ஏவப்பட்டதை முசோலினியிடம் கூறித் தன்னிடம் இருந்த கைத் துப்பாக்கியைக் காட்டினான். முசோலினி ஒன்றும் பேசாமல், தம் குமாஸ்தாவினிடம் அவனை ஒப்புவித்தார். பின்னர் அவன் மிலான் நகரப் போலீசாரால் சிறை செய்யப்பட்டான்.

1921ஆ புதிய தேர்தல் நடைபெற்றது. அதற்குப் பாஸிஸ்டு இயக்க வீரர்கள், தேர்தல் பிரசாரம் நடத்தினார்கள். முசோலினி எல்லா மாகாணங்களுக்கும் நேரிற் சென்று, தமது இயக்கக் கொள்கைகளைப் பிரசாரம் செய்தார். அதன் பயனாக, முசோலினி உட்பட முப்பத்தைந்து பாஸிஸ்டு வீரர்கள் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், முசோலினி அதிகப்படியான ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சட்டசபைக்குள் நுழைந்த பாஸிஸ்டு தலைவர் கயோலிட்டியின் அரசாங்கத்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார்; அவ்வரசாங்க ஊழல்களை ஒன்றன் பின் ஒன்றாகச் சட்டசபையில் விளக்கிக் காட்டி, அரசாங்கத்தைத் தலைகுனியும்படி செய்தார். அதன் பயனாகக் கயோலிட்டி அரசாங்கம் ஒழிந்தது. பொனோமி என்பவர் பிரதம மந்திரியார் ஆனார்.

பொனோமி அரசாங்கமும் இத்தாலியின் அப்போதைய நிலைமையைச் சமாளிக்கச் சக்தியற்றுத் தவித்தது. இரண்டு மாகாணங்களில் பாஸிஸ்டு வீரர்கள் பகைவரால் படுகொலை செய்யப்பட்டார்கள். இதனாற் சினங்கொண்ட முசோலினி, 1921ஆ நவம்பர்மீ ரோமாபுரியில் பாஸிஸ்டு படையைத் திரட்டி, விதிகளின் வழியே அணிவகுத்துச் சென்று, தமது கட்சியின் வலிமையைப் பொதுமக்கட்கு விளக்கமுறச் செய்தார்; ரோமாபுரியிலேயே பாஸிஸ்டு மகாநாடு ஒன்றையும் கூட்டித் தமது இயக்கத்தின் சட்டதிட்டங்களைப் பின்வருமாறு வகுத்தார்:

1. *ஒரு சமூகம் என்பது தனிப்பட்டவர் நன்மைக்கோ, அல்லது கட்சிகளின் நன்மைக்கோ, உரியதன்று. அது, மிகப்பழைய காலத்திலிருந்து வரும் மக்கள் நன்மைக்கே உரியதாகும். ஆதலின், நாட்டு நன்மை எனின், அது சமூகத்து நன்மையாகும்; தனிப்பட்டவர் நன்மையாகாது.*

2. *நாடு, சமூகத்து உரிமையான அவதாரமாகும்.*

3. *பாஸிஸ்டு இயக்கம் சமூக சேவைக்கே உரியது; தனிப்பட்டவர் நன்மைக்கு உரியதாகாது. அஃது ஒழுங்கு, முன்னேற்றம், நாட்டுப்பற்று எனும் மூன்றையும் அடிப்படையாகக் கொண்டது.*

பாஸிஸ்டு இயக்க மாநாட்டில் முசோலினி, தம்மை விட்டு வேறொரு தலைவர் இருத்தல் வேண்டுமெனக் கூறினர். ஆனால், பாஸிஸ்டு வீரர் யாவரும் ஒரே குரலாக, "நீரே எங்கள் தலைவர்! நீரே எங்கள் தலைவர்!" என்று கூறிக் கரகோஷம் செய்தனர். அதனால், முசோலினியை இன்றும் பாஸிஸ்டு இயக்கத் தலைவராக இருந்து வருகின்றார்.

பாஸிஸ்டு மகாநாடு நடைபெற்றுச் சில நாட்கள் கழிந்த பின்னர், இத்தாலியில் இருந்த சிறந்த பாங்கி ஒன்று பணப் பஞ்சத்தால் தளர்ச்சியுற்றது. அதனால், நாட்டில் பெருங்குழப்பம் உண்டானது. பொதுமக்கள் நிலை கலங்கி னார்கள். அரசாங்கமோ, ஓர் உதவியும் செய்யமாட்டாது, விழித்தது. பிறநாடுகள், இத்தாலியின் சீர்கேடான செல்வ நிலைமையைக் கண்டு நகையாடின. முசோலினி, இச்சந்தர்ப்பத்தை வீணாக்காமல், அரசாங்கத்தின் வலியற்ற தன்மையையும் செல்வ நிலையைச் சரிப்படுத்த இயலாத நிலைமையையும் பத்திரிகையில் விளக்கி வன்மையாகக் கண்டித்தார்.

இத்தகைய சீர்கேட்டுக்கிடையே, பொனோமி மந்திரி சபை விழுந்தது. அடுத்த மந்திரி சபையை அமைக்கத் தக்க தலைவர் இல்லாமல் முடிவில் பாக்டா (Facta) என்பவர் மந்திரி சபையை அமைக்க அழைக்கப் பட்டார். அவர் புதிய மந்திரிசபையை ஏற்படுத்தினார். எனினும், அவரும், முன்னிருந்த பிரதமமந்திரிமாரைப் போலவே நாட்டு நிலையை உள்ளவாறு உணராதவராய் இருந்ததால், அரசியல் முன்னேற்றம் அணுவளவும் ஏற்படவில்லை.

1922ஆ மேமீ 24உ சமதருமக் கட்சியினரும் பிறரும் ஒரே கட்சியினராகித் தொழிலாளர் விழா ஒன்றை நடத்தி, இத்தாலி முழுவதும் வேலைநிறுத்தம் செய்தனர். அரசாங்கம் இருந்த இடம் தெரியாமல் இருந்ததால், முசோலினி தம் கட்சி வீரர்களை அழைப்பித்து, வேலை நிறுத்தத்தையொழித்து, நிலைமையைச் செவ்வைப் படுத்தினார்.

சட்டசபையில் பலதிறப்பட்ட கட்சியினர் இருந்து அரசாங்கத்தைச் சீர்குலைத்துக் கொண்டிருந்தனர். அரசாங்கம் சமதருமக் கட்சியினரோடு ஒன்றுபட்டு,

நிலைபெற முயன்றது. அதனை அறிந்த முசோலினி, சட்டசபையில் பாக்டா அரசியல்முறையை அழுத்த மாகக் கண்டித்துப் பேசினார்; பாக்டா அரசாங்கத்தின் சீர்கேடான நிலைமையைப் பல உதாரணங்களைக் கொண்டு விளக்கிக் கூறினார். அன்றே பாக்டா மந்திரிசபை ஒழிய, மேடா என்பவர் பிரதம மந்தியார் ஆனார்.

இச்சந்தர்ப்பத்தில் சமதருமக் கட்சியினரும் பிற கட்சியினரும் ஒன்று சேர்ந்து, இத்தாலி முழுவதும் பொது வேலை நிறுத்தத்தை உண்டாக்கினர். ‘இப்பகைவரை ஒழிக்க இதுவே தக்க சமயம்’ என்று எண்ணிய முசோலினி, பாஸிஸ்டு வீரர்களைச் சேர்த்து, நாடெங்கும் அமைதியை நிறுவுமாறு ஏவினார். அப்பொழுது உண்டான குழப்பத்தில் பாஸிஸ்டு வீரர்கள் ஆயுதந் தாங்கிப் பகைவர்களைக் கண்ட கண்ட இடத்தெல்லாம் முறியடித்தார்கள். பாஸிஸ்டு இயக்கம் இத்தாலி முழுவதும் பெருந் தொண்டாற்றி அமைதி நிறுவுவதை இத்தாலி அரசர் அறிந்தார்; முசோலினியை நேரிற் சந்தித்தார். முசோலினி தமக்குப் பிரதமமந்திரியார் வேலை வேண்டுமெனக் கேட்டார். ஆனால், அப்பொழுது பிரதம அமைச்சராக இருந்தவர் தமது பதவியை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. எனவே, முசோலினி, அப்போதைய அரசாங்கத்தைத் தகர்த்தெறிந்து, பாஸிஸ்டு அரசாங்கத்தை இத்தாலியில் நிறுவத் தீர்மானித்தார்.

# 8. பாஸிஸ்டு இயக்க வெற்றி

முசோலினி தம் வீரர்கட்குப் போர்ப் பயிற்சி யளித்துச் சிறந்த போர் வீரர்களாக்கினமையால், அவரது இயக்கம் அசைக்க இயலாததாக இருந்தது. மேலும், முசோலினி தம் உயிர்த் துணைவரான அர்பினாட்டி (Arpinoti) என்பவரை முதலில் 'அன்கோனா' நகரைப் பிடிக்குமாறு ஏவினார். அத்துணைவர் தம் தலைவர் கட்டளைப்படி பாஸிஸ்டு வீரர் சிலரோடு சென்று, அந்நகரைக் கைப்பற்றிக் கொண்டார்.

இவ்வெற்றி பாஸிஸ்டு இயக்க வீரரை உற்சாகப் படுத்தியது. அவர்கள், 'நாம் இனி ரோமாபுரி மீது படையெடுத்துச் செல்லலாம்' எனத் துணிந்தார்கள்; டிரெண்டு, பல்சானோ என்னும் பிரதேசங்களையும் கைப்பற்றினார்கள். இந்நிலையில் முசோலினி இத்தாலி முழுவதும் பிரயாணஞ் செய்து, தமது இயக்கத்தின் வலிமையையும் விரிவையும் ஆராய்ந்தார். இவர் சென்ற இடமெல்லாம் மக்கள் இவரைக் குதூகலத்தோடு வரவேற்றார்கள். இவர் உடைனி, கிரிமோனா, மிலான், நேபிள்ஸ் என்னும் இடங்களில் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்; நாட்டின் சீர்கேடான நிலைமையையும் அதை மேனிலைக்குக் கொண்டுவர வேண்டும் விதத்தையும் விரிவாக விளக்கிக் கூறினார். இவர் பேச்சைக் கேட்ட மக்கள், மட்டற்ற மகிழ்ச்சி துளும்ப, 'இவரே இத்தாலியின் இரட்சகர்!' என முழக்கஞ் செய்தார்கள்.

முசோலினி தம் வீரர்களை ரோமாபுரிப் படை எடுப்புக்கு ஏற்ற விதமாகத் தயாரித்து வைத்திருந்தார். அவ்வீரர்கள் தங்கள் தலைவரின் கட்டளைகளைத் தவறி வேறொன்றும் செய்யாதவர்கள். ஆதலின், முசோலினி வெற்றி பெற்றார் என்றே கூறுதல் வேண்டும். முதலில் முசோலினி, படையை நான்கு பிரிவுகளாக வகுத்து, ஒவ்வொன்றையும் தம் உற்ற நண்பர் ஒருவரது மேற்பார்வையில் விட்டார். அம்பிரியா மாகாணத்துத் தலைநகரான பெருகியா என்பதே பாஸிஸ்டு இயக்கத்துத் தலைமை ஸ்தாபனம் இருந்த இடமாகும். ரோமாபுரிப் படையெடுப்பில் தோல்வியுறின், அனைவரும் போ (Bo) எனும் மலைச் சாரலுக்குப் போய்விட வேண்டுமென்று முசோலினி கட்டளையிட்டார்; படையெடுப்பைப் பற்றிய செய்திகளை உடனுக்குடன் தமக்கு அறிவிக்குமாறு நாடெங்கும் நம்பத்தக்க ஆட்களை வைத்தார்; பாஸிஸ்டு இயக்க வீரர்க்கும் அரசாங்கத்துக்கும் நடைபெறப் போகும் போரில் நாட்டுச் சேனை கலக்காதபடி ஏற்பாடு செய்தார்; தமது படையெடுப்பைப் பொதுமக்கட்கு அறிவிப்பதற்கு, அறிக்கை ஒன்றை எழுதி, அதில் தம் நண்பரான நான்கு படைத்தலைவரையும் கையெழுத்திடச் செய்து, தமது பத்திரிகையில் பின்வருமாறு வெளிப்படுத்தினார்;

"பாஸிஸ்டு வீரர்களே, இத்தாலியர்களே, போருக்குரிய நாள் வந்துவிட்டது! பாஸிஸ்டு இளைஞர்கள், நாட்டு நலனைக் கருதி, அரசாங்கத்தோடு அமர் புரியப் புறப்பட்டுவிட்டார்கள். பாஸிஸ்டு இயக்கம் ஒன்றே நாட்டைப் புதுப்பித்துச் சீர்படுத்த வல்லது. ஆதலின், நாட்டைச் சீர்படுத்தும் பெருநோக்கத்துடன் தோன்றியுள்ள இவ்வியக்கத்தின் முற்போக்கை நாட்டுப் படை தடை செய்யலாகாது. மேலும், இவ்வியக்கம் போலீஸார்மீது வெறுப்புக் கொள்ளவில்லை. ஆதலின், போலீஸார் இதில்

தலையிடுதல் தகாது. 'இத்தாலி மக்கள் இன்புற்று வாழ வேண்டும்; அதற்கேற்ற அரசியல் அமைதல் வேண்டும்;' என்பனவே பாஸிஸ்டு இயக்கக் கொள்கைகள் ஆகும். ஆதலின், நமது இயக்கத்துக்கு இறைவர் இன்னருள் புரிவாராக! நாம் வெற்றி பெறுதல் வேண்டும்! நாம் வெற்றியே பெறுவோம்! இத்தாலி நீடு வாழ்க! பாஸிஸ்டு இயக்கம் நீடு வாழ்க!"

இவ்வறிக்கையைக் கண்ட மக்கள் மகிழ்ந்தார்கள். அரசாங்கம் பொறாமையும் அச்சமுங் கொண்டது. இந்நிலையில், பாஸிஸ்டு வீரர்கள் ரோமாபுரிமீது படை எடுத்துச் சென்றார்கள்; வழியில் ஒவ்வொரு நகரமாகக் கைப்பற்றிக் கொண்டே சென்றார்கள். ஒவ்வொரு வெற்றியைப் பற்றியும் முசோலினி அவ்வப்போது தம் ஆட்கள் வாயிலாக அறிந்து வந்தார். அவர் பாஸிஸ்டு வீரர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதைத் திடமாக நம்பினார்.

முசோலினி மிலான் நகரத்தில் தமது பத்திரிகை நிலையத்தில் இருந்துகொண்டே இத்தனை வேலைகளையும் செய்து வருகின்றார் என்பதை அனைவரும் அறிவர். அரசாங்கமும் இதனை அறிந்திருந்தது. முசோலினி, அரசியற் படை (Royal Guards) தமது பத்திரிகை நிலையத்தை விரைவிற் சூழ்ந்து கொள்ளும் என்பதை அறிந்து, போர்க்குரிய முன்னேற்பாடுகளைச் செய்திருந்தார். அவர் எதிர் நோக்கிய வண்ணமே அரசியற் படையும் பத்திரிகை நிலையத்தைச் சூழ்ந்து கொண்டது. முசோலினிக்கும் படைவீரர்க்கும் இடையே குண்டுகள் பறந்தன. பின்னர்ப் பல பெருமக்கள் முசோலினியைக் கண்டு, போரை நிறுத்துமாறு வேண்டினார்கள். முசோலினி, எக்காரணங் கொண்டும் போரை நிறுத்தல் இயலாதென்று கூறிவிட்டார். மேலும், அவர், "பாஸிஸ்டு வீரர்கள்

தங்கள் தாய்நாட்டு நன்மைக்கு உயிர்விடத் துணிந்தவர்கள்; இத்தாலிய அரசியல் செவ்வையாக நடைபெற வேண்டுமென்பதே அவர்கள் பெருவிருப்பம். அவ்வித நேர்மையான அரசியலை அவர்களே விரைவில் ஏற்படுத்து வார்கள். அவர்கள் சமாதானத்துக்கு உடன்படமாட்டார்கள்" என்று கண்களில் நெருப்பு பொறி பறக்கக் கூறினார்.

அரசாங்கம் செய்வதறியாது தத்தளித்தது. தேசீயக் கட்சி முசோலினியோடு ஒப்பந்தம் செய்துகொள்ள முன் வந்தது. எனினும், முசோலினி, "முடியாது!" என வன்மையாகக் கூறிவிட்டார்.

மிலான் நகரின் நிலைமை இங்ஙனம் இருக்கையில் பாஸிஸ்டு படை ரோமாபுரியின் கோட்டை வாயிலை அடைந்தது. இத்தாலிய அரசர் உடனே நிலைமையை உணர்ந்துகொண்டார்; மந்திரி சபையை அமைக்க முசோலினியை அழைக்கும்படி தமது காரியதரிசிக்குக் கட்டளையிட்டார். அக்காரியதரிசி அரசரது விருப்பத்தை டெலிபோனில் முசோலினிக்கு அறிவித்தார். முசோலினி, 'இது பகைவர் நம்மை ஏமாற்றும் வித்தையோ!' என்றையுற்று, 'அரசரது விருப்பத்தைத் தந்தி அடித்துத் தெரிவியும்' என்று பதில் அளித்தார். அங்ஙனம் தந்தி அடித்துச் செய்தியை அனுப்புதல் அரசியல் முறை அன்றாயினும், அப்போதிருந்த நெருக்கடியான நிலைமையை உணர்ந்த அக்காரியதரிசி, முசோலினிக்குப் பின் வருமாறு தந்திச் செய்தி அனுப்பினார்:

*"திரு. முசோலினி அவர்கட்கு, மாட்சிமை தங்கிய மன்னர், தாங்கள் உடனே ரோமாபுரிக்கு வருதலை விரும்புகின்றார். மந்திரி சபையை அமைக்கும் பொறுப்பைத் தங்களிடம் விட அவர் விரும்புகின்றார்.*

*இங்ஙனம்,*

*ஜெனரல் சிட்டாடினி."*

இச்செய்தி 1922ஆ அக்டோபர்மீ 29உ அனுப்பப்பட்டது. முசோலினி உடனே இச்செய்தியைத் தனித் தாளிற் பதிப்பித்து வெளியாக்கினார்; தமது இயக்கத்தின் தலைநகரான பெருகியாவுக்கும் செய்தி அனுப்பினார். பின்னர் இவர் தமது பத்திரிகையைச் செவ்வையாக நடத்துமாறு தம் இளவலுக்குக் கட்டளையிட்டு, நண்பர்களிடம் விடைபெற்று, ரோமாபுரிக்குப் புறப்பட்டார்; ரோமாபுரியை அடைந்ததும், முதலில் தம் உயிர்த் தோழர்களான பாஸிஸ்டு வீரர்களைக் காணச் சென்றார்; அரசரது விருப்பத்தை அவர்கட்கு அறிவித்தார்; பின்னர் அவர்களிடம் விடைபெற்றுத் தமது இயக்கத்தின் குறியான கறுப்புச் சட்டையை அணிந்து, அரண்மனைக்குட் சென்றார்; அங்கு அரசரிடம் தமது கருத்தை விளக்கிக் கூறினார். உடனே மன்னர் மகிழ்ந்து, மந்திரிசபையை அமைக்குமாறு அவரை ஏவினார்.

முசோலினி கொல்லரின் புத்திரரான முசோலினி குடிசையிற் பிறந்த முசோலினி தம் இடைவிடா உழைப்பாலும், ஊக்கத்தாலும், நாட்டுச் சேவை புரிய வேண்டும் என்னும் ஆர்வத்தாலும், தாம் விரும்பியதைப் பெற்றுவிட்டார்! இவர் இத்தாலி அரசாங்கத்துப் பிரதம மந்திரியார் ஆனார். இவர் இன்று உலகிலேயே ஒப்பற்ற சர்வாதிகாரியாக விளங்குகின்றார்.

# 9. அரசியல் சீர்திருத்தங்கள் - 1

முசோலினி முதன் மந்திரியார் ஆனதும், பாஸிஸ்டு வீரர்கள் ரோமாபுரித் தெருக்களில் தங்கள் வெற்றியைக் குறித்து ஊர்வலம் வந்தார்கள். அவர்கள் பிற கட்சியார்களைப் போலக் குதூகலத்தில் பொது மக்களையோ, பகைவர்களையோ, துன்புறுத்தவில்லை; தங்கள் தலைவரது கட்டளைப்படி அமைதியாக ஊர்வலத்தை நடத்தினார்கள்.

முசோலினி முதன் மந்திரியார் பதவியை ஏற்றதும், அப்போது முதன் மந்திரியாராக இருந்த பாக்டா என்பவரைச் சுகமாக வீடு சேர்ப்பித்தார்; அவருக்கு வழியில் எத்தகைய இடையூறும் நேரிடாதபடி பார்த்துக் கொள்ளுமாறு பாஸிஸ்டு வீரர்கட்குக் கட்டளை இட்டார். பிற மந்திரிமார்கட்கும் இத்தகைய மரியாதை செலுத்தப் பட்டது. இதனால் முசோலினி தம் பகைவர்களிடத்தில் எத்துணை அன்பு காட்டுபவர் என்பதும், பாலிஸ்டு வீரர்கள் அவர் கட்டளைப்படி நடப்பவர்கள் என்பதும் விளங்குகின்றன அல்லவா?

முசோலினி மந்திரி சபையை அமைத்த முறை இத்தாலியர்க்கு வியப்பை உண்டாக்கியது. ஏன்? இவர் பாஸிஸ்டு இயக்க வீரர்களையே மந்திரிகளாக நியமிப்பார் என்று இத்தாலியர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால், இவர் அவ்வாறு செய்யவில்லை. இவர் பிற கட்சிகளில் இருந்த உண்மைத் தேச பக்தர்களையும் அரசியல் ஞானமுள்ளவர்

களையும் தேர்ந்தெடுத்து, மந்திரிசபையை ஏற்படுத்தினார். அப்பொழுதுதான் பகைவர்களும் இவரை விரும்பத் தொடங்கினார்கள்.

இரண்டாவதாக, முசோலினி, எல்லா அரசியல் அதிகாரிகட்கும் பின்வருமாறு ஓர் அறிக்கையை வெளியிட்டார்; "மாட்சிமை தங்கிய அரசர் பெருமான் விருப்பப்படி நான் இன்று முதல் பிரதம மந்திரி பதவியை வகிக்கலானேன். எல்லா அரசியர் உத்தியோகஸ்தரும், அரசியல் முன்னேற்றத்துக்கேற்றவாறு தொண்டு செய்தல் வேண்டும்; தங்கள் வேலைகளைச் செவ்வனே செய்து முடித்தல் வேண்டும்."

மூன்றாவதாக, முசோலினி சட்டசபையிலிருந்து தமக்கெனப் பல புதிய அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டார். இவர் முதலில் சட்டசபையிற் பேசுங்கால். "சகோதரர்களே, இச்சட்டசபையை நான் மூடி இருக்கக் கூடும்; அல்லது பாஸிஸ்டு வீரர்களையே சட்டசபை அங்கத்தினர்களாயிருக்கவும் கூடும். எனினும், இவற்றுள் ஒன்றையும் செய்ய யான் இசையவில்லை. உங்கள் நன்மதிப்பையும் உழைப்பையும் பெற்று, நமது தாய்நாட்டை மேலான நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே எனது பெருவிருப்பம். உங்கள் விருப்பத்துக்கு மாறாக அரசியல் நடத்த யான் விரும்பவில்லை. ஆனால், நீங்கள் உங்கள் கடமைகளையும், நாட்டு நன்மையையும் கருத்திற் கொண்டு நடந்து வருதல் வேண்டும். நீங்கள் நேர்மையாக நடவாவிடின், இரண்டொரு நாட்களில் இச்சபை மூடப்பட்டுவிடும் என்பதை இப்போதே அறிவித்து விடுகின்றேன். பாஸிஸ்டு அரசாங்கம் தன் கடமையைச் செய்தே ஆக வேண்டும். அதனால், எனக்கு முழு அதிகாரமும் நீங்கள் தரவேண்டும். முழு அதிகாரமின்றி, நாம் இத்தாலியை நன்னிலைக்குக் கொண்டுவர இயலாது.

நாட்டுக்குழைக்க முன் வருபவர்கள் என் கொடிய விரோதிகளாக இருப்பினும், அவர்களை மார்புறத் தழுவி வரவேற்க இதோ யான் தயாராக இருக்கிறேன். நாடு நம்மை எதிர் நோக்கி இருக்கிறது. நாம் ஒன்றுமையோடு நின்று செயலாற்றுதல் வேண்டும். வீண் வார்த்தைகள் பேசவேண்டா; செயல் புரியுங்கள்; காரியத்தில் கண்ணாக இருங்கள். பாஸிஸ்டு அரசாங்கம் அசைக்க முடியாத அரசாங்கமாதல் வேண்டும். நேற்றைய அரசாங்கத்தை நிலைகுலைத்தவாறு நீங்கள் இன்று பாஸிஸ்டு அரசாங்கத்தை அணுவளவும் அசைத்தல் இயலாது. நாம் நமது சமூகத்தில் ஒழுங்கை நிறுவுவோம். நம் பகைவரும் நம்மை வாழ்த்துமாறு, நாம் நாட்டைப் புதுப்பிப்போமாக! சகோதரர்களே, நாம் இனிப் பேசுவதைவிடக் காரியத்தில் இறங்குவோம். நாம் நமது நாட்டுப் பழம் பெருமையையும் முன்னேற்றத்தையும் மீண்டும் கொண்டு வருவோமாக. நமது நன்முயற்சியில் கடவுள் அருள் கலந்து பொலிவதாக!" என்று பேசினார்.

இக்கொள்கையைச் சட்டசபையில் முந்நூற்றாறு பேர் ஆதரித்தனர்; நூற்றுப் பதினாறு பேர் ஆதரிக்க வில்லை. எனவே, முசோலினிக்குச் சட்டசபையில் பேராதரவு இருந்ததென்பது இதனாற் புலனாகின்ற தன்றோ? அவரது சொற்பொழிவைக் கேட்ட சட்டசபை அங்கத்தினர் சிலர், "இவருக்கு மாறாக நாம் நடப்போமாயின், இச்சபையையே மூடிவிடுவதாகக் கூறுகின்றாரே!" என்று தமக்குள் எண்ணிச் சீற்றங் கொண்டனர். சீற்றங் கொண்டு பயன் என்ன? பல் பிடுங்கப்பட்ட பாம்பைப் போல அவர்கள் தலை நாணி வாளாவிருந்தார்கள்.

வேண்டிய அதிகாரங்களைப் பெற்றதும் முசோலினி தம் பகைவர்க்கெல்லாம் மன்னிப்பளித்து விட்டார். இதனால்,


MUSSOLINI

இத்தாலியர்கள் அமைதியுற்றுப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். பின்னர் முசோலினி, ரோமாபுரிமீது படை எடுத்துத் தமக்கு வெற்றி உண்டாக்கிய பாஸிஸ்டு வீரர்களை வீணே வீட்டுக்கனுப்பாமல், அரசியற் பாதுகாப்புப் படையினராக்க விரும்பினார். "நம் கட்சிப் படையொன்று நமது அரசியலுக்கு முதுகெலும்பாக இருத்தல் வேண்டும்; நாம் அரசியலுக்கு அடிப்படையாக இருப்பதாக அவ்வீரர்கள் நினைத்து மகிழ்ச்சி அடையட்டும்" என்பன முசோலினியின் பெரு நோக்கங்களாகும். இதனால், அவர் அவ்வீரர்களை அரசியற் படையினராக மாற்றிவிட்டார். இவ்வறிவுடைச் செயலால், முசோலினி யின் அரசாங்கம் அசைக்க இயலாததாகிவிட்டது.

முசோலினி அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்ட சமயம் நாடு இருந்த நிலையை நீங்கள் முன்னரே அறிவீர்கள் அல்லவா? பதவி ஏற்றுக்கொண்ட பின்னர் முசோலினி ஒவ்வொரு துறையிலும் மாறுதல் செய்ய வேண்டி இருந்தது. படையையும், கல்வி முறையையும், நாட்டுப் பொருளாதார நிலையையும், அயல்நாடுகளுடன் கொண்டிருந்த நேசப்பான்மையையும் பிறவற்றையும் அடியோடு மாற்றிச் சீர்படுத்த வேண்டிய பொறுப்பு முசோலினியைச் சார்ந்திருந்தது. இதனோடு பாஸிஸ்டு இயக்கத்தை மேலும் சீர்படுத்த வேண்டி இருந்தது. பகைவரையும் அடக்கித் தரைமட்டமாக்க வேண்டி இருந்தது. இத்துணை வேலைகளையும் முசோலினி எங்ஙனம் செய்து முடித்தார் என்பதைப் பின்வரும் செய்திகளால் நீங்கள் தெளியலாம்.

# 10. சீர்திருத்தங்கள் -2

அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த முசோலினி இத்தாலியிலிருந்த பலதிறப்பட்ட கட்சிகளை ஒழித்த வரலாறு மிகுந்த வியப்பை உண்டாக்குவதாயுள்ளது. அவர், முதலில் இத்தாலியில் இருந்த இரகசியச் சங்கம் ஒன்றை நெடுங்காலமாக வெறுத்து வந்தார்; தாம் பிரதம மந்திரியார் ஆனதும், "பாஸிஸ்டு வீரன் எவனும் இரகசியச் சங்கத்தில் அங்கத்தினனாக இருத்தல் கூடாது" என்று கட்டளையிட்டார். இக்கட்டளைப்படி பாஸிஸ்டு வீரர்கள் அச்சங்கத்தினின்றும் விலகினார்கள். சிலர் அச்சங்கத்தில் வைத்திருந்த அபிமானத்தால், பாஸிஸ்டு இயக்கத்தினின்றும் விலகினர். எனவே, இரகசியச் சங்கத்து அங்கத்தினர் எவரும் பாஸிஸ்டு இயக்கத்தில் இல்லாதபடி முசோலினி தமது இயக்கத்தைச் சீர்திருத்தினார்.

தேசீயக் கட்சியினர், பாஸிஸ்டு கட்சியினரைப் போன்றே, பெரும்பாலும் நாட்டு நலத்தை விரும்பினவர். அவர்கள் மிக்க மகிழ்ச்சியோடு பாஸிஸ்டு இயக்கத்தில் சேர்ந்து, முசோலினியைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டார்கள். முசோலினிக்கு இஃது ஒரு மகத்தான வெற்றியாகும்.

பிரபலக் கட்சி (Popular Party) என்பது முசோலினிக்கு நேர்மாறானது. அக்கட்சி, தனது மகாநாட்டில், "மந்திரி சபையில் உள்ள நம், கட்சியினர் முசோலினிக்கு ஆதரவளித்தல் கூடாது" என்னும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிற்று. இதனை உணர்ந்த முசோலினி, மந்திரி

சபையில் இருந்த பிரபலக் கட்சித் தலைவர்களை அழைத்து, "உங்கள் கட்சி இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றி இருப்பதால், நீங்கள் இதன்படி நடக்கக் கடமைப்பட்டுள்ளீர்கள். நீங்கள் இதன்படி நடக்க மந்திரி சபையில் இயலாது. ஆதலின், உங்கள் பதவிகளை உடனே விட்டு நீங்குக" என்று கூற, அவர்கள் தங்கள் பதவிகளை விட்டு விலகினார்கள்.

அதன்பின்னர் முசோலினி நாட்டில் தமக்கு எத்துணை ஆதரவு இருக்கிறதென்பதை ஆராய விரும்பி, இத்தாலி முழுவதும் பிரயாணம் செய்தார்; ஆங்காங்குச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இவர் மிலான் நகரத் தொழிலாளிகளிடையே நின்று சொற்பொழிவாற்றுகையில், "சகோதரர்களே, நான் மிகப் பெரிய குடும்பத்திற் பிறந்தவன் அல்லேன். நான் ஓர் ஏழைத் தொழிலாளியின் மகன். நான் கொத்தனிடம் சிற்றாளாக இருந்து என் கைகளால் வேலை செய்தவன்; செங்கற்களைத் தூக்கிக்கொண்டு மாடிமீது ஏறியவன். ஆதலின், தொழிலாளிகளாகிய உங்கள் கஷ்டத்தை யான் நன்கறிவேன். நான் தொழிலாளியாக இருந்தபோது நாள் ஒன்றுக்கு பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்தேன். ஆனால், நீங்கள் இப்பொழுது எட்டு மணி நேரமே வேலை செய்ய வேண்டும். இஃது உங்கட்குப் பெரிய வெற்றியாகும். நான் உங்கள் குறை களை இயன்ற வரையில் நீக்கி வருகின்றேன். நீங்களே நாட்டுச் செல்வர்கள். நீங்கள் இல்லாவிடில், நாட்டில் தொழில் ஏது? வாணிபம் ஏது? செல்வ நிலை ஏது? எல்லாம் உங்களையே பொறுத்துள்ளன. தொழிலாளர்களே சமூகம். தொழிலாளிகள் உயர்ந்தாற்றான், சமூகம் உயரும். சமூகம் உயர்ந்தால், நாடு உயரும்; நமது தாய் நாடு பிற நாடுகளைப் போல மேனிலையை அடையும்" என்று வெகு உருக்கமாகப் பேசினார்.

பெருகியா நகரில் அவர் பின்வருமாறு ஊக்கத்தோடு பேசினார்: "கறுப்புச் சட்டை வீரர்களே, நகரத்தார்களே, நாட்டுக் குழப்பங்கள் மலிந்து கிடந்த நாட்களை இனி நாம் காண இயலாது. செல்வமும் களிப்பும் நிறைந்த நாட்களைளளயே நாம் இனித் தரிசிப்போம். இதில் எள்ளளவும் ஐயம் இல்லை. பல திறப்பட்ட கட்சிப் போராட்டங்கள் இத்தாலியைப் பாழாக்கின; அவைகளும் மடிந்தொழிந்தன. இனி நீங்கள் விரைவாக வேலை செய்து, சீர்திருத்த இத்தாலியை விரைவிற் கண்டு களித்தல் வேண்டும். தொழிலாளிகளே, நீங்கள் உங்கள் முதலாளிகளோடு ஒன்றுபட்டு வேலை செய்தல் வேண்டும். உங்கள் உரிமைகளைக் காப்பாற்ற இதோ யான் இருக்கின்றேன். முதலாளிகளும் நீங்களும் விரைவில் ஒரே நிலையில் இருக்கக் காண்பீர்கள். உங்கள் துன்பங்கள் யாவும் பகலவனைக் கண்ட பனிபோல உங்களை விட்டு மறைந்துவிட்டன. இனி நீங்கள் உங்கள் தாய்நாட்டு முன்னேற்றம் ஒன்றையே கருத்திற் கொண்டு, இரவு பகலாக உழைத்து வாருங்கள். உங்கள் உழைப்பாற்றான் தாய்நாடு உயரும்.

"என் வீரர்களே, நாம் ரோமாபுரியை ஏன் கைப்பற்றினோம்? அதனைத் தூய்மைப்படுத்தவும், பிற கட்சியாரிடமிருந்து அல்லற்படாமல் விடுதலை பெறவும், இத்தாலிக்கு மகுடமாக்கவுமே ரோமாபுரியை நாம் கைப்பற்றினோம். விரைவில் ரோமாபுரி விளக்கமுறும்; ஐரோப்பிய நகரங்களின் மகுடமாக இலங்கும். சீஸர் முதலிய பெருவீரர்கள் காலத்து ரோமாபுரியாக இப்போது அதனை மாற்ற வேண்டுவது நமது கடமை அன்றோ? சகோதரர்களே, இத்தாலிய இரத்தம் நமது உடலில் ஓடும் வரையில், நாம் ரோமாபுரிக்கு வணக்கம் செலுத்துவோமாக. முதியவர்களே, நீங்கள் உங்கள் வாழ்நாட்களைக் கழிக்க

இடமாயிருந்த இத்தாலியை வணங்குங்கள். இளைஞர்களே, நீங்கள் இனிப் புகழோடு பொலியக் காரணமாக விளங்கும் இத்தாலியை உங்கள் தாய் நாட்டைப் பெருமிதத்தோடு நோக்கி வணங்குங்கள். உங்கள் நரம்புகளில் ஒரு துளி உதிரம் ஓடும் வரையில் உங்கள் தாய் நாட்டை மறவாதீர்கள்! மறவாதீர்கள்!! இத்தாலி நீடு வாழ்க! பாஸிஸ்டு அரசாங்கம் நீடு வாழ்க!!"

முசோலினி மிலான் நகரத்தில் செய்த சொற்பொழிவொன்றில் பின்வருமாறு கூறினார்:

"தாய்நாட்டு மக்களே, பாஸிஸ்டு அரசாங்கம் நாட்டைச் சீர்குலைக்க வந்ததன்று. நாட்டை மிக உன்னத நிலைக்குக் கொண்டு வரவே அது தோன்றியுள்ளது. அது போப்புக் குருவின் அரசியலில் சம்பந்தப்படாது. மதத்தை வளர்ப்பதில் பாஸிஸ்டு அரசாங்கம் முன் அணியில் நிற்கின்றது. மதமே அதன் உயிர். நாட்டுப் படைக்குப் பாஸிஸ்டு அரசாங்கம் மிக்க மரியாதையைச் செலுத்துகின்றது. தாய்நாட்டுப் பற்றுடைய ஒவ்வோர் இத்தாலியனும் நாட்டுப் படையைத் தன் உயிரெனக் கருதி மாரியாதை செய்தல் வேண்டும். நாட்டுப்படையின்றேல், ஒரு நிமிடமேனும் நாம் சுயேச்சையாக வாழ இயலுமா என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள்!

"இத்துணை ஆண்டுகளாகச் செயலாற்றச் சக்தி அற்றுக்கிடந்த சட்டசபையையும் நாம் மூடிவிட வில்லை. இனியாயினும், அது சீர்படுமா என்பதைப் பரிசோதிக்க வேண்டும். அதனாற் சிறிதும் பயனில்லை எனக் காண்போமாயின், நாம் அதனை மூடிவிடுவோம். நம்முடைய பகைவர்களை நாம் மன்னித்துவிட்டோம்; அவர்கள் சீர்திருந்தி நம்மோடு சேரவோ, நாட்டுக்கு

உழைக்கவோ வேண்டுமென்பதை அறிந்துகொள்ள ஒரு வருடத் தவணையும் தந்திருக்கின்றோம். இனி நம்மை அசைக்க முடியாதென்பதையும் அவர்கள் அறிந்து கொள்வார்களாக.

"கறுப்புச்சட்டை வீரர்களே, நீங்கள் புகழ்வாய்ந்த இத்தாலி மக்களாவீர்கள். உங்கள் நரம்புகளில் புகழ்பெற்ற உங்கள் மூதாதையர் இரத்தம் ஓடுவதை நீங்கள் உணருங்கள். மிகப் பழைய காலத்திலிருந்தே சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் நமது இத்தாலியச் சமூகம், இனியும் சிறப்பெய்துதல் வேண்டும். நாம் உடனே அதற்காவன செய்தல் வேண்டும். ஒருவிதப் பயனையும் எதிர்நோக்காது கல்லூரிகளையும் கலாசாலைகளையும் விட்டு எனது இயக்கத்திற் சேர்ந்து வெற்றியை அளித்த வீரர்களே, உங்கள் மன மாற்றத்திற்குக் காரணம் யாதென்பதை அறிந்தீர்களா? அஃது உங்கள் தாய்நாட்டுப் பெருமையே ஆகும். வீரம் செறிந்த இந்த இத்தாலி, இனி உலகம் உள்ளளவும் தன் பெருமையையும் புகழையும் நிலை நிறுத்தும் என்பதை மெய்யாகவே உங்கட்குக் கூறுகின்றேன்.

"நான் இத்தாலியச் சமூகத்துக்கு உழைக்கும் சேவகன். நான் சில சமயங்களில் கடுந்தோற்றமுடையவனாகக் காணப்படுவேன்; சில வேளைகளில் பிடிவாதக்காரனாகவும் காணப்படுவேன். அதனால், நீங்கள் தளர்வெய்தலாகாது. நான் பொறுப்பு வாய்ந்த வேலையை ஏற்றுள்ளதால், அங்ஙனம் காணப்படுவேன். எனது கடமையை நிறைவேற்றுவதில் நான் பிடிவாதக்காரனாக இருந்துதான் ஆக வேண்டும். நான் எனது கடமையில் தவறி நடப்பேனாயின், இத்தாலியச் சமூகமே கவிழ்ந்துவிடும்.

"நாம் நமது இயக்கத்தைத் தோற்றுவித்தபோது சோதிடர்களும் வானசாத்திரிகளும் நம்மை ஏளனஞ் செய்தார்கள்; புறக்கணித்தார்கள். பின்னர் உள்ளதை உள்ளவாறு கூறத் தெரியாது, எப்பொழுதும் தோல்வியையே தரிசிக்கும் வேதாந்திகள், நமது இயக்கம் சில நாள் வாழ்வுடையது எனக்கூறி ஈகையாடினார்கள். ஆனால், என் தோழர்களே, நமது இயக்கம் நெடுங்காலம் நிலைத்திருக்கும். ஏன்? அதை ஏற்படுத்தின நாம், அதனை வலுப்படுத்திவருகிறோம். அது நெடுங்காலம் இருத்தலை நாம் மனமார விரும்புகின்றோம். அங்ஙனமிருக்க, அதுசில நாள் வாழ்வுடையது எனக் கூறுதல் யாங்ஙனம் இயலும்? நமது இயக்கம் ஒழியுமாயின், இத்தாலி ஒழிந்ததாகவே கருதுதல் வேண்டும். ஏன்? இன்றைய நிலையில் நமது இயக்கம் ஒன்றே இத்தாலியை உன்னத நிலைக்குக் கொண்டுவர இரவு பகலாக உழைத்து வருகின்றது. ஆதலின், பாஸிஸ்டு இயக்கம் இத்தாலியின் உயிர் நாடியாக இலங்குகின்றதென்பதை யான் மீண்டும் இயம்புதல் வேண்டுமோ?"

ரோமாபுரிப் பிரசங்கத்தில் முசோலினி, "இத்தாலிய அரசியல் மாறுதல் அடைந்தது; மக்கள் வாழ்க்கை முறையும் மாறுதல் அடைந்து வருகின்றது; நாட்டுக்கு உழைப்போர் நிலையும் மாறுதல் உற்று வருகின்றது. உங்கள் முன்னிலையில் நின்று பேசுகின்ற யான் உள்பட நாம் அனைவரும் இத்தாலியச் சமூகத்துச் சேவகர்கள் ஆவோம். இவ்வுண்மையை நானும் நீங்களும் மறத்தல் ஆகாது. 'சமூகத்துச் சேவகர்கள்' என்பதை நினைக்குந்தோறும் நாம் இறும்பூது எய்துதல் வேண்டும். ஒவ்வோர் உத்தியோகஸ்தனும் தான் ஒரு போர் வீரன் நாட்டைக் காக்கக் கடமைப்பட்டவன் என்பதை மறத்தலாகாது. நீங்கள்

அனைவரும் உண்மை இத்தாலியர்களாக இலங்குதல் வேண்டும்" என்று வெகு இனிமையாகப் பேசி, அவர்கள் உள்ளங்களில் நாட்டுப் பற்றைப் பதியச் செய்தார்.

நேபிள்ஸ் நகரில் அவர் பேசுகையில், "நாம் நம் பழைய சித்திரப் பெருமையையும், கலைவன்மை யையும், மிகப் பழைய நாகரிகத்தையும் என்றும் நினைவில் இருத்துதல் வேண்டும். அந்நினைவு நிலைபெறுமாயின், நாட்டுப்பற்று நம்மிடையே தலைநிமிர்ந்து நிற்கும். நாட்டுப்பற்று இன்றேல், நாமும் நமது நாடும் பிறர்க்கு அடிமையாவது திண்ணம். நாம் சுயேச்சையாக வாழ்வதை நீங்கள் விரும்புகிறீர்களா; பிறர்க்கு அடிமை ஆதலை விரும்புகிறீர்களா" என்று வெகு உருக்கமாகப் பேசினார்.

முசோலினி உடைனி நகரிற் பேசியபோது, "நண்பர்களே, ஊக்கம் என்பது மனித சமூகத்துக்கு உயிர் நாடியாகும். ஊக்கம் இன்றேல், வாழ்வில்லை; சமூகம் இல்லை; நாடில்லை; நாமில்லை. நாம் ஊக்கமுடையவர் களாக இராவிடின், நடைப்பிணங்களாகவே கருதப்படு வோம். அத்தகைய வாழ்வினால் நாம் எய்தும் பயன்றான் யாது? இத்தாலியர்கள் ஊக்கத்தை ஊட்டி வளர்ப்பார்களாயின், இத்தாலியச் சமூகம் இறுமாந்து நிற்கும். இத்தாலி - இயற்கை அழகு வாய்ந்துள்ள இத்தாலி - பூலோக சுவர்க்கமாக விளங்கும். நாம் நமது தாய் நாடாகிய இத்தாலி விரைவிற் பொன்னாடாகப் பொலிவுறுவதைக் கண்டு களிப்போம். மத்திய தரைக் கடலால் முப்புறமுஞ் சூழப்பட்டுள்ள நமது நாடு, என்றும் பெருமையும் செல்வமும் பெற்று ஒளிர்வதாகுக!" என்று அழகாகப் பேசி முடித்தார்.

உள்ளத்தை உருக்கும் இத்தகைய அரிய சொற்பொழிவுகளால், மகாவீரரான முசோலினி, மக்கள்

மனத்தைக் கவர்ந்தார். இவர் சென்ற இடமெல்லாம் குதூகல வரவேற்பினைப் பெற்று மகிழ்ந்தார். 'இத்தாலியின் இரட்சகர்!' எனப் பொது மக்கள் முழக்கமிட்டதைக் கேட்டு களித்தார்; ரோமாபுரிக்கு மீண்டும் வந்து, தமது சீர்திருத்த வேலைகளைத் தொடங்கினார்.

1924ஆம் ஏப்பிரல் மீ 6உ சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்வில் பாஸிஸ்டு வீரர்கள் ஐம்பது லட்சம் ஓட்டுகளால் பெருந்தொகையினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அத்தேர்தலால் இத்தாலியர்கள் பாஸிஸ்டு இயக்கத்தைப் பெரிதும் ஆதரிக்கிறார்கள் என்பது குன்றின் மீதிட்ட விளக்குப் போலாயிற்று. அதே ஆண்டு மேமீ 24உ சட்டசபை கூடியது. அரசர் சட்டசபையைத் திறந்து வைத்துச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார். அவ்வமயம், தோல்வியுற்ற சம தருமக் கட்சியினர், சட்டசபைக்குள் நுழைந்து, கலகம் விளைத்தனர். அப்பொழுது முசோலினி எழுந்து, "பொதுமக்கள் அரசாங்கம் செவ்வனே நடைபெறுவதை விரும்புகிறார்கள். பூசலும் கூச்சலும் குழப்பமும் இனி இத்தாலியில் தலைகாட்டலாகாது. பொதுமக்கள் விருப்பத்திற்கு மாறாக நடப்பவர் இரக்கங் காட்டாது கடுமையாகத் தண்டிக்கப் படுவார்" என்று கடுஞ்சினத்தோடு கூறி அமர்ந்தார். அப்பொழுது அவர் முகம் அவர் தாம் கூறுவதைச் செய்து காட்டுபவர் என்பதை எடுத்துக் காட்டியது. பகைவர் அஞ்சி வாளா இருந்தனர்.

ஒருசில சீர்திருத்தங்கட்குப் பின்னர் அரசாங்கம் சிறிது நிலையுற்றுத் தன் கடனாற்றத் தொடங்கியபோது, திடீரென அதன் அஸ்திவாரத்தையே கலகலக்கச் செய்த சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அஃதாவது, இத்தாலியில் பெரிய செல்வந்தரும், சமதருமக் கட்சியின் பிரபலஸ்தர்களுள்

ஒருவரும், சட்டசபை அங்கத்தினருமான மாட்டியோட்டி (Matteotti) என்பவர் படுகொலை செய்யப்பட்டார். அவர் கொலை செய்யப்படுவதற்கு முன் நாள் சட்டசபையில் முசோலினியைக் கண்டித்துப் பேசினார். அடுத்த நாள் அவர் திடீரெனக் காணப்பட்டிலர். இதனை அறிந்த முசோலினி உடனே அவரைத் தேடுமாறு போலீசாருக்குக் கட்டளையிட்டார். போலீசார் இரண்டு நாட்களுக்குப் பின்னர் அவரது ஆவியற்றவுடலைக் கண்டெடுத்துக் கொணர்ந்தனர். அவர் சிலரால் மோட்டாரில் அழைத்துச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் எனப் போலீஸார் நம்பினர். பின்னர், அக்கொலைக்குக் காரணராக இருந்தவர்கள் பாஸிஸ்டு வீரர்களே என்பது வெளி ஆயிற்று. இதனைக் கேட்டதும் முசோலினி திடுக்கிட்டுப் போனார். தம் வீரர்கள் இத்தகைய கேவலச் செயலைச் செய்தார்கள் என்பதைச் சிறிதும் இவர் நம்பவில்லை. இவர் சட்டசபையிற் பேசியபோது, "மாட்டியோட்டியைக் கொலை செய்தவன் எவனாயிருப்பினும், அவனைக் கடுமையாகத் தண்டித்தல் வேண்டும். கொலைசெய்யப்பட்ட அவரைப் பற்றி வருந்துவோர் எவரேனும் இருப்பின், நான் அவர்களில் முதல்வனாக இருப்பேன். இத்தகைய செயலை நான் அறவே வெறுக்கிறேன்!" என்று மிகுந்த வருத்தத்துடனும் கோபத்துடனும் கூறினார். இங்ஙனம் கூறி, முசோலினி, சட்டசபை நடவடிக்கைகளை மறுநாள் வரையில் தள்ளி வைத்தார்.

மாட்டியோட்டியின் கொலைக்கும் அரசாங் கத்துக்கும் ஒருவிதச் சம்பந்தமும் இல்லை. ஆயினும், சமதருமக் கட்சியினர் அரசாங்கத்தைக் கவிழ்க்கத் தக்க சமயம் அதுவே எனத் துணிந்து, முசோலினியும் அக்கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாக நாடெங்கும் பிரசாரம் செய்தனர். முசோலினி இப்பிரசாரத்தால்

மனமுடைந்து, இரவு பகல் தூக்கமின்றி வருந்தினர். 1925ஆ ஜூன்மீ 12உ செனேட்டுச் சபை, பாஸிஸ்டு இயக்கத்துப் பெருந்தலைவர் சிலரைக் குற்றவாளிகள் எனத் தீர்மானித்தது. அதை அறிந்த முசோலினி மீண்டும் ஒருமுறை விசாரணை செய்து முடிவு கூறுமாறு செனேட்டர்களை வற்புறுத்தினார். அவர்கள் மீண்டும் விசாரணை நடத்திச் சிலரைக் குற்றவாளிகள் என நிரூபித்துக் காட்டினார்கள். உடனே முசோலினி அக்குற்றவாளிகளிற் சிலரை நாடு கடத்தினார்; சிலரைக் கட்சியினின்றும் விலக்கினார்; சிலரை வேலையினின்றும் நீக்கினாா. முசோலினி இவ்வளவு நியாயமாக நடந்தும், பகைவர் திருப்தி அடையவில்லை. அவர்கள் பாஸிஸ்டு அரசாங்கத்தையே ஒழித்துவிடத் தீர்மானித்து, அரசாங்கத்துக்கு விரோதமாகப் பிரசாரம் செய்ய லானார்கள். இந்நிலையில் கோழை மனம் படைத்த சில பாஸிஸ்டு கட்சியினர் அக்கட்சியினின்றும் விலகினர்.

பாஸிஸ்டு கட்சிக்கு எதிரான கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்து நாடெங்கும் முசோலினி அரசாங்கம் பயனற்றதெனப் பிரசாரம் செய்தன. மாட்டியோட்டி கொலை செய்யப்பட்டதைப் பற்றி எதிர்க் கட்சியினர் வருந்தவில்லை. முசோலினியைத் தாக்க அக்கொலையை ஒரு சிறந்த பற்றுக்கோடாகக் கொள்ள நேர்ந்ததை நினைத்தே அவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். இவ்வுண்மையை உணர்ந்த முசோலினி, எதிர்க்கட்சியாரின் ஆரவாரத்தைக் கண்டு சிறிதும் அஞ்சவில்லை. "இத்தாலியின் உயிர் நாடியாக விளங்கும் பாஸிஸ்டு இயக்கத்தையும் பாஸிஸ்டு அரசாங்கத்தையும் ஒழிக்க இவ்வெதிரிகளால் இயலாது. கேவலம் ஒருவன் கொலை செய்ப்பட்டதைக் காரணமாகக் கொண்டு இவர்கள் செய்யும் ஆரவாரத்தால் இவ்வியக்கம்

மாண்டு விடாது" என்று மகா வீரரான முசோலினி தமது வரலாற்றில் புன்சிரிப்புத் தோன்ற எழுதியுள்ளார்.



எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு மாறாகத் தொடர்ந்து பிரசாரம் செய்தன. அப்பிரசாரம் ஆறுமாத காலம் நடைபெற்றது. இத்தாலிக்குப் புறம்பே இருந்த இத்தாலியர்கள் அப்பிரசாரத்துக்குப் பொருளுதவி செய்து

வந்தார்கள். அவர்கள் முசோலினியின் அரசாங்கத்தை அடியோடு ஒழித்துவிட விரும்பினார்கள். எனினும், பகைவர்களால் பாஸிஸ்டு அரசாங்கத்தை அணுவளவும் அசைக்கக் கூடவில்லை. முசோலினி பகைவர் செய்த எதிர்ப் பிரசாரத்தைப் பற்றிக் கவலைப்படாமல், பொறுமையாக இருந்து, அரசியல் முன்னேற்றத்திற்கு உழைத்து வந்ததால், பொது மக்கள் பாஸிஸ்டு அரசாங்கத்தைப் பெரிதும் விரும்பினார்கள். மேலும், முசோலினி 1925ஆ சட்ட சபையில் வெகு உருக்கமான சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அச்சொற் பொழிவுகளுள் ஒன்றில் பகைவர் செய்த வீணான எதிர்ப் பிரசாரங்களைப் பொருட்படுத்தாமல் பாஸிஸ்டு அரசாங்கம் நாட்டைச் சீர்படுத்தி வந்ததையும், பகைவர் நாட்டைப் பாழாக்கி வந்ததையும் விளக்கிக் காட்டினார். பகைவர், அரசாங்கத்தை ஒழிக்க வேறு உபாயம் அறியாது வாளா இருந்தனர். முசோல்னி மீண்டும் பெருவெற்றி பெற்றார். அவர் உத்தமர் ஆதலின், வெற்றி பெற்றார்; பாஸிஸ்டு கொள்கைகளையும் அரசாங்கத்தையும் மீண்டும் சீர்திருத்தலானார்.

# 11. சீர்திருத்தங்கள் - 3

முசோலினிக்கு முன்னிருந்த பிரதம மந்திரிமார் நாட்டு வரவு செலவுத் திட்டத்தைச் சரிப்படுத்த இயலாமல் நாட்டுக்குப் பெருங்கேடு விளைத்து வந்தனர்; நாடு உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்களில் ஆழ்ந்து கிடந்தது. ஐரோப்பியப் பெரும்போர் நடந்த போது இத்தாலி நாடு, அமெரிக்கா இங்கிலாந்து ஆகிய இருநாடுகளிடமிருந்தும் பெருந்தொகையைக் கடனாக வாங்கி இருந்தது. அக்கடனை ஒழுங்காகத் தீர்க்க வகையின்றிப் பாக்டா முதலிய பிரதம மந்திரிமார் கடன் சுமையைப் பெருக்கி வந்தனர். இத்தகைய கேவலமான செல்வ நிலையிலும் அறிவுள்ள அமைச்சன் வரவு செலவுத் திட்டத்தைச் சில சீர்திருத்தங்களோடு சரிக்கட்டி இருக்கக்கூடும். மந்திரிகளாக இருக்க அருகரல்லாத பாக்டா முதலியோர் போதுமான அறிவும் ஆற்றலும் அற்றிருந்தமையால், நாட்டுச் செல்வ நிலை மிகவும் கேவல நிலையில் இருந்தது. மேலும், முன்னைய மந்திரிமார் சமதருமக்கட்சி போன்ற பிரபலக் கட்சிகளின் சிபாரிசைக் கொண்டு, வீணாகப் பலரை உயர்ந்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தி இருந்தனர். இம்மூடச் செய்கையாலும் நாட்டுப் பணம் பெருவாரியாக வீணாயிற்று. பணப்பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் அப்போதைய நிலைமையைச் சீர்படுத்தக் கரன்ஸி நோட்டுகளை அரசாங்கம் வெளியிட்டு வந்தது. மேலும் ஒரு மூடச் செயலாகும். இத்தகைய அறிவீனச் செயல்களால் பணப்

பஞ்சம் ஏற்பட்டு, ஒவ்வொரு மந்திரி சபையும் நிலைமையைச் சமாளிக்கச் சத்தியற்று வீழ்ந்தொழிந்தது.

இக்கேவல நிலையில் பாஸிஸ்டு அரசாங்கம் அரசியலை ஏற்றுக் கொண்டதால், அஃது ஆழ்ந்து யோசித்து எக்காரியமும் செய்ய வேண்டி இருந்தது. முசோலினி நிலைமையை நன்கறிந்தவர் ஆதலால், தக்க பாதுகாப்புடனும் முன் யோசனையுடனும் நாட்டுச் செல்வ நிலையை ஒரு நிலைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்தார். அவர் பேராசிரியர் ஆர்பெர்ட்டொ டிஸ்டபாணி (Prof. Alberto De Stapani) என்னும் பொருளாதார நிபுணரைத் தமது பொருளாதார அமைச்சராக நியமித்து, பொருளாதார நிலையைச் செவ்வைப்படுத்த எல்லாவித உரிமைகளையும் அளித்தார். அப்பேராசிரியர் முசோலினியின் பெருந் துணையைக் கொண்டு, தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் நாட்டுச் செல்வ நிலையைச் சரிப்படுத்தலானார். பழைய நிலைமையை அடியோடு மாற்றி, எல்லா உத்தியோகங் களிலும் புதிய மாறுதல்களைச் செய்தார்; முன்னர் இருந்த மந்திரிமார் வீணாக ஏற்படுத்தியிருந்த உத்தியோகங்களை நீக்கினார்; படையிலும் ஒரு வேலையும் இன்றி உண்டு உறங்கிக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான உதவியற்ற போர் வீரர்களையும் உத்தியோகஸ்தர்களையும் அவர்கள் பதவிகளிலிருந்து நீக்கினார்; இரயில்வே ஸ்தாபனத்திலும் பலரை வேலையினின்றும் விலக்கினார். இம்மாறுதலால், நாட்டுச் செலவு பெரிதும் குறைக்கப்பட்டது. அவர், இனி உள்நாட்டுக் கடனை அதிகப் படுத்தலாகாதென முடிவு செய்தார்.

அப்பேராசிரியர் உணவுப் பொருள்களின் மீது விதிக்கப்பட்டிருந்த வரியை நீக்கினார்; தொழில் வரியை அதிகப்படுத்தாமற் குறைத்தார்; இறப்பு வரியை ஒழித்தார்;

சாப்பாட்டு விடுதிகளோடு கூடிய பள்ளிக் கூடங்களுக்கு இருந்த வரியை ஒழித்தார். இவ்விதச் சீர்திருத்தங்களாலும் பிறவற்றாலும் இத்தாலிய மக்கள் முன்னிருந்த அரசாங்கங்களால் ஏற்பட்ட வரித் துன்பங்களால் மனமுடைந்திருந்த மக்கள் பாஸிஸ்டு அரசாங்கத்தை மனமார வாழ்த்திச் சுகமாக வாழலானார்கள்.

பேராசிரியர் இங்ஙனம் செய்த சீர்திருத்தங்களால், வரவு செலவுத் திட்டத்தைச் சரிப்படுத்தினார். ஆனால், 1926ஆ பணக்காரர்களாக இருந்த எதிர்க்கட்சியினர் செய்த வாணிபத் தந்திரங்களால், இத்தாலியின் நாணய மாற்றுத் திடீரெனக் குறைந்தது. இதனால், வெளிநாட்டு மதிப்புக் குறைந்தது. இந்நிலையில் பேராசிரியர் தமது பதவியை விட்டு விலக, கௌண்டு வால்பி என்பவர் பொருளாதார மந்திரியார் ஆனார். அப்போது முசோலினி, 'இந்நாணய மாற்றுக் குறைவை அடியோடு ஒழித்தல் வேண்டும்' எனத் துணிந்து, ஆகஸ்டு மாதத்தில், பிஸாரோ நகரில் பின் வருமாறு ஓர் அரிய சொற்பொழிவாற்றினார்:

"செல்வர்களே, வியாபாரிகளே, நான் இப்போது உங்களிடத்தேதான் பேசுகின்றேன்; உங்களைத்தான் எச்சரிக்கை செய்கின்றேன். இப்பொழுது என் பேச்சு இங்கு மட்டும் அன்று; இத்தாலி முழுவதும் ஏன்? உலக முழுவதும் கேட்கும். நாணய மாற்றுக் குறைவை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன்; வெறுக்கிறேன். அக்குறைவு நமது நாட்டு நலனைப் பெரிதும் பாதிப்பதாகும். நான்கு வருட காலமாகக் கஷ்டப்பட்டுச் சரிப்படுத்திய செல்வநிலை இப்போது பாதிக்கப்படுதலை யான் விரும்பவில்லை. நாணய மாற்றுக் குறைவை யான் அறவே எதிர்க்கிறேன். நீங்கள் இன்னும் எத்தகைய துன்பந்தரினும், பாஸிஸ்டு அரசாங்கம் செல்வ நிலையை ஒரேபடியில் நிலைநிறுத்தும் என்பதை

உண்மையாகவே உங்கட்குக் கூறுகின்றேன். இங்ஙனம் நாணய மாற்றைக் குறைவை யான் அறவே எதிர்க்கிறேன். நீங்கள் இன்னும் எத்தகைய துன்பந் தரினும், பாஸிஸ்டு அரசாங்கம் செல்வ நிலையை ஒரே படியில் நிலைநிறுத்தும் என்பதை உண்மையாகவே உங்கட்குக் கூறுகின்றேன். இங்ஙனம் நாணய மாற்றைக் குறைக்கக் காரணரா யிருப்பவர் கண்டுபிடிக்கப்படின், கடுந் தண்டனைக் குள்ளாவார் என்பதையும் இப்பொழுதே கூறுகின்றேன்."

இச்சொற்பொழிவு பகைவர் உள்ளத்தைக் கலக்கியது. இதனால், நாணய மாற்றுக் குறைவும் மறைந்தது.

பின்னர் முசோலினி, போரால் உண்டான கடனைச் செவ்வைப்படுத்த வழி தேடினார். இவர், நம்பிக்கையுள்ள பொருளாதார நிபுணர் சிலரை வாஷிங்டன் (அமெரிக்காவின் தலைநகர்) என்னுமிடம் சென்று, அமெரிக்க அரசாங்கத்தோடு யுத்தக் கடனைப் பற்றிச் சமரச முடிவு செய்து வருமாறு அனுப்பினார். அவர்களும் அமெரிக்கா சென்று, திருப்திகரமான முறையில் ஓர் ஒப்பந்தஞ் செய்து, மீண்டனர். அவ்வொப்பந்தப்படி, இத்தாலி இன்றும் அக்கடனைச் சிறிது சிறிதாக ஒழித்து வருகின்றது. அவ்வொப் பந்தத்தால் அமெரிக்கரும் இத்தாலியரும் மன அமைதியுற்று, நேசப்பான்மை கொண்டனர்.

பின்னர் முசோலினி பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு அத்தகைய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டு, யுத்தக்கடன் பிரச்சினையை ஒருவாறு ஒழித்தார். இதனால், இத்தாலியர்கள் முசோலினியைத் தம் இரட்சகர் எனக் கொண்டாடினர். முதல் தவணையாக அமெரிக்காவுக்குச் சேர வேண்டிய கடன் தொகையைக் குறித்த காலத்திற்குள் அனுப்புவதற்கு அரசாங்கத்தை எதிர் நோக்காமல் ஒவ்வோர் இத்தாலியனும் மனம் உவந்து பணவுதவி செய்தான்.

இதனால், முதல் தவணைப் பணம் செலுத்தப்புட்டது. அது முதல் ஒவ்வோர் ஆண்டும் இத்தாலிய அரசாங்கம் யுத்தக் கடனை இரு நாடுகளுக்கும் செலுத்தி வருகின்றது. பிரான்ஸ் முதலிய நாடுகள் யுத்தக் கடன் தொகையை அமெரிக்காவுக்குச் செலுத்தத் தவறியுள்ள இக்காலத்தில் இத்தாலி தனது வாக்குறுதிப்படி நடந்து வருதல் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

1927ஆ டிசம்பர் மீ இத்தாலிய நாணய மாற்றுத் தங்கச் செலவாணியாக (Gold Standard) மாற்றப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்தின் வரவு செலவுத் திட்டமும் சரிப்படுத்தப் பட்டு, இத்தாலியின் செல்வநிலை அசைவுறா நிலையில் அமைக்கப் பெற்றது.

அயல்நாட்டுச் சமபந்தத்திலும் முசோலினி பெரு மாறுதல்களைச் செய்துள்ளார். இவருக்கு முன்னிருந்த பிரதம மந்திரிமாரின் மூடச் செயல்களால் இத்தாலி மூன்றாந் தரமான நாடாகக் கருதப்பட்டு வந்தது. இத்தாலி உள்நாட்டுக் குழப்பங்கள் மலிந்த நாடெனை வல்லரசுகள் நினைக்கும்படி முன்னிருந்த அரசாங்கங்கள் நடந்து கொண்டன. வல்லரசுகள் இத்தாலியைப் பற்றி எண்ணியிருந்த தவறான எண்ணங்களை ஒழிக்கவும், இத்தாலியை முதல்தரமான வல்லரசாக்கவும் முசோலினி விரும்பினார். இம்முயற்சியில் சிலர் இவருக்கு விரோதமாகக் கிளம்பினர். பாரிஸில் இத்தாலிய ஸ்தானீகராக (Italian Consul) இருந்தவர், முசோலினி பிரான்ஸைப் பொருட்படுத்தாமல் நடந்து வருவதாகக் கண்டித்துப் பாஸிஸ்டு அரசாங்கத்தைப் பற்றி அவதூறுகள் பரப்பினார். இதனை அறிந்த முசோலினி, அவரை நேரே ரோமாபுரிக்கு வரவழைத்தார்; சிறிது நேரம் அவரோடு பேசிய பின்னர் அவரை வேலையினின்றும் விலக்கிவிட்டார்; உடனே, இத்தாலி எப்போதும்

பிரான்ஸோடு நேசப்பான்மையுடன் இருந்து வருவதாகப் பிரஞ்சு அரசாங்கத்துக்குத் தந்தி மூலம் அறிவித்தார். இதனால், பிரஞ்சு அரசாங்கம் முசோலினியை மதிக்கத் தொடங்கியது; கொல்லரின் புத்திரராகிய முசோலினி சிறந்த இராச தந்திரியார் என்பதை அப்பொழுதுதான் பிரஞ்சு அதிகாரிகள் அறிந்தார்கள்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், லாசேனில் நடந்த சர்வதேச மகாநாட்டுக்கு முசோலினி சென்றிருந்தார். அங்கு இவர் பிரஞ்சு மந்திரிகளுடனும் பிரிட்டிஷ் மந்திரிகளுடனும் பேசிய மாதிரியிலிருந்து, ‘முசோலினி குற்றமற்றவர்; சிறந்த அரசியல் நிபுணர்; சமாதானப் பிரியர்; பாஸிஸ்டு அரசாங்கமே இத்தாலிக்கு நன்மை தரவல்லது’ என்று அவர்கள் நம்பினார்கள்; முன்பு பாஸிஸ்டு அரசாங்கத்தினிடம் கொண்டிருந்த வெறுப்பை ஒழித்தார்கள்.

முசோலினி பிரதம மந்திரியார் ஆனதும், 1923ஆ ஓர் அரசியற் போராட்டம் ஏற்பட்டது. கிரீஸ் தேசத்துக்குச் சர்வதேச சங்கத்திலிருந்து ஒரு கமிஷன் சென்றது. அக்கமிஷன் கிரீஸ், அப்பேனியா இவ்விரு நாடுகளின் எல்லைகளை நிர்ணயிக்கச் சென்றது. அக்கமிஷன் தலைவர் ஓர் இத்தாலியர். அவர் கிரீஸ் தேசத்தில் கொல்லப்பட்டார். இதை அறிந்த முசோலினி, “அவரைக் கொன்றவரைக் கண்டுபிடித்துத் தண்டித்தல் வேண்டும்; கொலைக்குத் தண்டமாக ஐந்து கோடி லையர் (lire) (இத்தாலிய நாணயம்) கொடுக்க வேண்டும். அவரது ஆவியைக் குறித்து ஏதேன்ஸ் நகரக் கோயிலில் பிரார்த்தனை நடத்துதல் வேண்டும்” என்று கிரீஸ் அரசாங்கத்துக்குக் கண்டிப்பான உத்தரவிட்டார்; கிரீஸ் இக்கட்டளைக்கு உடன்படவில்லை. அதனாற் சினங் கொண்ட முசோலினி, ஒரு படையை ஏவிக் கிரீசுக்குச் சொந்தமான தீவு ஒன்றைக்

கைப்பற்றும்படி செய்தார். கிரீஸ் தேசம் இதனைச் சர்வதேச சங்கத்துக்கு அறிவித்து முறையிட்டது. சர்வதேச சங்கத்துக்கு இவ்விஷயத்தைப் பற்றி விசாரணை புரிய அதிகாரமில்லையென முசோலினி கூறிவிட்டார். சர்வதேச சங்கம் செய்வதறியாது விழித்தது. விசாரணை செய்தால், இத்தாலி சர்வதேச சங்கத்தினின்றும் விலகிக்கொள்ளும்; விசாரணை செய்யாமல் இருப்பின், சர்வதேச சங்கம் வலியற்றதென உலகத்தாரால் மதிக்கப்படும். அதனால், சர்வதேச சங்கம் இச்சங்கடமாமன சந்தர்ப்பத்தில் நிலைமையை ஒருவாறு சமாளித்தது. அஃது, 'இத்தாலியர் கைப்பற்றியிருந்த தீவைக் கிரீஸ் தேசத்தினிடம் விட்டுவிடுதல் வேண்டும்; கிரீஸ், முசோலினி விரும்பிய பணத்தைக் கொடுத்து விடுதல் வேண்டும்' என்று முடிவு செய்தது. இம் முடிவை இரு திறத்தாரும் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டனர். அன்று முதல் இவ்விரு நாடுகளும் நேசமாக இருந்து வருகின்றன.

கேப்ரியல் டி அனன்சியோ என்னும் புலவர் கைப்பற்றிய பியூமி (Fuime) என்னும் பிரதேசம், இரபல்லோ (Rapallo) என்னும் இடத்தில் நடைபெற்ற ஒப்பந்தத்தால் தனிப் பிரதேசமாக மாறியது. அதனை எவ்விதத்தும் இத்தாலியோடு சேர்க்க வேண்டுமென்று முசோலினி ஆவல் கொண்டார்; அடுத்த நாடாகிய யூகாஸ்லாவியாவுடன் ஓர் இரகசிய ஒப்பந்தஞ் செய்து கொண்டார். அதன்படி பியூமிப் பிரதேசம் இத்தாலியோடு சேர்க்கப்பட்டது. டால்மேடியாப் பிரதேசம் யூகோஸ்லாவியாவுடன் சேர்க்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தால், முசோலினி ஒரு பிரதேசத்தைச் சேர்த்தார்; ஒன்றை அயல்நாட்டுக்கு விட்டார்; அயல் நாட்டுடன் அரசியல் முறையில் கலக்கமின்றி அமைதியாக வாழ ஏற்பாடு செய்துகொண்டார்.

அன்று முதல் இன்றளவும் இவ்விரு நாடுகளும் நேசமாக இருந்து வருகின்றன.

செயிண்டு ஜெர்மெய்ன் (St. Germain) என்னும் இடத்தில் நடந்த ஒப்பந்தப்படி ஆஸ்டிரியாவின் தெற்கெல்லை இத்தாலியின் எல்லைப் புறத்தோடு சம்பந்தப்பட்டிருந்தது. அவ்விடத்தில் நான்கு லட்சம் இத்தாலியரும் இரண்டு லட்சம் ஜெர்மானியரும் இருந்து வருகின்றனர். அந்த ஜெர்மானியர் இத்தாலியரைப் போற்றி வாழ்வர் என முசோலினி கருதினர். ஆனால், அவர்கள் இத்தாலிய அரசாங்கத்தைப் பற்றிப் பொய்யான வதந்திகளைப் பரப்பி வந்தார்கள். அவற்றை உண்மையென நம்பி, ஜெர்மனியில் இருந்த பத்திரிகைகள் இத்தாலியை வன்மையாகக் கண்டித்தன; இத்தாலியோடு ஜெர்மனி எத்துறையிலும் ஒத்துழைக்கக் கூடாதென வாதித்தன. இக்கூக்குரலைக் கேட்ட முசோலினி, "இத்தாலியர் மீது கூறும் எத்தகைய குற்றமும் உண்மையன்று. இத்தாலியர் நேர்மையாகவே நடந்து வருகின்றனர். ஜெர்மானியர் கூக்குரலுக்கு இத்தாலியர் அஞ்சுபவர் அல்லர். இத்தாலியர் அஞ்சிய காலம் மலையேறிவிட்டது. வேண்டுமாயின், நாங்கள் எங்கள் கொடியை அவ்விரண்டு லட்சம் ஜெர்மானியர் உள்ள இடத்திலும் நடத் தயாராக இருக்கிறோம். எங்களை அச்சுறுத்துவதாற் பயனில்லை" என்று சினங்கொண்ட வேங்கையைப் போலச் சீறிப் பேசினார். இப்பேச்சு ஜெர்மனியில் பெரிய மாறுதலை உண்டாக்கியது. ஜெர்மனியின் வெளிநாட்டு மந்திரியார், ஜெர்மானியப் பத்திரிகைகள் செய்த தவறுகளுக்காகத் தாம் வருந்துவதாகவும், இத்தாலியிடம் ஜெர்மனிக்கு எப்போதும் வெறுப்பில்லை என்றும் சமாதான முறையில் முசோலினிக்குச் செய்தி அனுப்பினார். முசோலினியும் இனிய முறையில் பதில் அனுப்பினார். அன்று முதல்

இத்தாலி ஜெர்மனியின் முன்னேற்றத்தில் பெரு விருப்பங் காட்டி வருகின்றது. 'ஏனைய வல்லரசுகளைப் போல ஜெர்மனியும் ஆயுதங்கள் வைத்திருப்பதில் சமவுரிமையைப் பெறுதல் வேண்டும்' என்று சர்வதேச சங்கத்தில் இத்தாலி ஜெர்மனிக்காக மன்றாடிப் பேசியது,



பொது உடைமைக் கொள்கைக்கு மாறானவராக இருந்த போதிலும், முசோலினி அக்கொள்கை நிறைந்துள்ள ருஷியாவுடன் 1924ஓ வியாபார ஒப்பந்தஞ் செய்துகொண்டார். ருஷிய அரசியலை ஒப்புக்கொண்ட முதல் நாடு இத்தாலியே ஆகும். அது முதல் இரு நாடுகளுக்கும் வியாபாரச் சம்பந்தம் இருந்து வருகின்றது. இத்தாலியக் கப்பல்கள் ருஷியத் துறைமுகங்கட்குச் சென்று மீள்கின்றன.

முசோலினி, மேலும் ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளுடன் வியாபார ஒப்பந்தங்கள் செய்துகொண்டார். அதனால், இத்தாலிய வெளிநாட்டு வாணிபம் சிறப்புற்று வருகின்றது. இவற்றுடன் நில்லாமல்,

இத்தாலி சர்வதேச சம்பந்தமான பொது விஷயங்களிற் கலந்துகொண்டு, தன் கடமையைத் தவறாது நடத்தி வருகின்றது. சுருங்கக் கூறின், இப்பொழுது இத்தாலியைத் தாழ்வாக நினைக்கின்ற நாடே உலகில் இல்லை என்னலாம்.

அயல்நாடுகளுடன் ஒற்றுமைப்பட்டு வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதே முசோலினியின் சிறந்த நோக்கம். இத்தாலியைச் சுற்றியுள்ள நாடுகளோடு எப்போதும் நேசப் பான்மையாக இருத்தல், இத்தாலிக்கு அந்நாடுகளால் அச்சமில்லை என்பதைத் துணிவதாகும். பெரிய வல்லரசுகளோடு கலந்து உறவாடி வெளிநாட்டு விஷயங்களிற் சிறப்புற்று இருப்பின், இத்தாலி முதல் தர வல்லரசாக விளங்கக் கூடும் என்பது முசோலினியின் எண்ணமாகும்.

# 12. கைத்தொழிலும் இரயில்வே நிருவாகமும்

முசோலினி, தொழிலாளரையும் முதலாளிகளையும் ஒற்றுமையோடு தொழில் நடத்துமாறு ஏற்பாடு செய்தார்; தொழிலாளிகள் தொழிலை விருப்பத்துடன் செய்பவர்களாயும் முதலாளிகளோடு ஒத்துழைப்பவர்களாயும் நாட்டுப்பற்றுடையவர்களாயும் இருக்குமாறு செய்தார். முதலில், "தொழிலாளர் நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரமே வேலை செய்தல் வேண்டும்; அதற்கு மேல் அவர்களை ஒரு நிமிடமும் வேலை செய்யும்படி வற்புறுத்தலாகாது" என இவர் முதலாளிகட்குக் கடுமையான கட்டளையிட்டார். முதலாளிகள் முசோலினியின் ஆட்சிக் காலத்தில் நாட்டுப் பற்றுடையவர்களாக மாறிவிட்டமையால், முசோலினியின் கட்டளை ஒவ்வொன்றையும் நிறைவேற்ற உடன்பட்டார்கள். தொழிலாளரும் முசோலினியைத் தம் இரட்சகர் என மதித்து, அவர் விதித்த கட்டளைப்படி வேலை செய்ய இசைந்தனர்.

தொழிலாளர் திடீரென இறந்துபட்டால், வயோதிகம் அடைந்தால், வேலை செய்யச் சக்தியற்றால், அவர்தம் தகுதிக்கேற்றவாறு உபகாரச் சம்பளமோ, பெருந் தொகையோ முதலாளிகள் தருதல் வேண்டும். இவ் விதியைப் பற்றி முசோலினி பல சட்டங்கள் இயற்றியுள்ளார்.

ஒவ்வொரு தொழில் நிலையத்தினின்றும் தொழிலாளர் பிரதிநிதி ஒருவரோ இருவரோ தேர்ந்

தெடுக்கப்பட்டுத் தொழிலாளர் சார்பாக முதலாளி களிடம் கலந்து உறவாடுவர். இத்தகைய தொழிலாளர் பிரதிநிதிகளின் சபை சில சட்டங்கட்கு உட்பட்டு வேலை செய்தல் வேண்டும். அது வீணாக முதலாளிகளுக்கு எத்தகைய துன்பத்தையும் செய்யலாகாது. குறை இருப்பின், தொழிலாளரை மேற்பார்வையிடும் அரசியற் சபையினரிடம் அறிவித்துக் குறையை நீக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இத்தகைய ஏற்பாடுகளால் முசோலினி தொழிலாளி களையும் முதலாளிகளையும் இணைத்து, ஒன்றுபட்ட மனத்தவராக்கித் தொழில் அபிவிருத்திக்கு உழைக்கும்படி செய்துள்ளார். 1922ஆம் ஆண்டில் இருந்த தொழிலாளர் சபைகள் ஐந்து லட்சம் உறுப்பாளரைக் கொண்டிருந்தன. ஆனால், அந்தச் சபைகளே 1926ஆ ஏப்பிரல் மீ இருபத்தொரு லட்சத்து ஐம்பதினாயிரம் உறுப்பாளரைக் கொண்டவனாக இருந்தன. பதிவு செய்யப்பெற்ற இச்சபைகள் அல்லாமல் பதிவு செய்யப்படாத சபைகள் பல இத்தாலியில் உள்ளன. அவை தொழிலாளர் இயக்கத்துக்குச் சிறந்த துணையாக இருந்து வருகின்றன. இவைகளே அல்லாமல், பாஸிஸ்டு சபைகள் பல ஆயிரக்கணக்கான உறுப்பாளரைக் கொண்டவைகளாக இருந்து வருகின்றன. அவ்வுறுப்பினர் பல திறப்பட்ட வேலைகளில் இருப்பவர்கள். இவை யாவற்றையுந் தவிர, தேசீயத் தொழிலாளர் சபை ஒன்று பல கிளைகளை உடையதாய்த் தொண்டாற்றித் தொழிலாளரிடையே ஒற்றுமையை நிறுவி வருகின்றன. இம்மகாசபை வேலையில்லாத் தொழிலாளர்க்கு வேலை பார்த்துத் தருகின்றது; தொழிலாளர்க்குப் பிரசங்கங்கள் வாயிலாகவும் இராப் பள்ளிக்கூடங்கள் மூலமாகவும் போதுமான கல்வி அளித்து வருகின்றது; தொழிலாளர்க்கும் முதலாளிகட்கும்

இடையே ஏற்படும் குற்றங் குறைகளை அவ்வப்போது நீக்கி வருகின்றது; தொழிலாளர்க்குக் கூட்டுறவு இயக்கங்களை உண்டாக்கித் தருகின்றது; முதலாளிகள் அதிகமாக இலாபம் அடைந்தால், அதில் ஒரு பகுதியைத் தொழிலாளர்க்குப் பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்கின்றது. சுருங்கக் கூறின், இம்மகாசபை தொழிலாளரின் நன்மையில் எப்பொழுதும் நாட்டங் கொண்டுள்ளது என்னலாம்.

பாஸிஸ்டு அரசாங்கம் தொழிலாளரைப் பாதுகாக்கச் சில சட்டங்களை உண்டாக்கி உள்ளது. இத்துறையில் இத்தாலி ஏனைய வல்லரசுகளைவிட உயர்ந்த நிலையில் இருக்கின்றதெனத் துணிந்து கூறலாம் தொழிலாளிகள் எட்டு மணிநேரமே வேலை செய்தல் வேண்டும். முதலாளி தொழிலாளிக்கு உபகாரச் சம்பளம் தருதல் வேண்டும். தொழிலாளர்க்கெனத் தனியாகப் பாங்குகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவர்கள் சம்பளத்திலிருந்து ஒரு லைராவுக்கு இவ்வளவு எனச் சிறிது தொகை பிடிக்கப்பட்டு உதவி நிதியில் (Provident Fund) அவர்கள் பெயரால் பாங்கில் ஒவ்வொரு மாதமும் சேர்ப்பிக்கப்பட்டு வருகிறது. பெண் தொழிலாளர்க்குத் தாதி வேலை, வீட்டு வேலை, சிக்கனம், குடும்பப் பாதுகாப்பு, சுகாதாரம் முதலிய சிறந்த இன்றியமையாத விஷயங்கள் ஓய்வு நேரங்களிற் கற்பிக்கத் தனிப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய சீர்திருத்தங்களாலும் பிறவற்றாலும் தொழிலாளரிடையே, பாஸிஸ்டு அரசாங்கத்துக்கு, முன் இருந்த நிலைமை அடியோடு மறைந்து, புத்துயிர், புத்துணர்ச்சி, நாட்டுப்பற்று, ஒற்றுமை முதலியன தலைகாட்டத் தொடங்கின. இப்பொழுது இத்தாலியத் தொழிலாளர்கள் தங்கள் முதலாளிகளோடு இன்பமாக

வாழ்ந்து வருகிறார்கள்; இத்தாலியின் நன்மை தங்களையே பெரிதும் பொறுத்துள்ளதென்பதை உணர்ந்து, அவர்கள் மிகுந்த ஊக்கத்துடன் வேலை செய்து வருகின்றார்கள். முதலாளிகளும் தொழிலாளர்களைப் போலவே நல்லறிவைப் பெற்று, அவர்களைத் தங்கள் உடன் பிறந்தார்களைப் போல நினைத்து, நன்முறையில் நடத்தி வருகிறார்கள். இதனால், தொழில் முன்னேற்றமடைந்து வருகின்றது; தொழில் முன்னேற்றம் அடைவதால், நாட்டுச் செல்வநிலை உயர்ந்து வருகின்றது. இன்றைய உலகில் இத்தாலி இன்ப நாடாக இலங்குகின்றது.

இரயில்வே நிருவாகத்திலும் முசோலினி அற்புத மாறுதல்களைச் செய்துள்ளார். அவருக்கு முன்னிருந்த அமைச்சர்கள் காலங்களில் இரயில்வே நிருவாகம் மிகவும் கேவலமாக நடைபெற்று வந்தது. வரவுக்குத் தக்க செலவின்றி, மிகுந்த செலவே காணப்பட்டது. கட்சிச் சிபாரிசுகள் இரயில்வே நிருவாகத்திலும் நுழைந்தன. அரசாங்கத்துக்கு வேண்டிய கட்சியினர் குமாஸ்தாக்களாக இருந்தாலும், பெரிய உத்தியோகஸ்தர் பெறுவதைவிட அதிக சம்பளம் பெற்று வந்தனர். அவர்களால் நடைபெற்ற வேலையோ, சொற்பம். சோம்பலும் உறக்கமுமே அவர்களிடை காணப்பட்டன. இரயில்வே நிருவாகம் அரசாங்கத்தால் நடைபெற்றதால், செலவு அபரிமிதமாகச் செய்யப்பட்டது. வருமானமோ, செலவை நோக்கக் குறைவாக இருந்தது. எனவே, குறைவை நீக்க அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து ஆண்டுதோறும் பணம் எடுத்துக் கொள்ளப்பட்டது. நிலக்கரி பல வகையிலும் வீணாக்கப் பட்டது. தொடர்வண்டிகள் சுத்தம் செய்வார் இல்லாமல் மாசற்றுக் கிடந்தன. ஒரு தொடர் வண்டியேனும் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட புகைவண்டி நிலையத்தை

அடைந்திலது. முதலில் கால்மணி நேரம் கழித்துச் சென்ற வண்டி, பின்னர் ஒருமணி நேரம் கழித்துச் சென்றதே தவிரக் குறித்த நேரத்தில் சென்றிலது. இரயில்வே வேலை நிறுத்தங்கள் அதிகப்பட்டன. அற்பக் காரியத்தை முன்னிட்டும் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. நிட்டி முதலிய பிரதம மந்திரிமார் வலியற்றுக் கிடந்தமையால், இரயில்வே நிருவாகம் இங்ஙனம் சீர் குலைந்தது.

ஐரோப்பியப் பெரும்போர் ஏற்பட்டபோது இரயில்வே தொழிலாளர் பலர் போரில் கலந்து கொண்டனர். அவர்கள் பதவிகளில் புதிய ஆட்கள் நியமிக்கப் பெற்றார்கள். போர் முடிந்ததும், பழைய தொழிலாளர் தத்தம் பழைய வேலையை ஒப்புக் கொள்ளவே, புதிய ஆட்கள் வேலை இன்றித் தவித்தார்கள். எனினும், கட்சி வலியால், அவர்கள் இரயில்வே வேலையாட்களாக இருந்துகொண்டு, சம்பளம் பெற்று வந்தார்கள். இம்மூடச் செயலால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் சிறிதன்று. இந்நஷ்டத்தைச் சரிப்படுத்த அரசாங்கம் குடிகளின் மீது அதிக வரியை விதித்து. இதனால், குடிகள் பட்ட துன்பம் சிறிதன்று. பிரயாணிகளின் சாமான்கள் களவு போய்க் கொண்டிருந்தன. அவற்றுக் கெல்லாம் அரசாங்கம் நஷ்டஈடு கொடுத்து வந்தது. இங்ஙனம் உண்டான நஷ்டம் 192122ஆம் ஆண்டில் சுமார் ஒன்பது கோடியே நாற்பது லட்சம் லையர் ஆகும். தொழிலாளர் நாள் ஒன்றுக்கு ஆறு மணி நேரமே வேலை செய்து வந்தனர்.

இத்தகைய கேவல நிலைமையில் பாஸிஸ்டு அரசாங்கம் அரசியலை ஏற்றுக்கொண்டது.. அது, முதல் முதல் இரயில்வே நிருவாகப் போர்டை எடுத்துவிட்டது; இரயில்வே நிருவாகத்தைச் சிறந்த முறையில் நடத்தும்படி ஒரு பிரத்தியேக அதிகாரியை (Special Commissioner of

Railways) நியமித்து, அவருக்கு வேண்டிய அதிகாரங்களை வழங்கியது; பிரயாணிகளையும் சாமான்களையும் பாதுகாக்க இரயில்வே படை ஒன்று நிறுவப்பட்டது. அப் படையினர் சிறந்த வீரர். அவர்கள் மிகுந்த கவலையோடு இரயில்வே நிருவாகத்தில் ஒழுங்கு முறையை நிறுவினார்கள். அதனால், கனவு குறைந்தது.



இரயில்வே அதிகாரி, போருக்குச் சென்று மீண்டவர் களைத் தங்கள் பழைய பதவிகளில் நிரந்தரமாக வைத்து, வேலையில்லாமல் சம்பளம் பெற்று வந்தவர்களை வீட்டுக்கனுப்பினார்; அவரவர்கள் ஊழியத்துக்கேற்றவாறு உபகாரச் சம்பளமோ, அல்லது குறிப்பிட்ட தொகையோ கொடுத்து, அவர்களைச் சமாதான முறையில்

வெளியேற்றினார்கள்; எட்டுமணி நேரம் வேலை செய்தே தீரவேண்டும் என்று கண்டிப்பான கட்டளையிட்டார்; அவரவர் உத்தியோகக் காலத்துக்குத் தக்கபடி சம்பளத்தை முறைப்படுத்தித் தந்தார்.

இத்தகைய சீர்திருத்தங்களால் பல நன்மைகள் ஏற்பட்டன. இரயில்வேயின் வரவு செலவுத் திட்டம் சரிப்படுத்தப்பட்டு, இலாபமும் காணப்பட்டது. பிரயாணம் விருத்தியாயிற்று. வியாபாரிகள் இரயில்வே நிருவாகத்தில் நம்பிக்கை கொண்டு, தங்கள் பொருள்களைப் பெருவாரியாகப் பிற நகரங்கட்கு ஏற்றுமதி செய்தார்கள். நிலக்கரி அளவுப்படி செலவிடப்பட்டது. வண்டிகள் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டன. அவை குறித்த நேரங்களில் குறித்த நிலையங்களை அடைந்து வந்தன. இரயில்வே தொழிலாளரிடையே ஊக்கம் காணப்பட்டது. அவர்கள் குதூகலத்துடன் வேலை செய்யலானார்கள். இத்தகைய அதிசய மாறுதல்கள் ஏற்பட்ட பின்னர், இரயில்வே அதிகாரியின் பதவி நீக்கப்பட்டது. இரயில்வே நிருவாகம் 1924ஆ மேமீ போக்குவரவுச் சாதனங்களைக் கவனித்து வரும் மந்திரியிடம் ஒப்புவிக்கப்பட்டது. அன்று தொட்டு இன்றுவரை இத்தாலிய இரயில்வே நிருவாகம் மென்மேலும் சீர்பட்டு வந்து கொண்டிருக்கின்றது. இத்தகைய அற்புதச் சீர்திருத்தங்கட்கு மகா வீரரான முசோலினியின் மூளையே காரணம் அன்றோ?

# 13. விவசாயம்

இத்தாலியில் மலைகள் மிகுதியாக இருக்கின்றமையால், விவசாயத்துக்குரிய நிலப்பகுதி சொற்பமாகவே இருக்கின்றது. அச்சொற்பப் பகுதியும், பாஸிஸ்டு அரசாங்கத்துக்கு முன்னர்ப் போதுமான விவசாயமின்றிக் கிடந்தது. பயிர்த்தொழில் இங்ஙனம் புறக்கணிக்கப்பட்டது. நாட்டுச் செல்வநிலையின் சீர்கேட்டுக்கொரு காரணமாகும். முசோலினி நிலைமையை நன்கறிந்தவர்; கிராம வாழ்க்கை நடத்தியவர்; விவசாயமே அரசாங்கத்தின் முதுகெலும்பு என்பதை நன்குணர்ந்தவர்; கைத்தொழிற்சாலைகளை வைத்துக் கைத்தொழிலைப் பெருக்குவதைவிட இயற்கையாகக் கிடக்கும் நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்வது மேலானதென்பதை நம்பியவர்; மக்கள் வாழ்க்கை கிராமங்களிலேதான் சீர்படுகின்றது என்னும் நம்பிக்கையைக் கொண்டவர். அவர்கள் நகரங்களில் தொழிலாளர்களாக இருந்துகொண்டு பிறர் பணத்தை எதிர்பார்ப்பதைவிடக் கிராமங்களில் இருந்துகொண்டு விவசாயம் செய்து பிழைத்தல் மேலானது என்பது முசோலினியின் கருத்து. மேலும், இத்தாலிய ஜனத்தொகை பெருகுவதை விரும்பின இவர், எதிர்காலப் பெருக்கத்தை எண்ணி, விவசாயத்தை மேலும் சீர்படுத்த விரும்பினார்.

இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளைப் போலக் கைத்தொழிற்சாலைகளைப் பெருக்குவதை முசோலினி விரும்பவில்லை. மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுத் தங்கள் நாட்டுக்கு வேண்டும் உணவுப் பொருள்களைத் தாங்களே

உண்டாக்கிக் கொள்ளும் திறமை பெறுதல் வேண்டும் என்பதே இவரது சீரிய நோக்கமாகும்.

அந்நோக்கத்தால் முசோலினி 1922ஆ டிசம்பர் மீ விவசாயச் சபை ஒன்றை ஏற்படுத்தினார்; விவசாயிகளை அதில் அங்கத்தினர்களாக்கினார். இவருக்கு முன் விவசாயிகள் வகுப்புக் கலகங்களிலும் வேலை நிறுத்தங்களிலும் கலந்திருந்தார்கள். முசோலினி அத்தகைய கலவரங்களை அடியோடு ஒழித்து, 1926ஆம் ஆண்டில் பாஸிஸ்டு விவசாயச் சபை ஒன்றை ஏற்படுத்தி, விவசாயிகளை அங்கத்தினர்களாக்கி, அவர்கள் தங்கள் முன்னேற்றத்தைத் தாங்களே கவனிக்கும்படி செய்தார்.

"விவசாயிகளின் நிலங்கள் அவர்கட்குச் சொந்த மானவையாயினும், அவை நாட்டுச் செல்வமாகும். அந்நிலங்களைச் செவ்வையாகப் பாதுகாத்துப் பயிர்வேலை செய்யின், வேளாண்மை சிறப்புறும்; விவசாயிகள் சுகமாகக் காலங் கழிக்கலாம்; விவசாயத்தால் வருகின்ற வருமானம் அரசாங்க வருமானத்திற் பாதி ஆகும். ஆதலால், விவசாயிகளே, நீங்கள் உங்கள் கடமையை உணர்ந்து உங்கள் வரிப் பணத்தால் நாடு சீர்படுதலை நினைந்து, செவ்வையாகப் பயிர்த் தொழில் செய்து வாருங்கள். நீங்கள் உங்கள் கடமையைச் செய்யத் தவறுவீர்களாயின், நாட்டு நிருவாகம் கெட்டுவிடும்; குழப்பங்கள் ஏற்படும்; நமது தாய்நாட்டுப் பெருமை அழியும். ஆதலின், விவசாயிகளே, உங்கள் நன்மைக்கெனப் போராட யான் இதோ தயாராக இருக்கிறேன், நீங்கள் தாய்நாட்டுப் பற்றுடையவர்களாய், நாட்டு விவசாயத்தை நன்னிலைக்குக் கொண்டு வாருங்கள்" என்று உருக்கமான அறிக்கை ஒன்றை முசோலினி விடுத்தார்.

இவ்வறிக்கையால் மிகுந்த பயன் ஏற்பட்டது. விவசாயிகள் தங்கள் பொறுப்பை உணர்ந்து, உற்சாகத்துடன்

உழைக்கலானார்கள். முசோலினி எதிர்நோக்கியபடி மிகுந்த பலன் ஏற்பட்டது. தானியம் அதிகப்பட்டதால், விலைக் குறைவு உண்டானது. இதனையே முசோலினி விரும்பினார். குடிகள் விலைக் குறைவைக் கண்டு மகிழ்ந்தார்கள்; முசோலினியையும் பாஸிஸ்டு அரசாங்கத்தையும் மனமார வாழ்த்தினார்கள்.

விவசாயம் நவீன முறையில் விருத்தியானது. மின்சார உழவு ஏற்பட்டது. மேலும் விவசாய முன்னேற்றங்களை ஆராய்ச்சி செய்யப் பல ஆராய்ச்சிச் சாலைகள் நாடெங்கும் நிறுவப்பட்டன. விவசாயிகட்குச் கல்வி புகட்ட விவசாயக் கலாசாலைகள் ஏற்படுத்தப் பட்டன. ஆராய்ச்சிச் சாலைகளில் ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டபடி விவசாயிகள் சிறந்த முறையில் நீர்பாய்ச்சுதல், உழுதல், விதை விதைத்தல், எருவிடுதல், அறுவடை செய்தல் முதலிய வேலைககளச் செய்ய லானார்கள். விவசாயத் தொழிலை மேற்பார்வையிட விவசாயத்தில் தேர்ச்சியுற்ற நிபுணர்கள் நியமிக்கப் பட்டார்கள். இத்தகைய சீர்திருத்தங்களால் 1924ஆம் ஆண்டிலிருந்து இத்தாலி விவசாயம் ஆண்டுதோறும் அபிவிருத்தி அடைந்து வருகின்றது.

மல்பரி மரங்கள் பெருவாரியாக வளர்க்கப்பட்டு, பட்டுப் பூச்சி உற்பத்தி பெருவாரியாக நடைபெறு கின்றது. பீட்ரூட்டுப் பயிராக்கப்பட்டுச் சர்க்கரை செய்யப்படுகிறது. பட்டு உற்பத்தியை அபிவிருத்தி செய்யப் பெரிய கைத்தொழிற்சாலை ஒன்று உழைத்து வருகின்றது. பட்டுத் தொழில் முன்னேற்றத்தில் அரசாங்கமும் மிகுந்த ஊக்கங் காட்டி வருகின்றது.

கிராமங்களில் பால்பண்ணைகள், கோழிப் பண்ணைகள், ஆட்டுப் பண்ணைகள் முதலியன ஏற்படுத்தப் பட்டுள்ளன. அவற்றால் கிராமவாசிகள் ஒற்றுமைப்பட்டு,

கூட்டுறவு முறைகளைக் கையாண்டு, சிறந்த வாழ்க்கை நடத்துகின்றார்கள். மேய்ச்சல் நிலங்கள் செவ்வையாகப் பாதுகாக்கப்படுகின்றன. பால் சுகாதார முறையில் கறக்கப்பட்டு, விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

முசோலினி 1928ஆ டிசம்பர் மீ 24உ கிராமச் சீர்திருத்த மசோதா ஒன்றைச் சட்டசபையில் நிறை வேற்றினார். அதன்படி கிராமங்கள் ஏறக்குறைய நகரங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. கிராமங்களில் செவ்வையான பாதைகள் போடப்பட்டு வருகின்றன. வயல்களுக்கு நீர் பாய்ச்சும் குழாய்கள் ஆங்காங்கு வைக்கப்படுகின்றன. குடிநீர் வசதியும் செய்யப்படுகிறது. விவசாயத்திற்குப் பயன்படும்படி மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இத்தகைய சீர்திருத்தங் கட்கென அரசாங்கம் 700 கோடி லையர்களை ஒதுக்கி வைத்துள்ளது. இன்றும் இச்சீர்திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவற்றால் கரடு முரடான நிலங்கள் பதப்படுத்தப்பட்டு, நல் விளைச்சலை நல்குகின்றன.

அரசாங்கம் காடுகளைக் கவனத்தோடு காப்பாற்றி வருகின்றது; ஐக்கிய நாணயச் சங்கங்களைக் கிராமங்களில் ஏற்படுத்தி உள்ளது. விவசாயிகள் அச்சங்கங்களிலிருந்து பயிர்த் தொழிலுக்கு வேண்டும் பணத்தைக் கடனாகப் பெற்று, வேலை செய்து வருகின்றார்கள். அக்கடன் தொகைக்குரிய வட்டியில் ஒரு பாகத்தை ஆண்டுதோறும் அரசாங்கம் மேற்கூறப்பட்ட சங்கங்கட்குக் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய முறையை வேறு எந்நாட்டு அரசாங்கமும் இதுவரையில் கையாளவில்லை.

முசோலினி விவசாயத்தைப் பற்றித் தமது கருத்தைப் பின்வருமாறு விளக்கிக் கூறியுள்ளார்;

"கைத்தொழில்களின் அபிவிருத்தி எத்துணை உயர்வாக இருப்பினும், நான் அதனைப் பொருட்படுத்த மாட்டேன். இத்தாலியின் இக்கால நிலையும் எதிர்கால நிலையும் அதன் விவசாயத்தையே பொறுத்துள்ளன. விவசாயம் உயருமாயின், இத்தாலி உயரும்; அது தாழ்வடையுமாயின், இத்தாலியும் தாழ்வடையும். இதில் எள்ளளவும் ஐயமில்லை. எந்த நாடு தனது விவசாயத்தைப் பெருக்கி வருகின்றதோ, அந்த நாடு எத்தகைய கொடிய பணப் பஞ்சத்திலும் சுகமாக வாழக் கூடும். ஆதலின், இத்தாலியின் விவசாயம் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் பெறுதல் வேண்டும். தனது மண்மீது நம்பிக்கை கொண்டுள்ள நாடே சிறந்த வல்லரசாக விளங்கக் கூடும் என்பதை மெய்யாகவே உங்கட்குக் கூறுகின்றேன்.

"இத்தாலிய அரசாங்கத்தின் முதற்கடமை விவசாயச் சீர்திருத்தம் செய்வதாக இருத்தல் வேண்டும். நமது விவசாயம் மிகவும் மேலான நிலைக்கு வரவேண்டு மென்பதே எனது பெருவிருப்பமாகும். மண்ணைப் பொருட் படுத்தாத மாந்தர் மடிந்தொழிய வேண்டுபவரேயாவர். நிலம் ஒரு தாய்க்கு ஒப்பாகும். அதனை நாம் புறக்கணிப் போமாயின், அது நமக்கு நீங்காத் துன்பங்களை உண்டாக்கிவிடும். ஆதலின், நிலம் என்னுந் தாயை நாம் பேணி வளர்த்தல் வேண்டும்."

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

என்னும் தமிழ்நாட்டுப் பெரும்புலவராகிய திருவள்ளுவரின் கூற்று இங்கு உய்த்துணரத்தக்கது.

## 14. கலைப் பெருக்கம்

கல்வி முறையிலும் பாஸிஸ்டு அரசாங்கம் வியக்கத்தக்க மாறுதல்களைச் செய்துள்ளது. இவ்வரசாங்கத்துக்கு முன் இத்தாலியக் கல்வி முறையை அறிவது நலம்; கல்விக் கழகங்கள் கல்லூரிகள், உயர்தரக் கலாசாலைகள், ஆரம்பப் பள்ளிகள் என முப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. கல்லூரிகள் அரசாங்கப் பாதுகாப்பில் இருந்தன; உயர்தரக் கலாசாலைகள் தனிப்பட்டவர்களால் நிருவகிக்கப்பட்டன; ஆரம்பப் பள்ளிகள் நகரச் சபைகளால் பரிபாலிக்கப்ட்டன. தொழிற்கல்விச் சாலைகள் இல்லாமல் மக்கள் தொழிற் கல்வியறிவு பெறாது இருந்தார்கள். ஆசிரியர்கள் நடைப்பிணங்களாக இருந்தார்கள். பிள்ளைகள் இருந்த நிலையைக் கூறவும் வேண்டுமோ? 'கல்லூரிகட்குப் போவதாலேயே பட்டம் பெற்றுவிடுவோம்' என அம் மாணவர்கள் கருதினார்கள். வாழ்க்கை முறைக்கு மாறான கல்வி அளிக்கப்பட்டது. 'பட்டம் பெற்று உத்தியோகம் செய்வதற்கே கல்வி வேண்டுவது' என்ற தவறான எண்ணம் பிள்ளைகளிடத்தும் பெற்றோரிடத்தும் குடிகொண்டிருந்தது. பிள்ளைகள் புத்தகக் கல்வியைக் குருட்டுப் பாடம் செய்யும்படி வற்புறுத்தப்பட்டார்கள். உயிரில்லாத விஷயங்களைப் பற்றி அவர்கள் அறிய வேண்டி இருந்தது. சுருங்கக் கூறின், சரியான மேற்பார்வை இன்றிக் கல்விமுறை இப்பொழுதுள்ள இந்தியக் கல்வி முறையாக இருந்தது.

இந்நிலைமையில் பாஸிஸ்டு அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தது. முசோலினி சிறிது காலம் உபாத்தியாயராக இருந்தவர் அல்லவா? இவர் அப்பொழுதே இத்தாலியக் கல்வி முறையின் சீர்கேடுகளை நன்கறிந்திருந்தார். ஆதலின், இவர் அதிகாரத்துக்கு வந்ததும், பழைய கல்வி முறையை அடியோடு ஒழித்து, நவீன முறையில் உயிருள்ள கல்வித் திட்டத்தை ஏற்படுத்த விழைந்தார். இவர் பேராசிரியர் ஜெண்டைல் (Prof. Gentile) என்பவரைக் கல்வி மந்திரியார் ஆக்கி, அவருக்கு எல்லா உரிமைகளையும் அளித்துக் கல்வி முறையைச் சீர்திருத்துமாறு கட்டளையிட்டார்.

அப்பேராசிரியர் 1923ஆ மே மீ 6உ தமது கல்வித் திட்டத்தை ஏற்படுத்தினார். அத்திட்டம், 'மாணவர் நாட்டுப் பற்று நிறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்; விவசாயம், இரசாயனம், தேகப்பயிற்சி, சிக்கனம், பொருளாதார சாஸ்திரம் முதலிய வாழ்க்கைக்கு இன்றியமையாதவற்றை அறிந்தவர்களாக இருத்தல் வேண்டும்; மத போதனை அறிந்து சிறந்த ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்' என்பவற்றை வற்புறுத்தி நின்றது. அத்திட்டத்தின்படி அரசாங்கம் அறுவகைக் கல்விக் கழகங்களை நிறுவிற்று. அவை (1) இலக்கியப் பயிற்சியளித்து மாணவரைக் கல்லூரிக் கல்விக்கனுப்புவன; (2) இயற்கைத் தத்துவ சாஸ்திரத்தைப் போதித்துப் பிள்ளைகளை உயர்ந்த ஆராய்ச்சி நிலையங்கட்கு அனுப்புவன; (3) கைத் தொழிலைப் போதித்துப் பெரிய கைத் தொழிற்சாலைகட்கு மாணவரை அனுப்புவன; (4) சிறிய கைத் தொழில்களையும் சிறிதளவு கல்வியையும் போதித்து, மாணவரைச் சிறிய வேலைகளுக்குத் தயார் செய்வன; (5) போதனா முறைக் கலாசாலைகள்; (6) உயர்தரக் கல்வியை விரும்பாத பெண்களுக்குச் சிறிய கைத்தொழிற்

கல்வியும் குடும்பப் பாதுகாப்பு முறையும் போதிப்பன என்பவை ஆகும்.

இத்திட்டத்தின்படி ஓர் ஆசிரியர் இரண்டு விதமான பாடங்களையே (Subjects) ஆண்டு முழுவதும் போதித்தல் வேண்டும். இப்பாடங்களைப் போதிப்பதில் அவருக்கு முழுச் சுதந்தரமுமம அளிக்கப்பட்டுள்ளது. பிள்ளைகள் மன நிலைக்கேற்றபடி அவர் பாடங்களை வகுத்துப் போதிக்கலாம்.

அரசாங்கப் பள்ளிக்கூடங்களின் பாடதிட்டங் களும் பிள்ளைகளைச் சேர்ப்பித்தலும் அரசாங்கத்தாரால் வெகு கவனத்தோடு கண்காணிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாணவனும் தன் வாழ்க்கைக்கு இன்றியமையாத இயற்கைத் தத்துவ சாஸ்திரத்தையும் பிறவற்றையும் நன்குணர்ந்துள்ளானா என்பதை அறிய, அரசாங்கமும் ஒரு பரீட்சை நடத்திச் சோதித்து வருகின்றது. பேராசிரியரது கல்வித் திட்டப்படி 6 வயதிலிருந்து 14 வயது வரையிலுள்ள பிள்ளைகள் பள்ளிக்கூடம் போய்த்தான் தீரவேண்டுமென்னும் கடுமையான கட்டாயக் கல்விச் சட்டம் செய்யப்பட்டுள்ளது. படித்தல், எழுதுதல், கணக்குப் போடுதல் இம்மூன்றுமே சேர்ந்து கல்வியாகாது என்று பேராசிரியர் கூறியுள்ளார். அதனால், அவர் மத போதனையும் கலை ஞானமும் பிள்ளைகட்குப் பள்ளிக் கூடங்களில் ஊட்டும்படி செய்துள்ளார். ஆசிரியர் கூறியவற்றை உருப்போட்டு ஒப்புவித்த காலம் மலையேறிவிட்டது. பிள்ளைகளின் சொந்த உணர்ச்சிக்கும் பகுத்தறிவுக்கும் இப்பொழுது வேலை கொடுக்கப்பட்டு வருகிறது. ஆசிரியர் வரைந்த படத்தைப் பார்த்துப் பிள்ளைகள் வரைந்த காலமும் மறைந்தது. இப்பொழுது அப்பிள்ளைகள் தாங்கள் தினந்தோறும் நேரில் பார்ப்பனவற்றைப் படம் எழுதிப் பழகி வருகிறார்கள்.

'மாணவர்தம் சொந்த உணர்ச்சியைத் தூண்டி விடுதலே ஆசிரியரின் வேலையாக இருத்தல் வேண்டும்' என்பது பேராசிரியரது நோக்கமாகும். இப்பொழுது ஒவ்வொரு மாணவனும் தனது கருமத்தைத் தானே எண்ணித் துணிந்து செய்யத் தூண்டப்படுகிறான். எவ்வெம்மாணவன் எவ்வெத் தொழிலில் வல்லவனாக இருக்கின்றானோ, அவ்வவனை அவ்வவ்வேலையில் திருப்பிவிடுதலே இப்போதைய இத்தாலிய ஆசிரியர் வேலையாக இருக்கின்றது. இம்முறையால், மாணவன் தானே சுயேச்சையாகச் சுதந்தர வாழ்வை நடத்துவதற்கேற்ற ஆற்றல் பெறுகின்றான்.

உடற்பயிற்சி விஷயத்தில் இத்தாலியக் கலாசாலைகள் மிகுந்த ஊக்கங் காட்டி வருகின்றன. உயரிய உடல் இருந்தாற்றான் வலிய உள்ளம் ஏற்படும். ஆதலின், உடற்பயிற்சி இல்லா எத்தகைய கல்வித் திட்டமும் நிறைவுற்றதாகாதென்பதை இத்தாலியக் கல்வி மந்தியார் உணர்ந்தவர். ஆதலின், அவர் 1923 ஆு தேகப் பயிற்சியைக் கவனிப்பதற்கென்றே தனி இலாகா ஒன்றை ஏற்படுத்தினார். எனினும், அதற்குப் போதிய பணமும் வசதியும் இல்லாததால், 1926ஆு தொடங்கப்பட்ட பாலில்லா உடற்பயிற்சிச் சங்கத்துடன் அவ்விலாகா இணைக்கப்பட்டுக் கல்வி மந்திரியின் அதிகாரத்துக்கு உட்படுத்தப்பட்டது. எட்டு முதல் பதினான்கு வயதுவரையுள்ள ஆண் பிள்ளைகளின் தேகப் பயிற்சியைப் பாலில்லா சங்கமும், பதினான்கு முதல் பதினெட்டு வயது வரையுள்ள பிள்ளைகட்கு அவாண்டி வார்டிஸ்டி என்ற சங்கமும், சிறு பெண்களின் தேகப் பயிற்சியைப் பிக்கோன் இத்தாலியன் என்னும் சங்கமும் கியோவனி இத்தாலியன் என்னும் சங்கமும் கவனித்து வருகின்றன. இச்சங்க அங்கத்தவர் கொடுக்கும் பணத்தைக் கொண்டும் செல்வர்கள் தரும் சன்மானங்களைக்

கொண்டும், உள்நாட்டு மந்திரியும், கல்வி இலாகா மந்திரியும், கார்ப்பொரேஷன்களும் வருடந் தோறும் ஒதுக்கி வைக்கும் தொகையிலிருந்தும் மேற்கூறப்பெற்ற சங்கங்கள் நடந்து வருகின்றன.

இத்தாலியில் சாரணர் இயக்கம் மிகுதியாக விருத்தியடைந்து வருகின்றது. பாலில்லா சங்கம், பள்ளிக் கூடங்களை விட்ட சாரணர்கட்காகச் சாரண இயக்கத்தின் சார்பில் பள்ளிக்கூடங்களை நடத்தி வருவதுடன், கைத்தொழிற் பயிற்சி அளித்தும், வயதானவர்க்கு இராப்பள்ளிக்கூடங்களை நிறுவியும் நடத்தி வருகின்றது; இலவச வாசக சாலைகளும் புத்தகாலயங்களும் நிறுவப் பட்டுள்ளன. விநோதப் பொருட்காட்சிச் சாலைகட்கும், ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டுள்ள சிலை சின்னம் முதலியவை உள்ள இடங்கட்கும் சாரணச் சிறுவரும் சிறுமியரும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். தேகப் பயிற்சியில் தேறுபவர்க்குச் சன்மானங்களும் உபகாரச் சம்பளமும் கொடுக்கப்படுகின்றன. மத்தியதரைக் கடலில் இத்தாலிக்குச் சொந்தமாயுள்ள தீவுகட்கும் பிற இடங்கட்கும் வேடிக்கைக் கப்பற் பிரயாணங்கள் செய்யப்படுகின்றன. கோடைகாலத்தில் சாரணர் விசேட இடங்கட்கு அழைத்தேகப்பட்டு, உடற்பயிற்சியும் சமையல் வேலையும் கற்பிக்கப்படுகின்றனர். நோய் வராமல் தடுப்பதற்கும் விபத்து நேராதிருப்பதற்குமான வைத்தியக் கல்வியும் அவர்கட்குப் போதிக்கப்படுகிறது. அவர்களுடைய கல்வி அபிவிருத்திக் காகவும் பலவகை விளையாடல்களுக்காகவும் ஆங்காங்குச் சங்கங்கள் பல நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய அரிய வேலைகளால் பாலில்லா சாரணர் இயக்கம் இத்தாலி முழுவதும் பரவி இருக்கின்றது. இவ்வியக்கத்தால், இன்று இத்தாலியில் முப்பது லட்சம் சாரணர்கள் இருக்கின்றார்கள்.

இத்தாலியக் கலாசாலைகளில் மனித வாழ்க்கைக்கு அவசியமான உயர்ந்த தத்துவார்த்த விஷயங்களும் போதிக்கப்படுகின்றன. இலத்தீன் (Latin) முதலிய பழைய பாஷைகளும், தத்தவ சாஸ்திரம், மதம், அரசியல், பொருளாதாரம், கலா சாஸ்திரம், சரித்திரம் முதலியனவும் போதிக்கப்படுகின்றன. ஆங்கிலம், ஜெர்மன், பிரஞ்சு பாஷைகளும் கற்பிக்கப்படுகின்றன.

முசோலினி செய்த மதசம்பந்தமான சீர்திருத்தம் வியக்கத்தக்கதாகும். அவருக்கு முன் இத்தாலிய அரசாங்கத் துக்கும் மதகுருவாகிய போப்புக்கும் எப்பொழுதும் மனக் கசப்பே நிலவி வந்தது. பாஸிஸ்டு வீரர்கள் ரோமாபுரிமீது படையெடுத்தபோது, கோயில்களைக் கைப்பற்றி அழிக்கலாகாது எனப் போப்பு வேண்டுகோள் ஒன்று விடுத்தார். உடனே முசோலினி, போப்பையும் கோயில் களையும் மதத்தையும் கௌரவப்படுத்தும்படி தம் வீரர்கட்குக் கண்டிப்பான கட்டளை இட்டார். அவர் பிரதம மந்திரியார் ஆனதும், மத போதனையைக் கல்வித் திட்டத்தில் சேர்த்ததைக் கண்ட போப்பு, பெரு மகிழ்ச்சியுற்றார்.

போப்பும் சில வேளைகளில் இத்தாலிய அரசாங்கத்துக்கு மாறாக நடந்து வந்தார். அவரைப் பாஸிஸ்டு அரசாங்கத்தின் சிறந்த நண்பராக்க முசோலினி விரும்பினார்; போப்புடன் அளவளாவி ஒரு சமாதான முடிவுக்கு வந்தார். அச்சமாதான உடன்படிக்கையின்படி போப்பு இத்தாலி அரசாங்கத்தை ஒப்புக் கொண்டார். முசோலினி அவரது ஆட்சியில் சில நகரங்களை நிரந்தரமாக விட்டார்; அவரை இத்தாலிய மதக் குருவாக அங்கீகரித்தார். போப்பு இத்தாலிய அரசியல் விவகாரங் களில் தலையிடுவதில்லை என்றும், சர்வதேச சங்கத்திலும்

சேருவதில்லை என்றும் வாக்களித்தார். இத்தாலியப் பாதிரிமார் அரச விசுவாசப் பிரமாணமும் செய்து கொண்டனர். கோவில்களில் நடைபெறும் திருமணங்களே நியாயமானவை என்னும் முடிவு ஏற்பட்டது. மதபோதனை கலாசாலைகளில் புகுத்தப் பெற்றது, போப்புக்கும் பாதிரிமார்க்கும் அளவிலா மகிழ்ச்சியை அளித்தது. இத்தகைய திறமையான சீர்திருத்தங்களால் முசோலினி போப்பைப் பெருந்தேச பக்தராக மாற்றிவிட்டார். போப்பு இன்று இத்தாலிய அரசாங்கத்தின் நற்றுணைவராக இருந்து வருகின்றார்.

முசோலினி இத்தாலியப் பத்திரிகை உலகத்தையும் சீர்படுத்தத் தவறவில்லை. பத்திரிகைகள் பொதுவாக நாட்டு முன்னேற்றத்திற்கு உகந்தவையாக இருத்தல் வேண்டும். கட்சிச் சம்பந்தமான பத்திரிகைகளாயினும், நியாயம் அநியாயம் என்பனவற்றை ஆராய்ந்து, விஷயங்களை வெளியிடுதல் சிறந்தது. எதிர்க்கட்சி என்ற மாத்திரத்தே அதன்மீது அவதூறு கூறும் பத்திரிகைகள் பல ஒவ்வொரு நாட்டிலும் இன்றும் இருந்து வருகின்றன. இத்தகைய பத்திரிகைகள் முசோலினி ஆட்சி ஆரம்பித்ததும் மறைந்தொழிந்தன. 'எக்கட்சிப் பத்திரிகையாயிருப்பினும், நாட்டு நலனைக் கருதுவதாயின், இருக்கட்டும்; இன்றேல், ஒழியட்டும்; அரசாங்கத்துக்கு மாறான எவற்றையும் பத்திரிகைகள் வெளியிடலாகாது; நாட்டில் அமைதியையும் ஒழுக்கத்தையும் அறிவையும் வீரத்தையும் ஊட்டுவதே பத்திரிகைகளின் தொழிலாக இருத்தல் வேண்டும்' என்பதை வற்புறுத்தி முசோலினி சட்டமொன்றைச் செய்தார். அன்று முதல் இத்தாலியப் பத்திரிகைகள் சிறந்த தொண்டாற்றி வருகின்றன. கல்வி, தொழில், விவசாயம், சாத்திர அபிவிருத்தி இவை சம்பந்தமான பத்திரிகைகள் இத்தாலியில் மல்கி வருகின்றன.

பாஸிஸ்டு அரசாங்கம் இத்தாலியச் சிற்பக் கலையைப் பெருக்கி வருகின்றது. ரோமாபுரியில் 1924ஞு மே மீ 20உ முசோலினி சிற்பக் கலையைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்:

"சிற்பக் கலைக்குப் பெயர் பெற்ற இடம் ரோமாபுரி. உலகில் இன்றும் அப்பெயர் நிலவி வருகின்றது. இனியும் அப்பெயர் நிலவுமாறு நீங்கள் செய்தல் வேண்டும். சிற்பக் கலையே மக்கள் வாழ்வை விளக்கிக் காட்டுவது; நம் முன்னோர்களது நாகரிக வாழ்க்கையை விளக்குவது; இத்தாலியரை ஒன்றுபடுத்துவது; கட்டுக்கதைகளை இன்பமுறையில் எடுத்தியம்புவது; கிறிஸ்தவ மகத்துவங்களை விளக்கிக் காட்டுவது. இக்கலை இன்றேல், நாகரிகம் இல்லை. ஒரு நாட்டு நாகரிகத்தைச் சீர்தூக்கிக் காட்டுவது சிற்பக் கலையே ஆகும். பாஸிஸ்டு அரசாங்கம் என்னும் செழிப்புவாய்ந்த நிலத்தில் புதிய சிற்பக் கலையென்னும் பயிர் தோன்றிச் செழிப்பாக வளரும்படி இளைஞர்களாகிய நீங்கள் செய்தல் வேண்டும். தாய் நாட்டு இளஞ்சிங்கங்களே, உங்களாலேதான் நமது சிற்பக் கலை உலகில் ஒளி விட்டுப் பிரகாசிக்குமென நான் நம்புகின்றேன்."

# 15. மக்கட் பெருக்கம்

ஒரு நாடு அந்நாட்டு மக்களாலேயே உயர் நிலையை அடைகின்றது. ஒரு சமூகம் ஜனப் பெருக்கம் பெறாவிடின், இரண்டொரு நூற்றாண்டுகளில் அச் சமூகமே அழிந்துவிடும். அதனால், அரசாங்கம் மக்கள் தொகுதியைப் பெருக்கும் முயற்சியில் கவனஞ் செலுத்துதல் இன்றியமையாததாகின்றது. இவ்வுண்மையை நன்குணர்ந்த முசோலினி இத்தாலிய மக்கட் பெருக்கத்தை விரும்பினார்; 1928ஆு ஜூன் மீ 14உ இதற்குரிய சட்டங்கள் சில இயற்றினார். இச்சட்டங்களால் பல பிள்ளைகளையுடைய குடும்பங்கள் முனிசிபல் வரிகள், வருமான வரி, வியாபார வரி முதலிய வரிகள் கட்டுவதினின்றும் விலக்கப்பட்டுள்ளன. அரசாங்க வேலைகளில் உள்ளவர்களின் குடும்பங்களும் பொதுமக்களின் குடும்பங்களும் ஏழு அல்லது அத்தொகைக்கு மேற்பட்ட இத்தாலியக் குழந்தைகளைப் பெற்றிருப்பின், மேற்கூறிய விதம் வரிகள் கட்டுவதினின்றும் விலக்கப்பட்டுள்ளன.

1929ஆு ஜூன் மீ 6உ முசோலினி ஒரு சட்டத்தை உண்டாக்கினார். அதன்படி, விவாகமான இத்தாலியர்க்குக் காலியான உத்தியோகங்கள் தரப்பட்டன. மணமாகாத வாலிபர்களைவிட மணமானவர்களுக்குக் குடும்பப் பொறுப்பு அதிகம் அன்றோ? மேலும், அவர்கள் இத்தாலியின் சந்ததியைப் பெருக்குவதற்குரிய துறையில் இருப்பவர்கள். அதனால், மணமானவர்கள் முதலில்

உத்தியோகங்களில் நியமிக்கப்படல் வேண்டும் என்று முசோலினி சட்டம் இயற்றினார்.

மணமாகிப் பிள்ளைகளைப் பெற்றுள்ள ஆடவர்கட்கும், மணமாகிப் பிள்ளைகளைப் பெறாதுள்ள ஆடவர்கட்கும், மணமாகாதவர்கட்கும் முறையே அரசாங்கச் செலவிலும் நகர சபைகளின் செலவிலும் கட்டப்பட்டுள்ள விடுதிகள் குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

பிள்ளைகளைப் பெற்றுள்ள மணமான குடும்பங்கட்கும், பிள்ளைகளையுடைய விதவைகட்கும், பிள்ளைகளையுடைய அரசாங்க உத்தியோகஸ்தர்கட்கும் அரசாங்கம் மாதந்தோறும் பொருளுதவி செய்து வருகின்றது. மூன்று சிறிய குழந்தைகளையுடைய குடும்பத்துக்கு அரசாங்கம் முறையே 30, 25, 20 லைரா வீதம் மாதந்தோறும் கொடுத்து வருகின்றது. மூன்று பிள்ளைகட்கு மேற்பட்ட பிள்ளைகள் இருக்கின்ற குடும்பங்கட்குத் தொகை அதிகமாகக் கொடுக்கப்படுகிறது.

நகரசபைகள் ஆறு பிள்ளைகட்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெறும் குடும்பத்துக்குக் குழந்தை ஒன்றுக்கு இத்தனை லைரா என்று வீதப்படி பரிசு தருகின்றன. அதிகமான குழந்தைகளைப் பெற்றுள்ள குடும்பங்கட்கு வெகுமதி கொடுக்கப்படுகின்றது; குறைந்த விலைக்கு டிராம் (Tramway) டிக்கெட்டுகள் தரப்படுகின்றன; மின்சாரச் சக்தி குறைந்த செலவில் அளிக்கப்படுகிறது. ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் ஒரே குடும்பத்துப் பல பிள்ளைகட்குப் புத்தகங்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் இலவசமாகக் கொடுக்கப்படுன்றன. அப்பிள்ளைகள் உயர்கலாசாலையில் வாசிக்கும்போது அவர்களுக்கு உபகாரச் சம்பளம் தரப்படுகிறது.

மக்கள் தங்கள் தாய்நாட்டை விட்டு அயல் நாடு களிற் குடிபுகுதல், இத்தாலிக்குப் பெருநஷ்டமாகக் கருதப்படுகிறது. அங்ஙனம் வெளிச் செல்வோர் தொகை இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெளிச் செல்லும் பெண்கள் கருத்தரித்தால், பிரசவத்திற்கு இத்தாலிக்கு வந்து தீர வேண்டுமென்னும் சட்டம் இப்பொழுது இத்தாலியில் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், பிறக்கின்ற குழந்தைக்கு இத்தாலியச் சமூகத்து வாசனை வீசுதல் வேண்டும் என்பது முசோலினியின் கருத்தாகும். அரசாங்கம் அத்தாய்க்கு அயல்நாட்டிலிருந்து இத்தாலிக்கு வரவும் போகவும் ஏற்படும் செலவைக் கொடுப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.


கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களிற் சென்று குடி புகுதலை அரசாங்கம் அளவுபடுத்தியிருக்கிறது. அவ்வளவுக்கு மேற்பட்ட மக்கள் நகரங்களிற் குடிபுகுதல் இயலாது.

மக்கள் தொகுதியைப் பெருக்க அமைத்த இச்சீர்திருத்தங்களோடு அமையாது, இத்தாலிய அரசாங்கம் தாய்மார்கட்கும் குழந்தைகட்கும் சுகாதார முறையிற் பாதுகாப்பு அளிக்கின்றது; குடல் சம்பந்தமான வியாதி களைப் பெருவாரியாக ஒழித்து வருகின்றது; மலேரியா ஜ்ரத்தை ஒழித்து வருகின்றது. தாய்மாரையும் குழந்தைகளையும் காப்பாற்றும் தேசீயச் சபை ஒன்று 1925ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி அச்சபை சூல் கொண்டுள்ள தாய்மாரையும் திக்கற்ற தாய்மார் களையும், நோயுற்று மெலிந்துள்ள குழந்தைகளையும் காப்பாற்றி வருகின்றது. அறிவிலும் உடலிலும் வலிவில்லாத் திக்கற்ற குழந்தைகள் பதினெட்டு வயது வரையிலும் அச்சபையால் பாதுகாக்கப்படுகின்றன. அக்குழந்தைகள் அறிவையும் உடல் வன்மையையும் பெறும்படி அச்சபை பாடுபடுகின்றது. மேலும், அச்சபை பிரசவமுறை,

குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை, சுகாதாரம் முதலிய விஷயங்களைக் கற்பிக்கும் நிலையங்களை ஆங்காங்கு ஏற்படுத்தித் தொண்டாற்றி வருகின்றது; இவ்விஷயங்களைத் தாள்களில் அச்சிட்டு வெளிப்படுத்தியும் பொதுமக்கள் அறிவை வளர்த்து வருகின்றது.

மேற்கூறப்பெற்ற சட்டத்தின்படி, வைத்தியசாலைகளும், பிரசவ வைத்திய சாலைகளும், இவை போன்ற பிற வைத்தியப் பாதுகாப்புச் சங்கங்களும் தங்கள் எல்லைக்கு அப்பாற்பட்ட இடத்திலுள்ள தாய்மார்களையும் கருத்தரித்த எட்டாம் மாதத்திலிருந்து குழந்தை பிறந்த நான்காம் வாரம் முடிய வைத்திய முறைப்படி பாதுகாத்து வருதல் வேண்டும்; ஏழைப் பெற்றோர்கள் பெற்றுள்ள பிள்ளைகளை அவர்களின் சுகாதாரமற்ற விடுதிகளினின்றும் கொண்டு வந்து பாதுகாக்க வேண்டும். பதினைந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகள் படக்காட்சி வேலையிலும் நாடக மேடைகளிலும் வேலை பார்க்கக் கூடாதெனச் சட்டம் தடை செய்கின்றது. அவர்கட்கு மதுபான வகைகள், புகையிலைப் பொருள்கள் தரலாகாதென்பதையும் சட்டம் வற்புறுத்துகின்றது. அரசாங்கம், மணஞ் செய்து கொள்ளாதவர் மீது தனி வரி விதித்து, வசூலித்து வருகின்றது. அத்தொகையிலிருந்தே மேற்கூறப்பெற்ற பிரசவம் முதலிய வேலைகட்குப் பொருள் செலவழிக்கப் படுகின்றது. 1929ஆம் ஆண்டு இங்ஙனம் செலவழிக்கப் பட்ட தொகை 10, 26, 64, 647 லைராவாகும். இதிலிருந்து இத்தாலிய அரசாங்கம் பொதுமக்கள் நன்மையிலும் ஜனப் பெருக்கத்திலும் எத்துணை ஆர்வங்காட்டி வருகின்றது என்பது அங்கை நெல்லிக்கனிபோல விளங்குகிறதன்றோ?

உண்மையில், இத்தகைய முறையில் பிறநாடுகளை விட இத்தாலியே முன்னணியில் இருந்து வருகின்றதெனத் துணிந்து கூறலாம்.



முசோலினி 1927ஆ சட்டசபையில் மக்கட் பெருக்கத்தின் அவசியத்தைப் பற்றிப் பின்வருமாறு சொற்பொழிவாற்றினார்:

"ஒரு சமூக முன்னேற்றம் ஒரு நாட்டு முன்னேற்றம் அந்நாட்டு மக்கட் பெருக்கத்தையே பொறுத்துள்ளது. மக்கட் பெருக்கம் குறையுமாயின், அச்சமூகம் பாழாகிவிடும். 1870ஆ பிரான்ஸ் இரண்டு கோடி ஜனங்களைப் பெற்றிருந்தது; ஜெர்மனி இரண்டு கோடியே நாற்பது லட்சம் மக்களையும், இத்தாலி ஒரு கோடியே ஆறு லட்சம் மக்களையும் பெற்றிருந்தன. ஆனால், சுமார் அறுபது வருடங்கட்குப் பின் இந்நாடுகளின் ஜனத்தொகை எவ்வளவு? பிரான்ஸ் நான்கு கோடி ஜனத் தொகை உடையதாய் இருக்கின்றது; ஜெர்மனி ஆறரைக் கோடி ஜனத்தொகை உடையதாக இருக்கின்றது; இத்தாலி நான்கு கோடிக்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ளதாக இருக்கின்றது. இங்ஙனம் ஏற்பட்டுள்ள ஜனப் பெருக்கத்தால், நாடு நன்னிலையைப் பெறுகின்றதே அன்றிப் பாழாகிவிட

வில்லை. ஜனப் பெருக்கமே ஒரு நாட்டின் செல்வமாகும். ஜனப் பெருக்கம் இன்றேல், நாடேது? சமூகமேது? நாடுகள் இல்லையேல் உலகம் ஏது?

"நமது நாட்டில் இப்பொழுது 1000க்கு 27 வீதம் பிறப்புண்டாகிறது. இது மிகவும் குறைவானதாகும். இதற்குக் காரணம் யாது? தொழிலாளர்களோ, முன்னேற்றம் பெற்று வருகிறார்கள். விவசாயிகளோ, முன்னேறி வருகின்றார்கள். எனினும், கொடிய நோய்கள் ஆங்காங்கு நிலவி வருகின்றன. அவற்றை ஒழித்து, இத்தாலி முழுவதும் சுகாதார நாடாக இருக்குமாயின், கூடிய வரையில் இறப்புக் குறையும்; பிறப்பு மிகும். நான் ஒரு வைத்திய நிபுணரைப் போல நோய்க்குரிய (இறப்புக்குரிய) காரணங்களைக் கவனிப்பவன்; அற்ப விஷயத்தையும் அலட்சியம் செய்யாதவன். நாம் இன்றைக்கு அலட்சியமாக நினைத்து விடுபவை நாளை நமது சமூகத்தையே ஒழித்துவிடும் யமனாக மாறினும் மாறும். ஆதலின், அற்ப நோயையும் அலட்சியம் செய்யாது, உடனுக்குடனே இத்தாலியினின்றும் விரட்டிவிடுதல் வேண்டும். இத்தாலிய மக்கள் நோயின்றி, நீண்ட வாழ்நாட்களைப் பெற்று வாழ்தல் வேண்டும்.

"அறிஞர்களே, நாம் எண்ணிக்கையிற் குறைவோமாயின், ஒரு பெரிய இராச்சியத்தை ஏற்படுத்துதல் இயலாது; ஒரு தீவில் இருக்கத்தக்க நிலையையே பெறுவோம். நான் ஏன் கிராம வாழ்க்கையை மதிக்கிறேன்? ஏன் விவசாயத்தை அபிவிருத்தி செய்கிறேன்? ஏன் ரோமாபுரிக்கு அண்மையில் ஒரு தொழிற்சாலையையாவது அமைக்க இசைவதில்லை? என் நன்னிலையில் உள்ள கைத்தொழிற் சாலைகளைத் தவிரப் பிறவற்றை நான் வரவேற்பதில்லை? இவற்றுக்குக் காரணத்தை இப்பொழுதேனும், அறிந்து கொள்ளுங்கள்.

ஒருமுறை முசோலினி, கிராமவாசிகட்குப் பின் வருமாறு அறிவு புகட்டினார்;

"இத்தாலியக் கனவான்களே, நீங்கள், உங்கள் வானளாவி நிற்கும் மலைகளைப் பார்த்து இறுமாப்புக் கொள்ளுங்கள்; உங்கள் மலைகளின் வளத்தை எண்ணி வாழ்த்துங்கள்; இயற்கை வளங்களுக்கிடையே கிராமங்களில் வாழும் உங்கள் வாழ்க்கையே சிறப்பு டையது. நகரங்களில் நற்காற்றின்றி இருட்டறைகளிற் குடியிருக்கின்ற நகரத்தைப் பார்த்து நீங்கள் உயர்வாக மதிக்க வேண்டா. உங்கள் வாழ்வே ஆயுளை வளர்க்கும் வாழ்வு; இயற்கையான இன்ப வாழ்வு."

# 16. பின்னர்ச் செய்த சீர்திருத்தங்கள்

முசோலினி உலகத்தில் இருக்கின்ற இராஜதந்திரிகளில் தலைசிறந்தவர் என்பது உலகெலாம் பரவிநிற்கும் எண்ணமாகும். அவர் உலக எண்ணத்துக்கு ஒப்பவே செயலாற்றி வருகின்றார். சமீபத்தில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி இவை ஒன்றோடொன்று பேசி, ஐரோப்பாவில் சமாதானத்தை நிலைநிறுத்தப் பாடுபட்டன. இம்மூன்று நாடுகளாலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. முடிவில் பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியாரான சர். ஜார்ஜ் சைமன் என்பாரும், 'கொல்லரின் மகன் இத்தாலிய அரசாங்கத்தைக் கைப்பற்றிவிட்டான்' என்று ஒரு காலத்தில் ஏளனம் செய்த மாக்டொனால்டும், 'முசோலினியாலேதான் ஜெர்மனியைத் திருப்ப முடியும்' என்பதை உணர்ந்து ரோமாபுரிக்குச் சென்றனர்; முசோலினியைச் சந்தித்துப் பேசினர். முசோலினி பிரிட்டிஷ் திட்டத்தில் சில திருத்தங்களைச் செய்தார். அத்திருத்தங்களை இத்தாலியுட்பட நான்கு வல்லரசுகளும் ஒப்புக்கொண்டன. ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லர் என்பார், முசோலினி சொன்ன நிபந்தனைகட்கு உட்பட்டு, நான்கு வல்லரசுகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். 'பத்து ஆண்டுகள் வரையில் ஐரோப்பாவில் எந்த வல்லரசும் போர் தொடங்காமல் இருத்தல் வேண்டும்' என்பதே அச் சமாதான உடன்படிக்கையில் முசோலினி செய்த திருத்தமாகும்.

அச்சமாதான உடன்படிக்கையால் இப்பொழுது ஐரோப்பாவில் அமைதி நிலவுகின்றது. எல்லா நாடுகளும் முசோலினியைப் புகழ்ந்தன; பத்திரிகைகள் பாராட்டின. இச்செயலால், முசோலினி சமாதானப் பிரியர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இது நிற்க.

ஹிட்லர் ஆட்சிக்கு வந்ததும், அவரது இயக்கம் ஆஸ்ட்ரியாவிலும் பரவ ஆரம்பித்தது. அதனை அடக்க ஆஸ்ட்ரியப் பிரதம மந்திரியார் டாக்டர் டால்பஸ் (Dr. Dalfus) என்பவர் பகீரதப் பிரயத்தனம் செய்தார். ஆஸ்ட்ரியாவை ஜெர்மனியோடு சேர்த்துவிட வேண்டு மென்பது ஹிட்லரின் இலட்சியமாகும். ஆஸ்ட்ரியாவை ஜெர்மனியோடு சேராதபடி வேறு பிரித்துத் தம்மோடு சேர்த்துக் கொள்ளப் பிரிட்டனும் பிரான்சும் முயன்றன. அம்முயற்சி பயன்படவில்லை. எனினும், அவை ஆஸ்ட்ரியா ஜெர்மனியோடு சேர்க்கப்படுவதை விரும்பவில்லை; அதனைத் தனியரசாக இருக்குமாறு செய்வதையே விரும்பின. அம்முயற்சியில் தமது முழுச் சக்தியையும் உபயோகிப்பதென்றும் அவ்விரு வல்லரசுகள் தீர்மானித்தன.

இந்நிலைமையில், மகா வீரரான முசோலினி, 'ஜெர்மனி ஆஸ்ட்ரியாவைச் சேர்த்துக் கொள்ளுவதையோ, ஆஸ்ட்ரியாவில் ஜெர்மனி தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதையோ, இத்தாலி விரும்பவில்லை' என்று வெளிப்படக் கூறினார். இத்தாலியப் பத்திரிகைகள் யாவும் ஜெர்மனி முறையைக் கண்டித்தெழுதின. தம் நண்பரான முசோலினி திடீரென இங்ஙனம் கூறியது ஹிட்லருக்கு வியப்பை உண்டாக்கிற்று. ஆனால், இங்ஙனம் கூறிய முசோலினியின் கருத்து யாது?

முசோலினி ஒரு சிறந்த தேசபக்தர். அவர் தமது நாட்டு நன்மைக்கு எக்காரியமும் செய்யத் தவறார். ‘ஜெர்மனி ஆஸ்ட்ரியாவை ஆட்கொண்டு விடுமாயின், ஜெர்மனியின் சக்தி அதிகமாகும். அந்நிலைக்கு அதனை விடுவது இத்தாலியின் நன்மைக்கு உகந்ததன்று’ என்பதே அவரது எண்ணமாகும். இதனால், அவர் ‘ஆஸ்ட்ரியாவை ஜெர்மனி சேர்த்துக் கொள்வதைப் பிற நாடுகளைப் போல இத்தாலியும் வன்மையாக எதிர்த்தே தீரும்’ என்று பகிரங்கமாகக் கூறினார்.

முசோலினியின் மனப்பான்மையை உள்ளவாறு உணர வேண்டும் என்ற எண்ணம் ஹிட்லருக்கு உண்டாகியது. அவர் முசோலினியைக் காண 1934ஆம் ஜூன் மாதம் 14ஆம் தேதி தம் மெய்க் காப்பாளருடன் ஆகாய விமானத்தில் வெனிஸ் நகரம் வந்து சேர்ந்தார். இவ்விரு பெருந்தலைவர் சந்தித்த காட்சி மிகவும் நேர்த்தியாக இருந்தது.

முசோலினியும் பிற இத்தாலிய அதிகாரிகளும் நின்று கொண்டிருந்த இடத்திற்கு நேராக ஹிட்லர் விமானம் வந்ததும், முசோலினி ஐந்நூறு அடி தூரம் முன்வந்து ஹிட்லரை வரவேற்றார். உடனே இத்தாலிய பாண்டு வாத்தியங்கள் முழங்கின. முசோலினி பாஸிஸ்டு வந்தன மளித்தவுடன், ஹெர் ஹிட்லர் நாஸி வந்தனமளித்தார். உடனே இருவரும் ஜெர்மன் மொழியில் முகமன் கூறினர். பிறகு, இத்தாலிய அதிகாரிகளுள் ஒவ்வொருவரையும் முசோலினி ஹிட்லருக்கு அறிமுகப்படுத்தினர். இது முடிவடைந்த பின்னர் இத்தாலிய மாலுமிகள் அணி வகுத்து நின்று ஹிட்லருக்கு மரியாதை செய்தார்கள்.

பின்னர்ச் சர்வாதிகாரிகள் இருவரும் மோட்டார்ப் படகில் வெனிஸ் நகருக்குள் சென்றனர். பண்டை நாளில்

போரில் வெற்றிபெற்று மீண்ட தலைவர்களைப் போல இவர்கள் நகருள் சென்ற காட்சி இலங்கிற்று. இருவரும் படகில் ஏறியபோது துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த பத்து யுத்தக் கப்பல்கள் இராணுவ மரியாதை செய்தன. இரண்டு ஹோட்டலுக்கு முன்னுள்ள துறையில் இருவரும் படகிலிருந்து இறங்கி ஹோட்டலுக்குள் நுழைந்தனர்; அப்போது அங்குக் குழுமியிருந்த இத்தாலிய மக்கள் முசோலினியையும், ஜெர்மானியர் ஹிட்லரையும் வாழ்த்தி ஆரவாரம் செய்தனர்.

சிற்றுண்டிக்குப் பின்னர் இருவரும் பீரங்கிப் படகில் சென்றனர். அவர்கள் சம்பாஷணை பீரங்கிப் படகிலேயே நடைபெற்றது. பின்னர் ஒரு பெரிய மாளிகையில் இரண்டரை மணி நேரம் சம்பாஷணை நடைபெற்றது. ஜெர்மனியின் முன்னேற்றத்தில் தாம் பெரிதுங் கண்ணுங் கருத்துமாக இருப்பதாக முசோலினி அறிவித்தார்; ஆஸ்ட்ரியச் சுதந்தரத்தைத் தாம் விரும்புவதாகவும் ஆதரிப்பதாகவும் அறிவித்தார்; ஜெர்மனி எக்காரணத்தை முன்னிட்டும் ஆஸ்ட்ரியாவைச் சேர்த்துக் கொள்ளுதல் கூடாதென முசோலினி அபிப்பிராயப்பட்டார். ஹிட்லர் முசோலினியின் கருத்துப்படி நடப்பதாக வாக்களித்தார் என்பது கூறப் படுகிறது. இஃது உண்மை என்றே தோன்றுகிறது. ஏனெனில், அன்று முதல் நாஸியர் ஆரவாரம் ஆஸ்ட்ரியாவில் குறைந்துவிட்டது.

இரண்டு நாள் வெனிஸ் நகரில் தாமதித்த பின்னர் ஹிட்லர் ஜெர்மனியை அடைந்தார்.

ஹிட்லர் முசோலினியைக் கண்டு பேசிய பின்னர் டாக்டர் டால்பஸ் முசோலினியைச் சந்தித்தார்; முசோலினியின் ஆதரவு தமக்கிருப்பதை அறிந்தார்; அவரது தூண்டுதலால் பார்லிமெண்டைக் கலைத்துச்

சர்வாதிகாரியானார். அவருடன் ஹங்கேரிப் பிரதம மந்திரியாரான கால்போஸ் என்பவரும் முசோலினியின் நண்பரானார். 'இதுவே தக்க சமயம்' என்று எண்ணி இராச தந்திரத்திற் சிறந்த முசோலினி அவ்விரு நாடுகளுடனும் அரசியல் பொருளாதார விஷயங்களில் ஒருவரோடொருவர் ஒத்துழைக்க வேண்டுமென்று ரோமாபுரியில் ஒப்பந்தஞ் செய்து கொண்டார். அவ்வொப்பந்தத்தில் முசோலினியும், டால்பசும், கால்போசும் கையொப்பமிட்டனர். இது முசோலினிக்கு மகத்தான ஒரு வெற்றியேயாகும். முசோலினி செய்துகொண்ட அவ்வொப்பந்தத்தைப் பற்றி நியூ ரிபப்ளிக்குப் (New Republic) பத்திரிகையில் ஓர் அரசியல் நிபுணர் பின் வருமாறு எழுதுகிறார்:

"இத்தாலி வெற்றிமேல் வெற்றி அடைந்து வருகின்றது. ஆஸ்ட்ரியா, ஹங்கேரி, இத்தாலி இம் மூன்றும் செய்துகொண்ட ஒப்பந்தத்தால், ஆஸ்ட்ரியாவுக்குப் பெரிய நன்மை ஏற்படுதல் இல்லையாயினும், ஐரோப்பாவில் இத்தாலியின் செல்வாக்கு உயர்ந்துவிட்டது. ஐரோப்பிய அரசியல் உலகில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டச் சிறந்த இராச தந்திரியாரான முசோலினி வெகு காலமாக எண்ணிக்கொண்டு இருந்தார். முடிவாக, அவரது அரசியல் விருப்பம் நிறைவேறிவிட்டது.

"டான்யூப்பு நதிப் பிரதேசத்திலுள்ள நாடுகளை ஒன்று சேர்க்க வேண்டுமெனப் பிரஞ்சு இராச தந்திரிகளும் இத்தாலிய இராச தந்திரிகளும் வெகு காலமாக எண்ணியிருந்தார்கள். ஆனால், அவர்களால் இயலாத காரியத்தை இன்று முசோலினி செய்து காட்டினார். அவராலன்றி, வேறெவராலும் இவ்வொப்பந்தம் நிறைவேறியிராது. பிரிட்டனும் ஒரு காலத்தில் இத்தகைய ஒப்பந்தஞ் செய்துகொள்ள எண்ணினதுண்டு. இறுதியில்,

இத்தாலி இம்முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டது. இவ்வொப்பந்தப் பயனால், டான்யூப்பு நாடுகளில் பாஸிஸ்டு இயக்கம் பரவி வருகின்றது. இதைப் பாராட்டி 5000 பாஸிஸ்டு தலைவர்கள் முன்னே முசோலினி பேசினார். ஆஸ்ட்ரியாவில் ஹிட்லர் இயக்கம் ஒழிந்து பாஸிஸ்டு இயக்கம் பரவி வருகின்றது. டால்பஸ், பார்லிமெண்டை ஒழித்துச் சர்வாதிகாரியாகிவிட்டார். இது முசோலினியின் சேர்க்கையாலான பயன். ஹங்கேரியிலும் பாஸிஸ்டு இயக்கம் பரவி வருகின்றது. இனி, ருமேனியா, பல்கேரியா, செக்கோஸ்லாவியா முதலிய நாடுகளிலும் பாஸிஸ்டு இயக்கம் பரவலாம்."

முடி மன்னரும் பார்லிமெண்டும் இத்தாலியில் இருந்து வரினும், முசோலினியே தமது விருப்பப்படி தேச நிருவாகத்தை நடத்தி வருகின்றார். அவரது கட்டளைப் படியே பார்லிமெண்டும் இயங்கி வருகின்றது. எனினும், முசோலினி திருப்தியுறவில்லை. அவரது சர்வாதிகார ஆட்சிக்குப் பார்லிமெண்டு ஒரு முட்டுக் கட்டையாக இருப்பதாக அவர் நினைத்தார்; அதனால், அதனையும் ஒழித்துவிடத் தீர்மானித்துவிட்டார் 1934ஆ ஜுலை மீ 1 உ முதல் இத்தாலியப் பார்லிமெண்டு கலைக்கப்பட்டு விட்டது. அந்நாள் முதல் ஒரு கூட்டு அரசியல் முறை ஏற்படுத்தப்பட்டது. இத்தாலியின் நிருவாகத்தை நடத்த இருபத்திரண்டு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவை யாவும் முசோலினியின் நேரடியான அதிகாரத்திலேயே இருந்து வருகின்றன. எல்லா அரசியல் விஷயங்களிலும் முசோலினியின் தீர்ப்பே முடிவானதாகும். புதியனவாக ஏற்படுத்தப்பட்ட இருபத்திரண்டு சங்கங்களில் முதலாளிகளும் தொழிலாளிகளும் அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள். அச்சங்கங்கள் விவசாயம், கைத்தொழிற் பொருள்களின் உற்பத்தி, மொத்த வருமானம், முதலாளி

தொழிலாளிகளின் பிணக்குகளில் பஞ்சாயத்து முதலிய விஷயங்களைக் கவனித்து வருகின்றன. அவையல்லாமல் ஏழு நிருவாகச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு கைத்தொழில் இலாகாவைக் கண்காணிப்பதற்கும், இரண்டு விவசாயத்தைப் பார்ப்பதற்கும், வர்த்தகத்தைக் கவனிக்க இரண்டும், பிற தொழில்களைப் பார்க்க ஏழாவதுமாக இருந்து வருகின்றன. இக்கூட்டு அரசாங்க முறைமையால் முதலாளிகட்குள்ள சமநிலையைத் தொழிலாளரும் பெற்றுவிட்டனரென்றே கூறலாம். இது நிற்க.

இவ்வருடம் முசோலினி பொதுச் செலவில் 60 கோடி லையர் (இத்தாலிய நாணயம்) குறைக்கச் சுலபமான முறையைக் கண்டுபிடித்தார். அஃதாவது, இன்றியமை யாதது, அவசியமானது, உபயோகமானது என்ற மூன்று தலையங்கங்களின் கீழ்ப் பொதுச் செலவைப் பிரித்துக் கணக்குக் காட்ட வேண்டுமென்று இவர் எல்லா இலாகாக் களின் தலைவர்கட்கும் கட்டளை இட்டார். உபயோகமானது என்ற பகுதியை இவர் முற்றிலும் எடுத்துவிட்டார்; அவசியமானது என்ற பகுதியில் வீணான செலவுகளைக் களைந்துவிட்டார்.

ஜனவரி மாதத்தில் உயர்ந்த வட்டிகளுடன் கூடிய கடன்களைக் குறைந்த வட்டிகளுடன் கூடிய கடன் களாக மாற்றி 90 கோடி லைரா சிக்கனம் செய்யப் பட்டது; இரண்டாம் முறையாக ஏப்பிரல் மாதம் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தில் குறை உண்டாக்கி 41 கோடி லைரா சிக்கனம் செய்யப்பட்டது. எல்லா அமைச்சர் காரியாலயத்திலும் கடுமையான சிக்கனம் செய்ததால் ஜூன் மாதம் மூன்றாம் முறையாக 39 கோடி 70 லட்சம் லைரா மீதப்படுத்தப்பட்டது.

1934ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6ஆம் தேதி பிளாஸா டோமாவில் 39,50,000 இத்தாலியர் கூடியிருந்த மாபெருங் கூட்டத்தில் முசோலினி இத்தாலியின் அந்நிய நாட்டுக் கொள்கையை வரையறுத்துச் சொற்பொழிவொன்று நிகழ்த்தினார். அவர் கூறியன: "ஆஸ்ட்ரியாவின் சுதந்திரத்தை நாம் பாதுகாத்து வருகின்றோம்; மேலும் அதனைப் பாதுகாத்து வருவோம். இத்தாலியின் அந்நிய நாட்டுக் கொள்கை நட்பு அல்லது பகைமையாக இருத்தல் வேண்டும். ஜெர்மனி இல்லாமல் ஐரோப்பிய சரித்திரத்தில் தீவிர நிகழ்ச்சிகள் நிகழுமென்று கருதுவதற்கு இடமில்லை. இத்தாலிக்கும் சுவிட்ஜர்லாண்டுக்கும் சிறந்த நேச உறவு இருந்து வருகின்றது. இத்தாலிக்கும் பிரான்சுக்கும் இருக்கும் உறவிலும் நன்னிலைமை ஏற்பட்டுள்ளது.

"ஆயுதப் பரிகரணச் சம்பந்தமாக நான் ஒன்று கூற விரும்புகிறேன்; நீதியுடன் சமாதானம் உண்டாகில், நாம் நம் துப்பாக்கிகளைச் சமாதான விருதுகளால் அலங்கரிப்போம்; ஆயின், சமாதானம் ஏற்படாவிடின், அதற்குப் பதிலாக நம் துப்பாக்கிகளை புதிய வெற்றிகளால் அலங்கரிப்போம்."

டாக்டர் டால்பஸ் சர்வாதிகார ஆட்சி நடத்தி வருகையில், பாவம்! ஒரு நாள் திடீரெனச் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் டாக்டர் ஷுஸ்நிக் என்பார் ஆஸ்ட்ரியப் பிரதம மந்திரியாராக இருந்து வருகிறார். அவர் முசோலினியுடன் கலந்து உறவாடி வருகின்றார். இவ்விருவரும் ஆஸ்ட்ரியாவில் முடியரசை ஏற்படுத்த வேண்டுமென்று யோசித்து வருகின்றனர். ஆஸ்ட்ரியா விலிருந்து நாடு கடத்தப்பட்ட அரசரின் புத்திரரான ஆர்ச் டியூக் ஆட்டோ என்பவர்க்கு இத்தாலி மன்னரின் இரண்டாம் பெண்ணாகிய இளவரசி மேரியாவை மணம் செய்து

வைத்து, ஆட்டோவை ஆஸ்ட்ரிய மன்னராக முடிசூட்டுவது என்பதே இவ்விருவர்தம் நோக்கமாகும். இப்புதிய சம்பந்தத்தால் ஆஸ்ட்ரியாவுக்கும் இத்தாலிக்கும் பிரிக்க வியலா நட்பு என்றும்நிலவும் என்பதே முசோலினியின் கருத்து. ஆஸ்ட்ரியா முடியரசு நாடாகுமாயின், ஜெர்மனி ஆஸ்ட்ரியாவில் ஒன்றும் செய்ய இயலாதன்றோ? முசோலினியின் அரசியல் தந்திரத்தைப் பாருங்கள்!

சர்வாதிகார ஆட்சியைப் பற்றி முசோலினி கூறுவன: "தற்போதைய சர்வாதிகாரிகளின் பொறுப்பு மகத்தான தாகும். அவர்கள் தங்கள் மனம்போலக் குடிகளைப் பற்றிய கவலையின்றி விருந்துகட்கும் வேடிக்கைகட்கும், படக்காட்சி மண்டபங்கட்கும் சென்று பொழுது போக்க இயலாது. அவர்கள் பொது மக்களின் ஒத்துழைப்பின்றி நாட்டின் நிருவாகத்தை நடத்த இயலாதென்பதை நன்குணர்ந்திருக் கின்றார்கள்; பொதுமக்களின் கோபம் தங்கட்கு மகத்தான துன்பங்களை விளைக்கும் என்பதை நன்கறிந்தவர்கள்; பண்டைக்கால மன்னர்கள் தங்கள் மூடச் செயல்களாலும் கொடுங்கோன்மையாலுமே அரசினைத் துறந்தார்கள் என்பதை நன்றாய் அறிந்துள்ளார்கள்; எளிய வாழ்க்கை வாழ அறிந்திருக்கிறார்கள்; தாங்கள் நாட்டுக்குழைக்கும் ஊழியர்கள் என்பதைக் கனவிலும் மறவாதவர்கள்.

"எனது சொந்த அநுபவத்தைப் பற்றி உங்கட்குக் கூற விரும்புகின்றேன்; நான் எனது பிள்ளைப் பருவத்திலேயே உடல் உழைப்பை அடிப்படையாகக் கொண்டு வேலைகளைச் செய்து வந்தேன்; அரசியல் விவகாரங்களை அறிந்தேன்; இராச தந்திரிகள் மனிதவர்க்கத்திற்கு எத்தகைய சிறந்த முறையில் தொண்டு செய்யலாம் என்பதை நன்கறிந்தேன்; ஏழை மக்கள் படும் துன்பங்களில் மிகவும் உற்சாகமாகப் பங்கு கொண்டேன்;

ஏழை மக்களது கோபம் வெந்தழலுக்குச் சமம் என்பதை நன்கறிவேன். நான் தற்பொழுது இத்தாலியின் சர்வாதிகாரி என்ற முறையில் சுயநல நோக்கத்துடன் ஒத்துழைக்க வில்லை. எனது ஆட்சியில் எளியவர் செல்வர் என்ற வேறுபாடில்லை. என் ஆட்சியில் யாவரும் சம நிலையில் வாழலாம் என்பதை இத்தாலியர் நன்கறிந்துள்ளனர். பொதுமக்களைத் திருப்தி செய்யத் தக்க முறையில் நாட்டு நிருவாகத்தை நடத்த வேண்டும் என்பதே எனது சர்க்காரின் நோக்கம். நான் அவ்வப்போது தொழிற்சாலைகட்கு விஜயம் செய்து, அங்கு வேலை செய்யும் தொழிலாளரின் நிலைமையை அறிந்து வருகிறேன். நான் எனது சொந்த முறையில் எவ்வித ஆடம்பரமும் இன்றிச் செல்லுகிறேன். இத்தாலியில் உள்ள தொழிற்சாலைகளில் தொழிலாளர் மிகவும் உற்சாகமாக வேலை செய்து வருகின்றனர்.

"ஒருமுறை யான் ரோமாபுரிக்கு அருகிலுள்ள கிராமத்திற்கு மாறுவேடத்தில் விஜயம் செய்திருந்தேன். அங்கிருந்த விவசாயிகளுடன் பயிர்நிலங்களில் வேலை செய்தேன். நான் இத்தாலியின் சர்வாதிகாரி என்பதை விவசாயிகள் அறிந்து கொள்ளவே இல்லை. பயிர்த் தொழிலுக்கு யான் புதியவன் அல்லேன். என் மூதாதையர் அனைவரும் சிறந்த விவசாயிகள். எனவே, பயிர்த் தொழிலில் எனக்கு மிகுந்த பயிற்சி உண்டு. விவசாயி களுடன் இருந்து வேலை செய்து நான் அவர்கட்குச் சரியாகக் கிடைத்த கூலியைப் பெற்றுக் கொண்டேன். பின்பு சிறிது நேரத்தில் யான் இன்னானென்பதை அவர்கள் அறிந்து, மகிழ்ந்தார்கள். யான் அவர்களுடன் நீண்ட நேரம் அளவளாவிப் பேசிக் கொண்டிருந்தேன்; அவர்கள் கஷ்டங்களையும் உணர்ந்தேன்; விரைவில் அவர்கள் துன்பங்களை நீக்கினேன். சுமார் பதினோராண்டுகட்கு முன்னர் இத்தாலிய விவசாயிகள், சாதாரணமான ஏர்களின்

உதவியால் நிலங்களை உழுது வந்தார்கள்; அவர்கட்கு யான் இயந்திர ஏர்களின் சிறந்த உபயோகத்தை நன்கு புகட்டினேன். அவர்கள் இப்பொழுது இயந்திர ஏர்களின் உதவியால் உழுது பயிர் செய்கின்றார்கள்.



"இத்தாலிய அரசாங்கத்தார் தம் நாட்டில் செய்துள்ள சீர்திருத்த வேலைகள் இத்தாலிய மக்கள் அல்லாமல் வெளிநாட்டு மக்களும் பெரிதும் பாராட்டுகின்றார்கள். தொழிலாளர்க்கும் முதலாளிகட்கும் நேசத் தொடர்பென்பது இத்தாலியிற்றான் காணலாம் என்பதை அனைவரும் அறிந்துள்ளனர்.

அரசியல் ஒரு தனிப் பெருங்கலையாகும். இக்கலையை ஓதி உணர்ந்தவர் போதிய அனுபவமும் ஆற்றலும் இல்லாமல் அவசரமாகச் செயலாற்றல் கூடாது;

அரசியல் விஷயங்களை நிதான புத்தியுடன் ஆராய்ந்து முடிவு செய்தல் வேண்டும். நாட்டின் பொருளாதாரம், வியாபாரம், கைத்தொழில் முதலிய பிரச்சினைகளைத் தீர்த்தல் அரசியல்வாதிகளின் சிறந்த பொறுப்பாகும். அவர்கள் சுயநலம் கருதித் தங்கள் கொள்கைளை மாற்றிக் கொள்ளல் ஆகாது. ஒருமுறை அவர்கள் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்து விடின், மீண்டும் முன்போன்று செல்வாக்குடன் வாழ இயலாது. அரசாங்கத் தலைவர்கள் அஞ்சாமையுடனும் அமைதியுடனும் நடந்து கொள்ளல் வேண்டும். அவர்கள் பிற அதிகாரிகட்கு எடுத்துக்காட்டாக இலங்குதல் வேண்டும்.

## 17. அரிய சொற்பொழிவுகள்

அறிவிலும் ஆற்றலிலும் அநுபவத்திலும் இராச தந்திரத்திலும் குடிகளை ஆளுந் திறத்திலும் மிக்கவரும் மகா வீரருமாகிய முசோலினி, பல விஷயங்களைப் பற்றிப் பல சந்தர்ப்பங்களிற் கூறியுள்ளார். அவை நமக்கு நல்லறிவைக் கொளுத்திப் பல அரிய நுட்பமான விஷயங்களை அறிவிப்பவனாக உள்ளன. எனவே, அவை பின்னே குறிக்கப்படுகின்றன:

"நாம் நேற்றிருந்த நிலையைவிட இன்று மேலான நிலையில் உள்ளோம். நாம் இனி இத்தாலியர் என்று கூறிக் கொள்ள வெட்கப்பட வேண்டுவதில்லை; அதற்கு மாறாகப் பெருமையோடு தலைநிமிர்ந்து இத்தாலியர் என்று கூறிக் கொள்ளலாம். நாம் மூவாயிரம் ஆண்டுகளாக நாகரிகத்திற் சிறந்து விளங்கும் ரோம ராச்சியத்துக் குடிகள். நமது இராச்சியம் நாகரிக முகட்டை அடைந்திருந்தபோது ஏனைய சமூகங்கள் பிறந்திருக்கவில்லை என்பதை நீங்கள் அறிதல் வேண்டும். நமது நாடும், நமது சமூகமும் இன்று ஒழுங்கான முறையில் இருக்கின்றன; விரைவாக முன்னேறி வருகின்றன. நாம் வாழ்க்கையை ஒரு போர்க்களமாக மாற்றி இருக்கிறோம். வாழ்க்கையை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமாயின், நாம் வாழ்க்கையில் உள்ள சிக்கல்களை எதிர்த்துப் போராடுதல் வேண்டும். அதற்கும் நாம் சித்தமாக இருக்கின்றோம். நம்

கொள்கைகள் நம்மை அறைகூவி அழைக்கும்போதும் தேச சரித்திரத்தின் பெரிய மணி அடிக்கும்போதும் நாம் உயிர் விடவும் தயாராயிருக்கின்றோம்.

□□□

"இக்காலத்தில் இருந்து வருகின்ற நாம் இன்னும் பத்து வருடங்கட்குள் நமது நாட்டில் உடல் அளவிலும் ஆன்ம அளவிலும் அடையாளங் கண்டுகொள்ள இயலாதவாறு அற்புதச் சீர்திருத்தங்கள் செய்தல் வேண்டும். ஏன்? அது நமது கடமை. இன்னும் பத்தாண்டுகட்குள் இத்தாலி அடியோடு மாறுதல் அடைந்துவிடும். பசிய வயல்களை மேலும் பசிய வயல்களாகவும், துறைமுகங் களை மேலும் உயர்ந்த துறைமுகங்களாகவும், படையை ஒழுங்கும் வீரமும் பொருந்திய படையாகவும் மாற்றுதல் வேண்டும். மேலும், நாம் இத்தாலியனையே அடியோடு மாற்றுதல் வேண்டும்; ஆனால் நேற்றிருந்த இத்தாலியனைப்போல அன்று. இப்போதைய இத்தாலியன் நாட்டு முன்னேற்றத்துக்கு முக மலர்ச்சியோடு உயிர்விடத் துணிந்தவன். அவன் ஸீஸர் காலத்து இத்தாலியனாக இலங்குகின்றான். இப்பொழுது நாம் படிப்பித்து வரும் எதிர்கால இத்தாலிய வீரர்கள் நம்மினும் மேலான நாட்டுப் பற்றோடு விளங்குவார்கள். ஏன்? நாம் இப்பொழுதே அவர்கட்கு நாட்டுப் பற்றை உண்டாக்கி வருவதாற்றான். சகோதரர்களே, நமது தாய்நாட்டைப் பொன் மயமான இத்தாலியாக்க நாம் பாடு படுகின்றோம்; நாம் அதனைப் பொன் மயமாக்குதல் வேண்டும் என வீண் வார்த்தைகள் பேசவில்லை. நாம் நினைக்கின்ற ஒவ்வொன்றையும் செய்கையிற் காட்டி வருகின்றோம். இதுவே வேண்டற் பாலது. இதுவே இன்றைய இத்தாலியனுக்கும் நேற்யை இத்தாலியனுக்கும் இருக்கின்ற வேறுபாடு. எனினும்,

சகோதரர்களே, நாம் யாவும் செய்துவிட்டதாக எண்ண வேண்டா. இப்பொழுதுதான் வேலை ஆரம்பிக்கப்பட்டது. மேலும், இது தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும். நமது அரசியல் அசைக்க முடியாததென்பதை நாம் நன்கறிவோம். அதனை அசைக்கக்கூடும் என்று எண்ணுபவனைச் சென்ற நூற்றாண்டு மனிதன் என்றே கூறுவேன். இனி அவன் நமது போக்கைத்தடை செய்தல் இயலாது. நாம் முன்னேறிச் செல்வோம்; வெற்றி பெறுவோம். இத்தாலியின் நன்மைக்கென ஆயிரக்கணக்கான நம் பாஸிஸ்டு வீரர்கள் தங்கள் உயிரை மாய்த்திருக்கையில், நமது இயக்கம் அழிந்துவிடுமா? ஒரு நாளும் அழியாது. நாம் அழிவோம். ஆனால், பாஸிஸ்டு இயக்கம் அழியாது! அழியாது!! அஃது உலகம் முழுவதும் பரவினும், பரவும்; ஆனால், அழிவுறாது.

❑❑❑

"தேச சரித்திரம் ஆண்மை உள்ளவனுக்கு உரித்தே அன்றிப் பயந்தவனுக்கன்று. அது வேலை செய்பவனுக்கு உரிமையானது; ஆனால் சோம்பேறிக்கன்று. அதனைக் கைப்பற்றித் தன் இஷ்டப்படி வளைப்பவனுக்கே அஃது உரிமையானது. இதுவே பாஸிஸ்டு இயக்கத்தின் கொள்கை. நம் கண்கள் மகிழ்ச்சியோடு நாளை வேலையைக் கூர்ந்து நோக்கும். இத்தாலிய மக்களே, நான் உங்களை என்றும் மேலான நிலைக்கு அழைத்தேகுவேன். நீங்கள் இதனை முற்றிலும் நம்புங்கள்."

❑❑❑

"கறுப்புச் சட்டை வீரர்கள் இரத்தத்தைச் சிந்தியதால், ஆல்ப்ஸ் மலைத் தொடரிலிருந்து சிஸிலி வரையில், 'ஒரே நாடு ஒரே சமூகம்' என்னும் உணர்ச்சி இத்தாலியரிடையே ஏற்பட்டது; ஒற்றுமை, ஒழுங்கு, ஒழுக்கம் ஏற்பட்டன.

இவையே நமது நாட்டை மேனிலைக்குக் கொண்டு வருவன."

❑❑❑

"ஒழுங்குடன் இருத்தலில் விருப்பம், அழகிலும் வலிமையிலும் ஆர்வம், பொறுப்புள்ள வேலைகளை மேற்கொள்ளும் வீரம், உண்மையில் அவா, மக்களிடம் அன்பு, நாட்டினிடம் பற்று ஆகிய இவையே பாஸிஸ்டு இயக்கத்தின் இலட்சியங்கள் ஆகும். இவையே எந்த நாட்டையும் மேனிலைக்குக் கொண்டு வருவன."

❑❑❑

"எவன் தன் கொள்கையை நிரூபிக்கத் தன் உயிரையும் இழக்கத் தயாராயுள்ளானோ, அவனே உண்மை வீரன். தேச சரித்திரத்தைத் தன் விருப்பம் போலத் திருப்பியமைத்தல் அவனால் இயலும்."

❑❑❑

"அயல் நாட்டான் ஒருவன் நமது நாட்டை ஆராய்ந்து பார்த்துப் பின்வருமாறு எழுதியுள்ளான்:

'இத்தாலியில் இலட்சக் கணக்கான மக்கள் கடலிலும், வானிலும், தரையிலும், கலாசாலைகளிலும், கோயில் களிலும், தொழிற்சாலைகளிலும், இத்தாலியையே அடியோடு மாற்ற அமைதியாக வேலை செய்து வருகின்றார்கள்; மிகப் பழமையான தங்கள் நாகரிகத்தைப் புதுப்பித்து வருகின்றார்கள். அவர்களது முற்போக்கான வேலையின் ஒலி வெகு தூரத்தில் படையெடுத்துவரும் வீரர்களின் காலடிச் சத்தம் போலக் கேட்கின்றது.' "

❑❑❑

"சகோதரர்களே, இதனால் நீங்கள் மகிழ்ந்துவிட வேண்டா. நீங்கள் உங்கள் வேலைத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துங்கள். பிறர் புகழ்தலைக் கேட்டுத் தலைநிமிர்த்த வேண்டா. வேலை நடைபெறட்டும்."

❑❑❑

"சமூகமே நாட்டு மக்களை நல்வழிப்படுத்துவது; அவர்கள் கடமையை எடுத்துக் கூறுவது; அவர்களிடையே ஒற்றுமையைப் பரப்புவது; நியாயத்தில் அவர்களின் உரிமைகளை அறிவிப்பது; கலையிலும், சட்டத்திலும், பிறவற்றிலும் சிந்தனையை வலுப் படுத்துவது. இத்தகைய சமூகம் உண்மையான பொருளில் மதிக்கப்படாதாயின், நாசமடையும். நாடு குழப்பத்தையும் அழிவையுமே தரிசிக்கும்."

❑❑❑

"சட்டங்கள் என்றும் நிலைத்திருப்பன என்றெண்ணுதல் தவறு. எல்லா அமைப்புகளும் அங்ஙனமே. மாந்தர் பரம்பரையினராக ஒரே விதச் சட்டங்கட்கு அடிமைப் பட்டிருத்தல் வேண்டுமென்றெண்ணுதல் பெருந்தவறு. நிரந்தரமான சட்டம் ஒன்றுமில்லை; தெய்வத் தன்மை வாய்ந்த சட்டமும் ஒன்றில்லை. எல்லாம் மனிதன் செய்தவையே. ஆதலின், அவை கால தேச வர்த்தமானங் கட்கு ஏற்றவாறு மாற்றப்படலாம்.

❑❑❑

"முன்னைய அரசாங்கங்கட்கும் இன்றைய நமது பாஸிஸ்டு அரசாங்கத்துக்கும் உள்ள சிறந்த வேறபாடு யாது? முன்னவை மக்கட்கு வேண்டியவற்றைக் காகித ஏடுகளில் முடிவு கட்டி இருந்தன; பின்னது அவற்றை வாழ்க்கையிற் புகுத்திவிட்டது. இவ்விருவித அரசாங்கங்களுள் எது சிறப்புடையது?"

❑❑❑

"நாம் பொதுப்பணத்தை யாவற்றினும் மேலாகக் கருதுதல் வேண்டும். அது மழையைப்போல வானத்தினின்று இறங்குவதன்று; இயந்திரத்தைச் சுற்றுவதனால் வருவதுமன்று. அப்பணம் வெயிலில் மண்டை வெடிக்கவும் கால்கள் கொப்பளிக்கவும் நின்று வயல்களில் வேலை புரியும் உழவர்களுடையது; இரத்த வியர்வை சொட்டச் சொட்டக் காற்றில்லாத் தொழிற்சாலைகளில் வேலைபுரியும் ஏழைத் தொழிலாளருடையது. நாம் ஒவ்வோர் இத்தாலியச் சிறிய நாணயத்தையும் மேலானதாகக் கருதுதல் வேண்டும்; அதனை அவசியமான விஷயங்கட்கே செலவழித்தல் வேண்டும்.

❑❑❑

"இன்று ஒவ்வோர் இத்தாலியனும் தன்னாலே தான் நாடு மேனிலையை அடைந்து வருகிறது என்று எண்ணிக் கடுமையான வேலை செய்து வருகின்றான். அதுவே நான் வேண்டியது வேண்டுகிறது இனியும் வேண்டுவது. பல துளி பெருவெள்ளம் ஆவதுபோல, எல்லா இத்தாலியரும் சேர்ந்து இத்தாலியச் சமூகம் என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றனர். ஒவ்வொருவரும் உயர்ந்தால், சமூகம் உயரும். சமூகம் உயர்ந்தால், நாடு உயரும். அனைவரும் ஒரு மனப்பட்டு வேலை செய்யின், நாடு உயருமே அன்றித் தனிப்பட்டவனால் ஒரு நாளும் உயராது."

❑❑❑

"நாம் இத்தாலிய மக்களை மனத் தூய்மையோடு காத்து வருகின்றோம். நாம் சுய நலத்தாலும் மூடக் கொள்கைகளாலும் எக்காரியத்தையும் செய்வதில்லை;

மக்களின் தலைவர்களாக நம்மைக் கருதவும் இல்லை. நாம் அவர்களின் பொறுப்பை அறிவுறுத்தும் ஆசிரியராகவே இருந்து வருகின்றோம். அவர்கள் செவ்விய வாழ்வு நடாத்துதல் வேண்டுமென்பதே நம் பேரவா. உள் நாட்டுக் குழப்பங்களையும் பெருநஷ்டத்தையும் உண்டாக்கின அரசாங்கங்களையும் கட்சிகளையும் நாம் புதைத்துவிட்டோம்; அவை புதைத்த இடத்தே எழுப்பிய சமாதியின் மீது பாஸிஸ்டு கொள்கைகளைப் பொறித்துள்ளோம். அதனால், இவ்வியக்கம் என்றும் அழிவுறாது. இஃது இத்தாலியரை மேனிலைக்குச் கொண்டு வந்து கொண்டிருக்கின்றது. நாம் இந்த நான்கு ஆண்டுகட்குள் நமது சமூகத்துக்குப் படை ஒன்றை உதவியுள்ளோம். ஆனால், அதைப்பற்றி நீங்கள் பெருமையாகக் கருத வேண்டா. உங்கள் உதவியும் உழைப்பும் இன்றி அது யாது செய்ய இயலும்? உங்கள் பேராதரவு இருப்பின், நமது நாட்டுப்படை நாட்டின் உயிர் நாடியாக விளங்கும்.

❑❑❑

"நாம் முதலாளிகட்கும் தொழிலாளிகட்கும் சமமான உரிமைகளையும் கடமைகளையும் அளித்துள்ளோம். இச்சமநிலை இல்லாததாலேதான் உலகில் உள்ள வல்லரசுகள் ஆட்டங் கண்டிருக்கின்றன; நிலைமையைச் சீர்படுத்த முடியாது தத்தளிக்கின்றன. ஆனால், நாமோ இத்தாலியிற் புதிய சகாப்தத்தை உண்டாக்கி இருப்பதால், இவ்வதிசயமாறுதலைச் செய்திருக்கின்றோம். எத்தகைய மகத்தான காரியத்தையும் செய்ய ஒருமைப்பட்ட மனமே அவசியமானது. அம்மனம் நம்மிடத்தே இருத்தலால், நாம் ஒவ்வொரு காரியத்திலும் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்று வருகின்றோம். ஒழுக்கத்தின் விழுப்பத்தால்,

சுறுசுறுப்பு, வீரம், குதூகலம் முதலியன உண்டாகின்றன. இத்தாலியர் ஒழுக்கத்தோடிருப்பதால், இத்தகைய உயர் குணங்களைப் பெற்றுள்ளனர். இக்குணங்கள் மேலும் நிலைபெற்றிருக்க, வீரர்களே, நீங்கள் உங்கள் உதிரத்தையும் உயிரையும் இழக்கவும் தயாராக இருத்தல் வேண்டும்.”

❑❑❑

“நீங்கள் சமூகத்தினிடமிருந்து தோன்றுகிறீர்கள்; சமூகத்தினிடமே முடிகிறீர்கள். அத்தகைய சமூகம் செல்வப் பெருக்குடையதாகவும், செழிப்புள்ளதாகவும், வன்மையுள்ளதாகவும் இருப்பின், அதன் நன்னிலை மேலும் அபிவிருத்தி அடையும்; அத்தகைய அபிவிருத்தி உங்களுடையதே அன்றோ? அங்ஙனமே, சமூகம் சீர்குலைந்து வறுமை மிகுந்து ஒற்றுமையற்று இருப்பின், அதன் நிலை மேலும் சீர் குன்றிப் போகும்; அத்தகைய சீர்கேடும் உங்களுடையதே அன்றோ? இஃது ஓர் அசைக்க முடியாத சட்டமாகும். இஃது எல்லா நாடுகளிலும் எல்லாச் சமயங்களிலும் பொதுவானது.

❑❑❑

“தொழிலாளிகளே, உங்கள் தொழில், வாழ்க்கையில் மிக உயர்ந்தது; பெருந்தன்மை வாய்ந்தது; சிறந்த மத சம்பந்தமானது. நீங்கள் வாழ்க்கையையும் ஆன்மாவையும் தேச சரித்திரத்தையும் விட்டு விலகியிருத்தல் இயலாதென்பதை அறியுங்கள். நீங்கள் அங்ஙனம் விலகி இருக்க எண்ணுதல் உங்கள் தாயைப் பிரிந்திருக்க எண்ணுதலை ஒக்கும். விலகி இருத்தலை நீங்கள் விரும்பினும், விரும்பாவிடினும், நாம் அனைவரும் இத்தாலியர் என்பதையும் இத்தாலி நம்மைப் புன்முறுவலோடு நோக்கி நிற்பதையும் உணருங்கள்; நமது பழம்பெருமையை இப்புதிய சகாப்தத்தில் நிலைநாட்டுங்

கள். உங்கள் தொழில்களால் உங்கள் உழைப்பால் உங்கள் பெருமுயற்சியால் இத்தாலி ஐரோப்பிய நாடுகளில் தலைசிறந்து விளங்குதல் வேண்டும். இப்புதிய இத்தாலியின் பொருட்டு நீங்கள் அமைதியான தொழிலாளிகளாக வேலை செய்யும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். ஒவ்வொருவரது முயற்சியும் நாட்டு நிலையை உயர்த்துவதாகும். நான் ஒரு தொழிலாளியின் மகன்; உண்மைத் தேச பக்தரின் மகன். நான் உங்களை நல்வார்த்தைகள் கூறி ஏமாற்றுபவன் அல்லேன். நான் கடுமையான ஒழுங்கோடு நடப்பவன்; உங்களையும் அங்ஙனமே நடத்துபவன்; உயிர் நண்பர்களையும் கொடிய விரோதிகளையும் ஒழுங்கோடு நடத்துபவன். ஒழுக்கங் கெட்ட உயிர் நண்பனைவிட ஒழுங்கோடு நடக்கும் கொடிய பகைவனை யான் மனமார வரவேற்பவன். சுருங்கக் கூறின், இத்தாலிய நாடே எனது உயிர்; நான் பிறந்து வளர்ந்த தொட்டில்; என் இன்பப் பூங்கா. அதன் நன்மையே எனது நன்மை. அதன் முன்னேற்றத்துக்குப் பாடுபடுபவன் என் கொடிய விரோதியாயினும், என் உண்மைச் சகோதரனே. அவனே என் உயிர்த் துணைவன்.

❑❑❑

"நான்கு கோடி மக்களாகிய நாம் இக்குறுகிய ஆனால், மிகவும் அழகிய தீபகற்பத்தில் வசித்து வருகின்றோம். இதில் மலைகளோ, மிக்கிருக்கின்றன. அதனால், நாம் வசிக்கின்ற இடம் சிறியதாயுள்ளது. நம்மைச் சுற்றியுள்ள நாடுகளிலோவெனின், போதுமான ஜனத் தொகை இல்லை. நான்கு கோடி மக்கள் இச்சிறியதொரு தீபகற்பத்தில் இருப்பது வியக்கத்தக்கதே. இனி ஜனப்பெருக்கம் அவசியம் ஏற்படும். அப்பொழுது நாம் நமது நாட்டை விரிவுபடுத்த வேண்டி வரும்; நமது உயிரைத் துறந்தேனும், நாட்டை விரிவுப்படுத்தியே தீர வேண்டும்.

விரிவு என்னும் சொல் சிறப்பாக நாட்டு விரிவைக் குறிப்பதாயினும், பொதுவாக ஒழுக்கம், ஒற்றுமை, ஒழுங்கு இவற்றையும் குறிக்கின்றது. நாம் ஒவ்வொரு துறையிலும் விரிவடைந்தேயாகல் வேண்டும். நமது அரசாங்கம், இத்தாலியர் அயல்நாடுகளிற் குடிபுகுதலை அளவுப்படுத்தியுள்ளது. வெளிநாடு போகும் இத்தாலியர் ஒவ்வொருவரும் நம் சகோதரர் அல்லவா? ஆதலின், அவர் எங்குச் செல்லினும், அவரது நன்மை தீமைகள் நம்மவையே ஆகும். அவர் அரசாங்கத்தால் வெகு கவனத்தோடு பாதுகாக்கப்படுவர் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம்.”

❑❑❑

“நாட்டுப்பற்றும் இடைவிடா உழைப்பும் சலியா ஊக்கமும் மிகுந்த வீரமும் உடைய இத்தாலியச் சமூகத்தைக் கண்டு பிற வல்லரசுகள் பொறாமை கொள்கின்றன. அதனால், நாம் இடம் போதாது நாட்டை விரிவுப்படுத்த முனைவோமாயின், பெரும்போர் நிகழ்வது நிச்சயம். எனினும், அதனை யான் மனமுவந்து வரவேற்கின்றேன். ஏன்? நமது நாடு எவ்விதத்தும் விரிவடைந்தே ஆகல் வேண்டும். வேறு வழி இல்லை. ஒன்று நாட்டை விரிவாக்கி நாம் வாழ்தல் வேண்டும்; இன்றேல், போர் முனையில் ரோம வீரத்தை விளக்கமுறச் செய்து மகிழ்ச்சியோடு மடிதல் வேண்டும் இரண்டில் ஒன்று விரைவிற் செய்தே ஆகல் வேண்டும். தெய்வங்கட்கு உகந்த இடமாகப் புலவர்கள் வருணிக்கின்ற இவ்விட்டாலி, உண்மையில் தெய்வீகத்தன்மை வாய்ந்ததே. அடைதற்கரிய நாகரிகத்தை உலகத்துக்குக் காட்டி நின்ற ரோம இராச்சியச் சிறப்பியல்புகள் நமது ஆட்சியில் புத்துயிர் பெறுகின்றன. அவை என்றும் அழியா. உலகம் அநாகரிக இருளில் ஆழ்ந்திருந்த காலை, இத்தாலி, பழுத்த நாகரிகத்தில் பெருமையுற்றிருந்தது. அத்தகைய இத்தாலி எவ்

விதத்தும் விரிவடைந்தே தீரவேண்டும்; இத்தாலியச் சமூகமும் பெருகி வளர்தல் வேண்டும்."

□□□

"பாஸிஸ்டு இத்தாலி ஒரு போதும் போரை விரும்பாது; ஆனால் வந்த போரையும் விடாது. நாம் உடன்படிக்கைகளை அவ்வப்போது புதுப்பித்து வருதலே நாம் போரை விரும்பவில்லை என்பதை நிரூபிக்கின்றது போர் எனின். எத்தனை அரிய இத்தாலியச் சகோதரர்கள் உயிர்விட நேரிடும்! எவ்வளவு துன்பம் ஏற்படும்! எத்தனை குடும்பங்கள் ஆடவர் இன்றித் தவிக்கும்! போருக்குச் செலவழிக்கும் பணத்தை இத்தாலிய முற்போக்குக்குச் செலவழிப்பின், அம்முயற்சி எத்துணை நன்மை பயக்கும்!"

□□□

"ஆனால், 'போர் வேண்டா' என்று கூறிக் கொண்டிருக்கும் சர்வதேச சங்கம், 'சில நாடுகள் ஆயுதங்களை வைத்துக் கொள்ளலாம்; சில வைத்துக் கொள்ளலாகாது' என்று கூறுதல் எத்துணை அறிவீனம் ஆகும்! 'ஆயுதந் தாங்கியுள்ள நாடுகள் ஆயுதமற்ற நாடுகளை எதிர்க்கா' என்று எவரேனும் உறுதி கூற இயலுமா? இதுபோன்ற குழப்பங்கள் ஏற்பட்டு, ஐரோப்பா 1950 ஆம் ஆண்டுக்குள் மிக்க அல்லற்படும் ஆனால், இத்தாலி அமைதியாக இருந்து, தனது முன்னேற்ற வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கும். அவ்வாண்டுக்குள் இத்தாலி பூலோக சுவர்க்கமாக விளங்கும்; கிழக்கிலும் மேற்கிலும் உள்ள நாடுகள் தன்னைத் தரிசித்துச் செல்லும் சிறந்த நிலையில் இத்தாலி இலங்கும்."

□□□

"இத்தாலிய இளைஞர்களே, வாழ்க்கையின் மலர்ச்சியோடுள்ள நீங்களே நாட்டுச் செல்வர்கள்; இத்தாலியத் தாயீன்ற இன்பப் புலவர்கள். நாளை வரப்போகும் படையைவிட நீங்களே சிறந்த படை வீரர்கள். இந்நிமிட முதல் உங்கள் முழுக் கவனமும் இத்தாலியின் முன்னேற்றத்தில் முனைந்திருத்தல் வேண்டும்; நாட்டு நன்மையின் பொருட்டு நீங்கள் உயிரையும் தியாகஞ் செய்யச் சித்தமாக இருத்தல் வேண்டும். முயற்சி இன்றி போர் இன்றி தேச சரித்திரமும் அமையாது. உங்களுக்கு முன் மகத்தான வேலைகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றை உற்று நோக்குங்கள். நீங்கள் அவற்றை விருப்புடனும் ஒழுங்குடனும் செய்து முடித்தல் வேண்டும். உங்கள் வேலைகள் முற்றுப் பெறுமாயின், நமது தாய் நாடு, ஆ! காணத்தக்க ஒரு காட்சியாக இலங்கும்!"

"நாம் அனைவரும், ஒவ்வொரு செங்கல்லாக அடுக்கிக் கட்டடம் கட்டுவதைப்போல, ஒவ்வொரு சீர்திருத்தமும் விடாமற் செய்து நவீன இத்தாலியைக் கட்டி வருகின்றோம் என்பதை நீங்கள் உங்கள் நினைவில் இருத்துதல் வேண்டும்."

"என் அரிய இளைஞர்களே, நாளை உங்கள் கடமைகளை மறவாதீர்கள்; அவற்றை மன மகிழ்ச்சி யோடு செய்யுங்கள்; 'இன்னும் வேலையுள்ளதா?' என்று கேளுங்கள். உங்கள் கடமைகளை நீங்கள் செய்து முடித்தல் வேண்டும். நவீன இத்தாலியின் முற்போக்குக்கிணங்க, நீங்களும் நவீன இளைஞர்களாக உங்களை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும் நவீன இளைஞர் யாவர்? கடமை, ஒழுங்கு, ஆர்வம், வாழ்க்கையில் இன்பம், இராச பக்தி, உண்மை, வீரம் இவற்றை அணிகலன்களாக உடையவரே நவீன இளைஞர் ஆவர்.

"சர்வகலாசாலை இளைஞர்களே, இத்தாலிய நாட்டு இளஞ்சிங்கங்களே, ரோம ராச்சியத்தைப் பரப்பிய ஆயிரக் கணக்கான வீரர்கள் சர்வ கலாசாலை இளைஞர்களே, பாஸிஸ்டு இத்தாலியைச் சமீபத்தில் நிலைநாட்டியவர்களும் அம்முயற்சியிற் புன்முறுவலோடு இறந்துபட்ட வீரர்களும் சர்வகாலாசாலை இளைஞர்களே. சர்வகலாசாலை இளைஞர்களே இத்தாலியின் நவீன உயிர் நாடியாக இருப்பவர்கள். உங்கள் மீதே நாட்டுப் பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ளது. நாட்டை இந்நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் உங்கள் தோழர்களே. இப்பொழுது நாட்டை மேனிலைக்குக் கொண்டு வரக் கடமைப்பட்டவர்கள் நீங்களே. நேற்றைய தேச சரித்திரத்தையும் இன்றைய சரித்திரத்தையும் அறிந்துள்ள நீங்கள் நாளைய சரித்திரத்தைப் பொன்னெழுத்துகளாற் பொறியுங்கள். உங்கள் வீரச் செயல்களால் இத்தாலிய தேச சரித்திரத்திற் பொற்காலத்தை (Golden Era) ஏற்படுத்துங்கள். நீங்கள் உள்ளவரையிலும், சர்வ கலாசாலைகள் உள்ள வரையிலும், நமது சமூகம் இறவாது! இறவாது!! நமது சமூகம் அடிமையாவதும் இயலாது! இயலாது!! நாளை உள் நாட்டிலோ, வெளிநாட்டிலோ, போர் எழுமாயின், நீங்கள் சர்வ கலாசாலைகளைக் காலி செய்துவிட்டுப் போர்க்களத்தில் முன்னணியில் மனமுவந்து நிற்பீர்கள் என்பதை நான் நன்கறிவேன்.

"இளமை மிக்க அழகு வாய்ந்தது. அது, விஷயங்களை நன்கறியும் பேராற்றல் வாய்ந்தது; உலகின் இயலை உள்ளவாறு அறிவது! அது பயமற்ற மனத்தை உடையது; இறப்பை மதியாதது. இத்தகைய வியத்தகு இளமை வாய்ந்த இத்தாலியர்களே, ஒளி ததும்பும் எதிர்கால நிலையில் இத்தாலி உயர்வதை நோக்குங்கள். இவ்விருபதாம் நூற்றாண்டு, ரோமாபுரியையும் அதனைத் தலைநகராகக் கொண்ட நமது தாய்நாட்டையும் ஆர்வத்தோடு கண் இமைக்காது நோக்கும்படி செய்யுங்கள். இத்தாலி வாழ்க! இத்தாலியர் வாழ்க!!

# 18. அயல்நாட்டார் அபிப்பிராயங்கள்

அரசியல் உலகில் முசோலினி ஓர் அபூர்வ மனிதராக விளங்கி வருவதால், பல நாட்டுச் செல்வர்களும், பத்திரிகை நிருபர்களும், இராச தந்திரிகளும் இத்தாலியையும் முசோலினியையும் நேரே பார்த்துத் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளார்கள். அவற்றுள் சிலவற்றை நாம் அறிதல் அவசியமாகும்.

லேடி சேர்மேனாட்டு என்பவர் பின்வருமாறு கூறியுள்ளார்:

“இத்தாலியச் சர்வாதிகாரி முசோலினி வசித்து வரும் பலாசோ வெனிஜியா என்னும் மாளிகையில் ஒரு பெரிய அறையில் அவரது காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அதுபோன்ற காரியாலயம் ஒன்று உலகிலேயே இல்லை. அக்காரியாலயத்திலேதான் நான் அவரைச் சந்தித்தேன். நான் ஒரு பிரிட்டிஷ் மாது என்பதையும் இத்தாலியர் முற்போக்கைப் பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கு எழுத விரும்புவதையும் அவரிடம் அறிவித்தேன். உடனே அவர், ‘இத்தாலியர் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதை அவசியமாகத் தங்கள் நண்பர்க்கு அறிவியுங்கள். இத்தாலியரின் உடல் நிலையிலும் ஆசாரங்களிலும் பெருமாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. வழிச் சாலைகள், கட்டடங்கள் முதலியவற்றைப் பிறரும்

திருத்தியமைக்க இயலும். ஆகவே, இத்தாலியர் ஒழுக்கத்தை விருத்தி செய்யவே நான் முயன்று வருகிறேன். ஒவ்வோர் இத்தாலியனும் கட்டுத் திட்டங்கட்கு அடங்கி அமைதியாக வாழ வேண்டுமென்பது எனது விருப்பம். இத்தாலியர் வீண் பேச்சுப் பேசுவதை நான் வெறுக்கிறேன். பத்து வார்த்தைகளிற் பேசி முடிக்க வேண்டுவதை இருபது வார்த்தைகளிற் பேசுவோனைச் சுட்டுக்கொல்ல வேண்டுவதுதான். நாற்பது வார்த்தைகள் உபயோகிப்பவனைத் தூக்கிலிட்டுத்தான் கொல்ல வேண்டும். இன்றைய இத்தாலியர்கள், 'நாங்கள் இத்தாலியர்கள்' என்று பெருமிதத்தோடு தங்களைக் கூறிக் கொள்ளுகிறார்கள். குழந்தைகள் யாவும் வெகு கவனத்தோடு வளர்க்கப்படுகின்றன. இத்தாலியர் உடலமைப்பும் விரைவாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. ஒலிம்பிக்குப் பந்தய விளையாட்டிலும் இத்தாலியர் வெற்றி பெற்று வருகின்றனர். இளைஞர்க்கு விளையாட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. கிராமங்கள் தோறும் கட்டாயக் காற்பந்து ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எளிய கர்ப்பவதிகட்கு உணவும் உடையும் வைத்திய உதவியும் இலவசமாக அளிக்கப்படுகின்றன' என்றார். அப்போது அவர் முகம் மலர்ந்து காணப்பட்டது. அவர் மாசற்ற மனிதர். இத்தாலிய முன்னேற்றமே அவரது வாழ்க்கையின் இலட்சியம். அப்பெரியாரால் இத்தாலி மேலும் சிறப்படையும் என்பது உறுதி."

இத்தாலிக்கு இருமுறை சென்று மீண்ட ஜேம்ஸ் டக்ளஸ் என்னும் ஆங்கிலேயர் பின்வருமாறு கூறியுள்ளார்:

"அரசியலில் இளைஞர்கள் தலைமை வகித்து வருகின்ற நாடு இத்தாலி ஒன்றுதான். வயோதிகரே தலைமை வகித்து அரசாங்கத்தை நடத்த வேண்டுமென்னும்

புராதனப் பழக்கத்தை இத்தாலியர் தகர்த்தெறிந்துவிட்டனர். இளமை என்பதே இத்தாலிய மக்களின் மதமாக இருந்து வருகிறது. இளைஞரது அரசியலையே இத்தாலியரும் விரும்புகின்றனர்; இளமைக் கவிகளையே பாடுகின்றனர். எங்கும் இளமையின் மணமே வீசுகின்றது. இத்தாலிய வாலிபர்களது உடல் வன்மை புகழத்தக்கதாக உள்ளது. இத்தாலிய இளைஞர்கள் தலைநிமிர்ந்து நடக்கிறார்கள்.

"சாலைகளை அமைத்தல், துறைமுக வேலைகள், அரசாங்கப் பொதுக் கட்டடங்களைக் கட்டுதல், இஞ்சினீயரிங்கு வேலைகள், நிலங்களைத் திருத்திப் பண்படுத்தல், விவசாய முன்னேற்ற வேலைகள், மரஞ் செடிகளை வளர்த்தல் முதலியவற்றில் வேலை பெற்றோர் சேர்ந்து உழைத்து வருகின்றனர். தொழிலாளரிடம் முசோலினி மிகுந்த மதிப்புக் காட்டி வருகின்றார். சிற்பிகளுக்கும் கட்டட வேலையாட்களுக்கும் ரோமாபுரியில் போதிய அளவு வேலை கொடுக்கப்பட்டு இருக்கின்றது. அங்குப் பெரிய வெளியொன்று செப்பனிடப்படுகிறது. அவ்வெளியைச் சுற்றிலும் சிறந்த வீரர்களின் உருவச் சிலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அவை சலவைக் கற்களாற் செய்யப்பட்டவை. அச்சிலைகளில் இளமையின் வீரமே திகழ்கின்றது."

ஸ்பெக்டேட்டர் பத்திரிகையின் சொந்தக் காரராகிய சர் எல்லின் ரேஞ்சு என்பவர் முசோலினியைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்:

"முசோலினியைச் சந்திக்கக் குறிப்பிடப்பட்டிருந்த நாளில் என் மனம் பலவாறு எண்ணமிட்டது. எங்குப் பார்த்தாலும் சுவர்களில் அவரது முகமே காணப்பட்டது. கடைகளிலும், டிராம் வண்டிகளிலும், ஏன்? ஒவ்வொரு கிராமக் குடிசையிலும் அவரது உருவப்படம் தொங்கிக்

கொண்டிருக்கின்றது. அவர் முகம் என்னையே உற்று நோக்கிக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றியது. நான் மாலை ஆறுமணியடிக்க மூன்று நிமிடம் இருந்தபோது அவரது அரண்மனை வாயிலினுள் நுழைந்து சென்றேன். அங்கு நின்ற காவலர் பாஸிஸ்டு முறைப்படி வணக்கஞ் செலுத்தினர். நானும் அங்ஙனமே பதில் வணக்கஞ் செலுத்தினேன்; முசோலினியைச் சந்திப்பதற்குரிய அனுமதிச் சீட்டை அவர்களிடம் காட்டினேன். உடனே ஒருவர் என்னை மாடிப்படி வழியாக அழைத்துச் சென்றார். அங்குப் பாஸிஸ்டு முறைப்படி பலர் வணக்கஞ் செலுத்தினர். சலவைக்கல் மேசை ஒன்றன் மீது எனது தொப்பி வைக்கப்பட்டது. நான் வேறோர் இடத்துக்கு அழைத்தேகப் பட்டேன். அங்கிருந்த பலர் எனக்குப் பாஸிஸ்டு முறையில் வணக்கஞ் செலுத்தினர்.

"நான் இருந்த அந்த அறை மிகுந்த சிறப்போடு திகழ்ந்தது. சுருங்கக் கூறின், நெப்போலியனும் அத்தகைய ஆடம்பரமானதோர் அறையை வைத்திருந்திருக்க இயலாது எனக் கூறலாம். அவ்வறையில் முசோலினியைப் பேட்டி காண என்னைப் போல ஒருவர் வந்திருந்தார். அவர் ஓர் இத்தாலியக் குத்தகைக்காரர். குத்தகை வேலையைக் குறிப்பிட்ட காலத்துக்குள் செய்து முடிக்காததால், அவர் முசோலினியைச் சந்திக்க ஏற்பாடாயிற்று. இங்ஙனம் குறிப்பிட்ட வேலையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்காதிருத்தல் முசோலினி ஆட்சியில் பெரியதொரு குற்றமாகக் கருதப்படுகின்றது. அந்தக் குத்தகையாளர் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டார். பின், நாற்பது நிமிடங் கழிந்ததும், நானும் அழைத்துச் செல்லப்பட்டேன். பல் நோயாளி வைத்தியரிடம் செல்லுகையில் எவ்வித நடுக்கத்துடன் செல்வானோ, அவ்வித நடுக்கத்துடன் நான் முசோலினியைக் காணச் சென்றேன். ஏவலாளன் ஒரு பெரிய

கதவைத் திறந்து, 'இதன் வழியாகச் செல்லுங்கள்' என்று கூறி, நான் உள்ளே நுழைந்ததும், கதவை வெளிப்புறம் மூடிக் கொண்டான்.

"நான் பெரியதோர் அறையுள் நுழைந்தேன்; அதுபோன்ற பெரிய அறையை நான் கண்டதே இல்லை. அங்கிருந்த விளக்குகள் போதிய வெளிச்சத்தோடு இல்லை. அவ்வறையின் மூலையொன்றில் ஒரு மேசை இருந்தது. நான் அதன் அருகில் வெண்ணிற உடை அணிந்த ஓர் உருவம் நின்றிருக்கக் கண்டேன். நான் இடம் விட்டுப் பெயர்ந்து நடந்தேன். அமைதி நிலவிய அவ்வறையில் எனது காலடிச் சத்தமே கேட்டது. மேலும் நடந்து சென்றேன். படக் காட்சியில் நடைபெறும் சம்பவம்போல நான் அவ்வுருவத்தை அண்மினேன்; அசைவற்றிருந்த அவ்வுருவத்துக்கு ஒரு கெஜ தூரத்தில் நின்று, அதனை வணங்கினேன். உடனே அவ்வுருவம் தனது கரத்தை நீட்டியது. நான் அப்போது அவ்வுருவத்தை உற்று நோக்கினேன். ஆ! உலகம் பலவாறு கூறுகின்ற மகாவீரரான முசோலினி சாதாரண உருவில் என்முன்னே, என் கையைப் பற்றிக்கொண்டு நிற்கக் கண்டேன். அவரே முதலிற் பேசினார்; எனது ஸ்பெக்டேட்டர் பத்திரிகையைப் பற்றி விசாரித்தார்.

"நாங்கள் இருவரும் பிரஞ்சு பாஷையில் பேசிக் கொண்டிருந்தோம். நான் ரோமாபுரியிலும் இத்தாலி யிலும் அவர் செய்துள்ள ஆக்க வேலைகளைப் பற்றிப் புகழ்ந்து கூறினேன். அவர் ஒன்றும் பேசாது கேட்டுக் கொண்டிருந்தார். அவர் கண்கள் மட்டும் பிரகாசித்தன. அப்போதவர் ரோமாபுரியின் எதிர்கால நிலைமையை விளக்கிக் கூறினார். நான் அப்பொழுதுதான் முத்துப்போன்ற அவரது பல்வரிசையைக் காணும்பேறு பெற்றேன்.

"ரோமாபுரியில் மகத்தான வேலைகள் செய்யப்படுகின்றன. 'இன்னும் பதினைந்தாண்டுகட்குள் என் வேலைத் திட்டங்கள் முற்றுப்பெறும். நேர்ப்பாதை அமைக்க முடியாதவாறு குறுக்கிட்டுக் கிடக்கும் கட்டடங்கள் யாவும் அகற்றப்பட்டுவிடும். அந்நிலையில் ரோமாபுரி பொன்னாடாக மிளிரும். ஜனத்தொகையும் இருமடங்காகும்' என்று முசோலினி என்னை நோக்கிக் கூறுகையில், அவர் கண்கள் மீண்டும் பிரகாசித்தன. அவரது மனம் ரோமாபுரியின்மீதும் இத்தாலியின் மீதுமே சென்று கொண்டிருக்கிறது.

"பின்னர், இங்கிலாந்தைப் பற்றிப் பேசுகையில் அவர் ஆங்கிலத்திற் பேசினார்; ஜெர்மனியைப் பற்றிப் பேசுகையில் ஜெர்மன் பாஷையிற் பேசினார். எங்கள் பேச்சு முற்றுப் பெற்றதும் நாங்கள் அறையின் கதவை அடைந்தோம். கதவின் அருகில் வந்ததும் அவர் என்னுடன் கை குலுக்கினார். அத்துடன் எனது பேட்டி முடிந்தது. முசோலினி உண்மையான ஒரு வீரரே. இதிற் சிறிதும் ஐயம் இல்லை. ரோமாபுரியின் மீதும் இத்தாலியின் மீதும் அவர் அளவற்ற அன்பு கொண்டிருக்கிறார்."

கியூசிப்பி மெட்டிராசி என்னும் கனவான் ஒருவர் முசோலினியைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்:

"இக்காலத்தில் உலகில் பிரபலம் பெற்றுள்ள இராச தந்திரிகளில் முசோலினி தலைசிறந்தவர் என்பதை எவரும் மறுத்தல் இயலாது. அவர் இத்தாலியைக் காப்பாற்றியதே யன்றி, உலக சமாதானத்தை நிறுவவும் மிகவும் உதவி புரிந்துள்ளார். போப்புக்கும் இத்தாலிய அரசாங்கத்துக்கும் நெடுங்காலமாக இருந்து வந்த பிணக்கு முசோலினியாலே தான் முடிவுற்றது. சமீபத்தில் நடந்த நான்கு வல்லரசுகள் ஒப்பந்தம் மிகவும் சிறந்ததாகும். அவ்வொப்பந்தத்தால் ஐரோப்பிய சமாதானம் உறுதியாக நிறுவப்பட்டது.

அவ்வொப்பந்தம் முசோலினியின் தனி முயற்சியால் ஏற்பட்டதென்பதை உலகம் உணரும். சென்ற ஆண்டு அவர் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றில், ஐரோப்பிய சமாதானம் இத்தாலியில் உதயமாகும் என்பதைக் குறிப்பிட்டார். அஃது



இப்பொழுது உண்மையாகிவிட்டது. எல்லா நாடுகளும், சமாதானத்தை நிறுவன முசோலினிக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளன. முசோலினி போன்ற வீரரே ஐரோப்பிய சமாதானத்தை நிலைநாட்ட வல்லவர். அவரது பேராற்றலை அளவிட்டறிய இஃதொன்றே போதுமானது அன்றோ?"

டாக்டர் கலீத் ஷெல்ட்ரெக்கு என்பவர் 1933 ஆ ஜுன் மீ கொழும்பு நகரில் இத்தாலிய ஸ்தானீகர் தலைமையின் கீழ்ப் பின்வருமாறு பேசினார்:

"நான் ஒரு ஆங்கிலேயன் என்ற முறையில் பிரிட்டனுக்கு இது சமயம் ஒரு முசோலினியே தேவை எனக் கூறுகிறேன். முசோலினி போன்றவராலேதான் ஒவ்வொரு நாடும் சீர்படும். அவர் சுயநலமற்றவர்; நாட்டு முன்னேற்றமே அவர் விரும்புவது. அதுவே அவரது தெய்வம்; அவரது உயிர். அவர் தோன்றியிராவிடின், இத்தாலி என்னுமொரு நாட்டை ஐரோப்பியப் படத்திற் பார்க்க இயலாமற் போயிருந்திருக்கலாம். அவரது அரிய கட்சியால் இப்போது இத்தாலி முன்னேற்றம் பெற்று வருகின்றது. முசோலினி சமாதானத்தையே விரும்புகின்றார். அவர் போலும் வீரர்கள் ஒவ்வொரு நாட்டிலும் இருந்தால், உலகம் சமாதானத்திலேயே நிலைத்திருக்கும்."

# 19. இல்வாழ்க்கை

பெனிட்டோ முசோலினியைப் போலவே அவர் மனைவியார் டோனா ரகேல் என்பவரும் ஏழைக் குடும்பத்திற் பிறந்தவர்; முசோலினி பிறந்த கிராமத்திலேயே பிறந்தவர். அவ்வம்மையார் சிறு குழந்தையாக இருந்த போதே தந்தையாரை இழந்தார். அதனால், அவர் தாயார் உடல் வருந்த உழைத்து அவரை வளர்த்து வந்தார். ரகேல் சிறுமியாயிருந்த போதே தம் அன்னையாருடன் வயல்களில் கூலிவேலை செய்து வந்தார். இரவில் ஒரு சிறிய குடிசையில் உறங்குவதும், காலை முதல் மாலைவரை வயல்களில் வேலை செய்வதுமாக அவ்விருவருங் காலங் கழித்து வந்தனர். அக்காலத்தில் ரகேல் அம்மையார் பாதரட்சை வாங்கி அணிந்து கொள்ளவும் சக்தியற்றிருந்தார். ரகேல் அம்மையார் ஏழு வயதடைந்ததும், அவர் தாயார் அவரைப் பள்ளிக்கு அனுப்பினார். பள்ளியில் இரண்டு ஆண்டுகளே படிக்க முடிந்தது. அதன் பின்னர் அவ்வம்மையார் வறுமைக் கொடுமையால் தம் தாயாருடன் வேலை செய்து வந்தார்.

ரகேல் அம்மையார் வேலையை மகிழ்ச்சியுடன் செய்து வந்தார்; சோம்பல் என்பதை அறியார். அவரது உழைப்பின் திறனை இன்றும் அக்கிராமவாசிகள் புகழ்ந்து பேசுகின்றார்கள். அவ்வம்மையார் அக்கிராமத்தில் வசித்தபோது முசோலினி அவரைச் சந்தித்திலர். முசோலினி

சுவிட்ஜர்லாண்டிலிருந்து நாடு கடத்தப்பட்டுத்தமது கிராமத்துக்கு அருகே உள்ள பிரிடாப்பியோ நகரை அடைந்தார்; அங்கு இருந்த ஒரு சாப்பாட்டு விடுதியில் தங்கினார். அவ்விடுதியில் அப்போது ரகேல் அம்மையார் வேலை செய்து வந்தார். முசோலினி அவரை அங்குத்தான் முதன் முதலிற் சந்தித்தார்; உடனே அவர்மீது காதல் கொண்டார். ரகேல் அம்மையாரும் அவரைப் பெருமதிப் போடும் உள்ளன்போடும் நேசித்தார். இதனை உணர்ந்த அங்கிருந்தோர் பலர் ரகேல் அம்மையாரை, 'முசோலினி ஒரு பெருங் கிளர்ச்சிக்காரர்; அவரை மணக்க வேண்டா' எனக் கூறித் தடை செய்தனர். முசோலினியின் தந்தையாரும் அவ்வம்மையாரை நேரில் வரவழைத்துத் தம் மகனாரை மணந்துகொள்ள வேண்டா என அறிவுறுத் தினார். எனினும், ரகேல் அம்மையார் முசோலினியையே விரும்பி மணந்து கொண்டார்; இன்பத்திலும் துன்பத்திலும் அவரையே தம் காதலராகக் கொண்டார்.

மணமான பின்னர் முசோலினி தம் மனைவி யாருடன் ஆஸ்ட்ரியாவை அடைந்தார்; அங்கு ஏற்பட்ட குழப்பத்தில் உடனே ஆஸ்ட்ரியாவை விட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டார். ஆகவே, அவர் தம் மனைவியாருடன் இத்தாலி திரும்பினார்; மிலான் நகரில் ஒரு சிறு வீட்டிற் குடிபுகுந்தார். அக்காலத்திலே தான் அவர் பல இன்னல்கள் அடைய வேண்டியிருந்தது. ஐரோப்பியப் பெரும்போர் தொடங்கியது. முசோலினி போர் வீரராக மாறிப் போர் முனைக்குச் சென்றார். அக்காலங்களில் ரகேல் அம்மையார் மனந் தளராது தமது வாழ்க்கையைச் சிக்கனமாக நடத்தி வந்தார். கணவர் சிறை சென்றிருந்த காலத்தும், அவர் கணவரை வெறுத்திலர்; அதற்குப் பதிலாகக் கணவரை உள்ளன்போடு நேசித்துப்

பூசித்து வந்தார். மிலான் நகரத்திலேயே அவர் எல்லாக் குழந்தைகளையும் பெற்றார்.

முசோலினி பாஸிஸ்டு அரசாங்கத்தை இத்தாலியில் தாபித்துச் சர்வாதிகாரியாக ரோமாபுரிக்குச் சென்றபோதும், ரகேல் அம்மையார் மிலான் நகரிலேயே இருந்தார்; இத்தாலிய அரசியல் விஷயங்களில் தமது மனம் போலச் சீர்திருத்தங்களைச் செய்யும்படி தம் கணவரை விட்டுவிட்டார்; தம் கணவரின் அரசியல் விவகாரங்களில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை.

உலகெலாம் ஒப்பப் புகழ இத்தாலியின் சர்வாதிகாரியாக இருந்து வரும் மகாவீரரான முசோலினியின் அரிய மனைவியார், ஏனைய தலைவர்களின் மனைவிமாரைப் போல வெளி உலகில் தலைகாட்டுவதில்லை. முசோலினியும் தன் மனைவியாரைப் பகிரங்கமாக வெளியுலகில் அழைத்துவந்ததுமில்லை. உலகில் உள்ள பெரிய இராசதந்திரிகள், பத்திரிகை நிருபர்கள், சிறந்த யாத்திரீகர்கள், அரசர்கள் முதலியவர்கள் முசோலினியைச் சந்தித்துப் பேசுகின்றார்களே அல்லாமல், அவர் ஆருயிர் மனைவியாரைக் கண்டதில்லை; அவரைப் பற்றிக் கேள்விப்பட்டதும் இல்லை. முசோலினி எங்கும் தம் மனைவியாரை அழைத்துச் சென்றதும் இல்லை; பேசிய இடங்களில் அவரைப் பற்றி ஒரு வார்த்தை பேசியதும் இல்லை.

உலகப் புகழ் வாய்ந்த முசோலினியின் மனைவியார் அந்தப்புர வாழ்க்கை நடத்தி வருதல் பேராச்சரியந் தருவதொன்றாம். இதற்குக் காரணம் யாதாயிருக்கும்? இக்காதலர் வாழ்க்கையில் மர்மம் ஏதேனும் உண்டோ? இல்லை. முசோலினியைப் பற்றி அறிந்துள்ள இத்தாலிய

மக்கள் அவர் மனைவியாரைப் பற்றியும் நன்கறிந் துள்ளார்கள். அவ்வம்மையாரிடம் நற்குணங்கள் ஒருங்கே குடி கொண்டுள்ளன. அவர் ஓர் உண்மைப் பெண்மணி



செய்ய வேண்டுவதைச் செய்து வருகின்றார்; மிலான் நகரில் தம் பிள்ளைகளுடன் இல்லற வாழ்க்கை நடத்தி

வருகின்றார். அவருக்கு வேறு கவலை இல்லை. தம் பிள்ளைகளைப் பாதுகாத்தலும் கணவர்க்கேற்ற காரிகையாக இருத்தலுமே அவர் வேலைகளாகும். இவ்விரண்டினையே அவர் மகிழ்ச்சியோடு செய்து வருகின்றார். அவர் அரசியல், பொருளாதார விஷயங்களில் தம் கவனத்தைச் செலுத்தியதில்லை; கடல் கடந்து காணச் செல்லும்பேறு பெற்றுள்ள தம் காதலரை அவர் ரோமாபுரிக்குச் சென்று பார்ப்பதுமில்லை. தாம் ரோமாபுரிக்குச் சென்று தம் கணவரின் அரிய நேரத்தைக் கொள்ளை கொள்வது கூடாதென்பதே அவரது எண்ணம். முசோலினி ரோமாபுரியில் தமதரண்மனையில் சில வேலையாட்களோடு தனியே வசித்து வருகிறார்.

ரகேல் அம்மையார் தம் கணவரிடம் நீங்காப் பற்றுடையவர்; சிறந்த பத்தினியார். அங்ஙனம் இருந்தும், அவர் ஏன் முசோலினியுடன் ரோமாபுரியில் இருத்தல் கூடாது? 'நாம் கணவரோடு இருப்பின் ஒரு நாளிற் சில மணி நேரத்தையேனும் நம் கணவர் வீட்டில் கழிக்க நேரும். அந்நேரத்தையும் வீணிற் கழிக்காமல் அவர் இத்தாலியின் முன்னேற்ற வேலைகளைக் கவனிக்கட்டும். இத்தாலியின் முன்னேற்றமே பெரிது. கணவரது அரிய நேரத்தைக் காதலி கொள்ளை கொள்வது தவறு' என்பதே அவ்வம்மையாரது சிறந்த கருத்து. இப்பெரு நோக்கத்தாலேதான் அவர் தம் அரிய பிள்ளைகளோடு மிலான் நகரில் வாழ்ந்து வருகின்றார்.

பிறநாட்டுப் பெண்மணிகள் ரகேல் அம்மையாரது செய்கையைக் கண்டு ஏளனம் செய்யக் கூடும். ஆனால், ரகேல் அம்மையார் ஓர் உண்மை இத்தாலியன் மனைவி இருக்க வேண்டும். இலட்சணத்தைக் கூறாமல், தம்

செயலில் நடத்திக் காட்டி வருகின்றார். அவர் ஆடம்பர வாழ்வை விரும்புவதில்லை; வீணான கூட்டங்கட்கும் நாடகங்கட்கும் வேடிக்கைகட்கும் செல்வதில்லை; தமது இல்லத்தைத் தூய்மையான கோவிலாக மாற்றிக் கொண்டிருக்கிறார்; தம் குழந்தைகள் என்னும் செல்வத்திற் புரண்டு கொண்டிருக்கிறார்; கணவரது அன்பு என்னும் உலகில் வசித்துக் கொண்டிருக்கிறார். இத்தகைய வாழ்க்கையே ஓர் உண்மை வீரன் மனைவி நடத்த வேண்டுவது.

# 20. குணாதிசயங்கள்

முசோலினியின் வெளித் தோற்றம் கம்பீரமானது. இவர் பருத்து உருண்டு திரண்ட உடற் கட்டுடையவர். இவர் விழிகள் எதிரே நிற்பவர் மார்பை ஊடுருவிச் செல்லுகின்றனவோ என்று அதிசயிக்கத் தக்க ஒளி பொருந்தியவை. பாஸிஸ்டு இயக்கம் வன்மை வாய்ந்தது என்பது அதன் தலைவராகிய முசோலினியைக் காண்போர்க்கு நன்கு விளங்கும்.

சிறப்பாக இவரிடம் காணப்படும் தளரா ஊக்கமும் திடச் சித்தமுமே இவருடைய குணாதிசயங்களில் முன் வைத்துக் கூறத்தக்கவை. 'தீர்மானங்களைவிடச் செய்கையே சிறந்தது; கோட்பாடுகளைவிட முடிவுகளே சிறந்தவை' என்பனவே இவர் கொள்கைகள். இவர் வீண் பேச்சுகளையும் கூட்டங்களையும் மகா நாடுகளையும் அறவே வெறுப்பவர்; செய்கையே சிறந்ததென்பவர்; நினைத்ததை உடனே நிறைவேற்றிக் காட்டுபவர்; உலகில் பல சீர்திருத்தக்காரர்கள் தோன்றினார்கள். அவர்கள் தங்கள் கொள்கைகளைப் பரப்பாமல் அவற்றுக்கு எதிரிடையாக இருந்தவற்றையே கண்டித்துப் பேசி மறைந்து விட்டார்கள். ஆனால், முசோலினி தம் கொள்கைகளிலேயே கவனத்தைச் செலுத்துபவர்; அவற்றைப் பரப்புவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பவர்; தமக்கு எதிரான தடைகளைக் கண்டு இவர் அஞ்சுவதில்லை. இவர் அவற்றைத் தகர்த்து வழியுண்டாக்கி, மேலும் விரைந்து முன்னே சென்று கொண்டிருக்கின்றார். இவர் தமது சக்தியில் அதிக

நம்பிக்கை கொண்டவர். இவ்வுலகில் மனிதனால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை என்பதே இவரது துணிபு. இத்துணிபே இவரது வெற்றிக்குக் காரணமாகும்.

தமது தாய்நாட்டை மேனிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்பது இவரது நோக்கமேயன்றித் தாம் பெரிய நிலையில் இருத்தல் வேண்டும் என்பது அன்று. அந்நோக்கம் இருந்திருப்பின், இவர் வெகு எளிதில் இத்தாலிய அரசராகவே மாறி இருக்க இயலும்; சட்டசபை யையும் கலைத்திருக்கக் கூடும்; மதத்தையும்அடியோடு ஒழித்திருக்கக் கூடும். இவற்றுள் எதனையும் செய்யாமல், இவர் பிரதம மந்திரியாராகத் தமது பதவியை ஏற்றுக்கொண்டது இவரது நாட்டுப்பற்றை நன்கு அளந்து காட்டுகின்றது.

இவர் தலைமைப் பதவியை அடைந்ததும் பெருமிதங் கொண்டு தம் விருப்பம் போல அரசியலை நடத்தாமல், தம் கட்சியையும் கட்சித் தலைவர்களையும் பாதுகாத்து, அவர்களைக் கலந்து காரியங்களைச் செய்து வருதல் இவரது சுயநலமற்ற தன்மையைத் தெள்ளெனத் தெரிவிக்கின்றது. இத்தகைய செயலால், இவருக்குப் பின்னும் பாஸிஸ்டு இயக்கம் இருந்து வருமென்பதை யும் பாஸிஸ்டு ஆட்சி நிலவும் என்பதையும் நன்கறியலாம். முசோலினி, தமக்குப் பின்னர்ப் பாஸிஸ்டு அரசியலை நடத்துவதற்குத் தம் கூட்டாளிகட்கு இப்பொழுதிருந்தே பயிற்சி அளித்து வருகின்றார்.

முசோலினி பொதுப்பணத்தை மரியாதையாகப் பார்க்கிறார். இவர் விரும்பினால், பெரிய கோடீஸ்வரர் ஆகலாம். ஆனால், இவர் தமக்கென ஒரு செப்புக் காசையும் சேர்த்திலர். இவருடைய கொடிய பகைவரும், ‘இவர் அரசியற் கொள்ளைக்காரர்’ என்று குற்றஞ் சாட்டத்

துணியார். இவ்வாண்டு இவர் வியாபார மந்தத்தைச் சமாளிப்பதற்காக அரசாங்க உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தில் குறைவு ஏற்படுத்தி உள்ளார். தமது சம்பளத்திலேதான் இவர் மிகுதியான குறைவை உண்டாக்கிக் கொண்டார். இத்தகைய தலைவர் அல்லரோ உண்மைத் தலைவர்!

முசோலினி பொறுமைக்கிருப்பிடமானவர். இவர் தம் பகைவரிடம் பொறுமையாக நடந்து கொண்டார். மாட்டியோட்டியின் கொலை வழக்கில் ஏற்பட்ட கலவரத்தின்போது முசோலினி போதுமான பொறுமையைக் காட்டியதால், வெற்றி பெற்றார். இன்றேல், பாஸிஸ்டு அரசாங்கமும் பாஸிஸ்டு இயக்கமும் ஒழிந்திருக்கும். இவரது பொறுமை அளவிடற்கரியது. இவர் பகைவரிடத்தும் பெருந்தன்மையாக நடந்து கொள்பவர். இவர், பிரதம மந்திரியார் ஆனதும், தம் பகைவரை அடியோடு ஒழித் திருக்கக் கூடும். பாஸிஸ்டு வீரர்களையும் அமைதியாக இருக்குமாறு கட்டளையிட்டுத் தம் பகைவரை மரியாதையோடு நடத்திய இவரது பெருந்தன்மையை என்னெனப் புகழ்வது! மந்திரி சபை அமைத்தபோது இவர், எல்லாக் கட்சியினரையும் அதிற் சேர்த்துக் கொண்டார். வேறொரு கட்சித் தலைவன் இங்ஙனம் செய்திருப்பானா என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள்.

'தன் கையே தனக்கு உதவி' என்னும் சிறந்த வாக்கியத்தில் முசோலினி எல்லையற்ற நம்பிக்கை கொண்டவர். இவர் இதனை மெய்ப்பித்தும் காட்டிவிட்டார். இன்று ஒவ்வோர் இத்தாலியனும் இதனைத் தனது அனுபவத்தில் அறிந்து வருகின்றான்; அதனால், சுயமரியாதை வீரனாக விளங்குகின்றான். இன்று நான்கு கோடிக்கு மேற்பட்டவராகவுள்ள இத்தாலியர் அனைவரும் முசோலினியின் தோழராகத் திகழ்கின்றனர்; இவரைத் தம் இரட்சகராக மதிக்கின்றனர்.

சில மாதங்கட்கு முன் ஓர் ஆங்கிலப் பெண்மணி இத்தாலியில் ஒரு கடிகாரம் வாங்கினாள். அது பயனற்றதென்பதைக் கண்ட அவள், சினங் கொண்டு, அவ்விஷயத்தை முசோலினிக்கு அறிவித்தாள். உடனே முசோலினி அவளுக்கு அன்பு கனிந்த கடிதம் ஒன்றெழுதித் தமது நாட்டு வியாபாரி செய்த பிழையை மன்னிக்கும்படி வேண்டினார். இப்பரம புருஷர் அவள் வாங்கிய கடிகாரத்தின் விலையைத் தமது பணத்திலிருந்து அவளுக்கு அனுப்பி வைத்தார்; அவளை ஏமாற்றிய இத்தாலிய வியாபாரியைக் கடுமையாகத் தண்டித்தார். இத்தகைய பெரியாரைப் பற்றி நாம் யாதென்றறைவது!

சுருங்கக்கூறின், இத்தாலியைக் காக்கவே இறைவர் முசோலினியைத் தோற்றுவித்தார் என்னலாம். இவர் இத்தாலிக்குச் செய்த சேவைகள் - இன்றும் செய்து வருகின்ற சுயநலமற்ற சேவைகள் . பொன்னே போலப் போற்றத்தக்கவை. இவரது சிறந்த நாட்டுப்பற்றை இன்று ஒவ்வோர் இத்தாலியனும் பகிர்ந்து கொண்டு விளங்குகின்றான். முசோலினியைப் புகழாத இத்தாலியன் இல்லை. முசோலினி இத்தாலியின் இரட்சகராக இலங்குகின்றார்.

பலவிதக் குழப்பங்களால் அல்லற்படும் இற்றைய வல்லரசுகள் தங்கள் நிலைமைகளைச் சரிப்படுத்த முசோலினி போன்ற வீரர்கள் தேவை என வாய்விட்டுக் கூவுகின்றன என்றால், மகாவீரரான முசோலினியின் மனிதத் தன்மையையும் வீரத்தையும் ஆளுந் திறமையையும் இராச தந்திரத்தையும் என்னெனப் புகழ்வது!

# முசோலினி



டாக்டர் மா. இராசமாணிக்கனார்

முல்லை

பதிப்பகம்